279

"Tamil Arasu" Rgd. M. No. 2559.

279

தமிழரசு

20 APR 1933

2423

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

ஸ்ரீமுக ஞூ சித்திரை மீ 3 உ
1933-ஆம் ஞூ ஏப்ரல் மீ 15 உ

மலர் 4. இதழ் 4.

ஆசிரியர் :
டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

வருட சந்தா
உள் நாடு ரூபா 1. வெளி நாடு ரூபா 2.
தனிப்பிரதி அணா 2.

பிரசுராலயம்:
31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

பொருள் அடக்கம்

1. கடவுள் வணக்கம் ... 193
2. 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' ... 194
3. 'தமிழரசு' புது வருஷ வாழ்த்து ... 197
4. தனவணிகர் துயரம் ... 198
5. பத்திரிகையை ஏன் ஆதரிக்க வேண்டும்? ... 200
6. இயற்கை இன்பம் ... 203
7. அருள் பெற இரங்கல் ... 209
8. ஒவ்வொருவரும் அறிய வேண்டியவை ... 211
9. பாரதியார் ... 212
10. தமிழ் நாடக நிலை ... 217
11. குழந்தை வளர்ப்பு ... 219
12. ஸ்ரீ மேஹர் பாபாஜியின் பொன் மொழிகள் ... 223
13. மரணத்திற்குப் பின் மனிதர் நிலை ... 225
14. 'தாமரைக்குச் சேறு, ரோஜாவுக்கு முள்' ... 231
15. தாசிகளும் தாசி காந்தர்களும் ... 237
16. ரயில் அமர்க்களம் ... 244
17. இந்திய மக்கள் நிலைமை ... 248
18. சன மருளோ? சாஸ்திர மருளோ? ... 250
19. தீனிப்பை ... 255

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு	ரூ 1—0—0
	பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—2—0

மாதிரி சஞ்சிகை இனும்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

விளம்பர விகிதம்

உட்பக்கம் ஒன்றுக்கு		1-மாதத்திற்கு	ரூ. 10—0—0
,,	அரைப் பக்கத்திற்கு	,,	6—0—0
,,	கால் பக்கத்திற்கு	,,	4—0—0
கவர்	3-வது பக்கத்திற்கு	,,	15—0—0
,,	4 ,,	,,	20—0—0

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்.

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

20 APR 1933

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

' எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் '...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	ஸ்ரீமுகஹு சித்திரைமீ 3உ	இதழ்
4	1933ஹு ஏப்ரல்மீ 15உ	4

கடவுள் வணக்கம்

ஆதிசிவ னிளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்,
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்,
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்,
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத் தாலே யுணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை யகற்றினர்;
அதனருள் வாழ்த்தி யமரவாழ் வெய்துவோம்.

—பாரதியார்.

'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது'

இந்தியாவின் புதிய அரசியலைக் குறித்து பிரிட்டிஷ் சர்க்கார் பிரசுரித்த அறிக்கை வெளிவந்து (18-3-33) வெகு நாட்களாகின்றன. 'வெள்ளைக்காகிதம்' எனும் பெயர் கொண்ட இந்த அறிக்கையில் கூறும் விஷயங்களனைத்தும் வெறும் வெள்ளையாகவே இருக்கின்றன வென்பதைப் பல பத்திரிகைகளும் எடுத்துக் காட்டின; அறிஞர்களும் தங்கள் கருத்துக்களால் விளக்கினார்கள். பூரண சுயாட்சி வேண்டும், ஜனநாயகத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பொறுப்பாட்சி வேண்டும் என்ற உணர்ச்சி மிக்க ஒரு நாட்டு மக்களுக்கு, வைசிராய் கவர்னர்களின் எதேச்சாதிகார ஆட்சியை நிலை நாட்டும் இவ்வறிக்கை தினையளவும் திருப்தி அளிக்காதென்பது மறுக்க முடியாத உண்மையாகும். மோசம் நிறைந்த இவ்வறிக்கையால் தேசீய வாதிகளுக்குக் கடுகளவேனும் சமாதானமேற்படப் போவதில்லை.

'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்றவாறு, பாழும் சைமன் கமிஷனை நியமித்தது முதற்கொண்டு, இந்த வெறும் வெள்ளைக் காகித அறிக்கையை வெளியிட்ட வரையில் பிரிட்டிஷ் சர்க்கார் செய்து வந்த தவறுகள் ஏட்டில் அடங்காதென்றே சொல்ல வேண்டும். 'அழுகிற குழந்தைக்கு வாழைப்பழம் காட்டுவது' போல் காருண்ய மிகுந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முதலில் சைமன் கமிஷனை அனுப்பினர்; பிறகு லோதியன் கமிட்டி போன்றவைகளை ஏவினர்; அதன்பின் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று முறை வட்ட மேஜை மகாநாடுகளைக் கூட்டி முடித்தனர். இவையனைத்தும் வெறும் கண்ணைத் துடைக்கும் தந்திரங்கள் என்பதை இப்போது வெளிவந்துள்ள 'வெள்ளைக் காகித வெளியீடு வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

இத் தேசத்திற் கேற்பட்ட எண்ணிறந்த இன்னல்களுக்குப் பிறகு இப்போதாவது ஆங்கில அரசாங்கத்தார் கௌரவமாக நடந்து கொண்டிருந்தால், பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்கு மேற்பட்டுள்ள பெரும் மனக்கசப்பு ஒருவாறு குறைந்திருக்கும். இவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்ட பின்னரும், பிரிட்டிஷ் சர்க்கார் ஒழுங்காக நடந்து கொள்ளத் தவறியது அவர்களுடைய உண்மையான யோக்கியதைக்கு ஓர் உதாரணமாக இருக்கிறது.

கவர்னர் ஜனரலுக்கும், கவர்னர்களுக்கும் இப்புதிய திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள சர்வாதிகாரங்களும், சக்திகளும் அளவிட முடியாதவை; அபாரமானவை. சைமன் கமிஷன் அறிக்கையிலாவது,

கவர்னர்களின் அதிகாரத்திற்கு ஒரு வரையறை கண்டிருந்தது. ஆனால் வெள்ளைக் காகித வெளியீட்டிலோ அவசரச் சட்டங்களைச் சிருஷ்டிக்கவும் கவர்னர் ஜெனரலுக்கு மாத்திரமன்றி கவர்னர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' போல், நன்மையை நாடி இருந்த இந்திய மக்களுக்கு இப் புதிய அரசியல் அறிக்கையானது திகைப்பையும் திகிலையும் உண்டாக்கி விட்டதென்பது திண்ணமாகும்.

இப்போது 'வெள்ளைக் காகிதம்' கொடுத்திருக்கும் ஆட்சிக்கு மாகாணப் பொறுப்பாட்சி என்று பெயராம். ஆனால் கவர்னருக்குத்தான் எல்லா அதிகாரங்களும் உண்டு. கவர்னர் இஷ்டப்படி அவசரச் சட்டங்களைச் சிருஷ்டிக்கலாம். சட்ட சபையைக் கவர்னர் சற்றும் பொருட்படுத்த வேண்டுவதில்லை. கவர்னரின் சக்தியை அணுவளவேனும் சட்ட சபையால் அசைக்க முடியாது. நிருவாக சபையைக் கலந்து கொள்ளாமல் கவர்னர் தமது விருப்பம் போல் 'நீதி'யையும் 'அமைதி'யையும் நிலை நாட்ட சர்வாதிகாரம் செலுத்தலாம். இது தான் வெள்ளைக் காகிதம் கக்கும் 'மாகாணப் பொறுப்பாட்சி'யின் தத்துவமாகும்.

இனி, கவர்னர் ஜனரலோ இந்தியாவின் அமைதியையும் நீதியையும், அரசாங்கத்தின் நாணயத்தையும், சிறுபான்மை வகுப்பினரையும், சுதேச சமஸ்தானங்களையும், வியாபாரங்களையும் காப்பது என்ற போரால் தம்முப்பாக என்ன வேண்டுமானாலும் செய்யலாம். வைசிராய் விரும்பினால் சட்டசபைகளை ஒத்தி வைக்கலாம்; கலைத்தும் விடலாம்; எண்ணும்போதெல்லாம் அவசரச் சட்டங்களை இயற்றலாம். சட்டசபைகளோ, அவற்றிற்குப் பொறுப்புள்ள மந்திரிகளோ பெயரளவில்தா னிருக்க வேண்டும். உத்தியோக வர்க்கத்தினர் சம்பளங்களைக் குறித்த விஷயங்களில் சட்டசபைகளும் மந்திரிகளும் தலையிடுவதற்கில்லை. பொக்கிஷம், இராணுவம், அந்நிய நாட்டு சம்பந்தம் இவற்றிலெல்லாம் வைசிராய்க்கே அதிகாரமுண்டு. அதிக இந்திய உத்தியோகஸ்தர்களை நியமிப்பது, பாதுகாப்பது, நீக்குவது ஆகிய அதிகாரம் சீமையிலுள்ள இந்திய மந்திரியின் ஆதிக்கத்திலேயே இருந்து வருமென்று தெரிகிறது. உத்தியோக வர்க்கத்தினருடைய சம்பளங்களைக் குறித்த விஷயங்களில் சட்டசபைகளும் மந்திரிகளும் தலையிட முடியாது. மாகாண ஊழியங்களை நியமிக்கும் பொறுப்புங்கூட, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்ற சபையின் ஆதிக்கத்திலேயே இருக்குமென்றும், அந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷனர்களை நியமிக்கும் அதிகாரம் கவர்னர்களுடையதென்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

சட்டசபை, மந்திரிகள், மாகாண சுயாட்சி என்ற வெளி வேஷங்களை வைத்துக்கொண்டு தம் இஷ்டம்போல் அமுல் நடத்தும்

வல்லமையைக் கவர்னர்களுக்கும் கவர்னர் ஜனாலுக்கும் அளிப்பதே இந்த வெள்ளைக் காகிதத்தின் உள்ளக் கொள்கையாக இருக்கிறது. இத்தகைய ஆட்சியை வைசிராய் கவர்னர்களின் ஏதேச்சாதிகார ஆட்சி என்று சொல்லவேண்டுமே யன்றி வெள்ளைக் காகிதம் கூறுவதுபோல் 'மாகாணப் பொறுப்பாட்சி' என்று உரைப்பது சிறிதும் பொருத்தமாகாது.

இந்த அரசியல் திட்டத்தைப் பரிசீலனை செய்ய விரைவில் லண்டனிலே பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டி என்ற பஞ்சாயத்தார் கூடி ஆலோசிக்கப் போகின்றனர். அதன்பின் பார்லிமெண்டு சபையில் இப்புதிய திட்டம் நிறைவேற வேண்டும். அதற்குள்ளாக இன்னும் எத்தனை மாறுதல்கள் இதில் ஏற்படு மென்று இப்போது சொல்வதற்கில்லை. ஆனால் இப் புதிய திட்டத்தால் மக்களுக்குப் பிரமாதமான நன்மைகள் எவையும் ஏற்படப்போவதில்லை என்று மாத்திரம் நிச்சயமாகக் கூறலாம்.

வகுப்புப் போர்களும், தலைவர் போர்களும், பொறுப்பற்ற செயல்களும், பிறவும் நடமாடும் தேசம் இந்தியா என்பதை பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்; அதற்குத் தகுந்தவாறே இப்போது நடந்துகொண்டு வருகிறார்கள். தேசத்தில் வகுப்பு வாதம் தாண்டவம் புரிகிறவரையில் பொறுப்பாட்சி பெறுதல் அருமை என்பதை உணர்ந்து தேச மக்கள் இனியாவது ஒன்றுபட்டு வாழ வேண்டுகிறோம்.

புது வருஷம்

—:(o):—

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றேமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந் திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடோறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

—பாரதியார்.

‘தமிழரசு’

புது வருஷ வாழ்த்து



‘தமிழரசு’ வாழ்க!

நாடி அடியோடிந் நாளுக் குகந்தசுகந்
தேடிக் கொடுத்துவக்குஞ் செந்தமிழாற்—பாடி
அமிழ்தம்போ லாகு மழகுமலி வான
‘தமிழரசு’ வாழ்க தழைத்து!

ஆசிரியர். சாமி. ஆறுமுகனர்,
கோபால சமுத்திரம்.

தனவணிகர் துயரம்

இந்தியாவில் சோழ நாட்டிலே வாழ்ந்து வந்த நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் சோழ அரசனால் ஏற்பட்ட துன்பத்தால் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகிய புதுக்கோட்டை நாட்டில் குடியேறி, புதுக்கோட்டைக் காடுகளைத் தேவலோகமாகக் கட்டடங்களாலும் மின்சார விளக்குகளாலும் அலங்கார வீதிகளாலும் செப்பனிட்டார்கள்.

தென்னாட்டில் செல்வம் படைத்தவர்கள் செட்டி மக்களாகவே காணப்பட்டு வந்தனர். தவிர அநேக ஆலயாதிகளையும் பாடசாலைகளையும் கட்டி வைத்தும் ஆதரித்தும் வந்துள்ளனர். இவர்களை அனுசரித்து எத்தனையோ பார்ப்பனர்களும் மற்றையோர்களும் உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய ஒரு வகுப்பாரின் நிலையைப் பரிசோதிக்கும் காலம் போல் இக்காலமானது காணப்படுகின்றது. ஏனெனில் செட்டிமார்களின் பணம் அதிலும் செட்டிச்சிமார்களென்னும் ஆச்சிமார்களின் பணம் பெரும்பாலும் பர்மாவிலும், மலாக்காவிலும், சிலோனிலும், சைகோனிலும் வட்டித் தொழிலில் இருந்து வருகின்றது.

வட்டித் தொழில் செய்யும் செட்டிமார்கள் தங்கள் பணத்தைத் தாங்கள் வாசம் செய்யும் நாடான காட்டில் கட்டி யிருக்கும் கட்டடத்தில் செலவழித்துள்ள பணம் போக மிகுதிப் பணத்தை நிலங்கள் பேரிலும் தோட்டங்கள் பேரிலும் கட்டடங்கள் பேரிலும் வட்டிக்குக் கொடுத்திருக்கின்றனர்.

இனி வட்டித் தொழிலில் பணம் பெருக்கிய காலமானது மாறி இப்போது ஏற்பட்டு இருக்கும் நிலைமையை ஆராயப்புகின் வருந்தாதார் ஒருவரும் இரார்.

பர்மா நாட்டில் பயிரிடும் நிலங்களை ஈடு பிடித்து வைத்துக் கொண்டு பணம் கொடுத்து வட்டியைப் பிரதி வருடமும் வாங்கி வந்தனர். நாளடைவில் பர்மியர் வட்டி கட்ட முடியாததால் பெரும்பாலான நிலங்களை விக்கிரயம் செய்துகொள்ள ஏற்பட்டது. அப்படி விக்கிரயம் பெற்ற நிலத்தில் வட்டி கிடைத்து வருவதைக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இவ்வாண்டின் நிலைமையானது நெல் விலை 1700 படி (பட்டணம் படி) 50 ரூபாய்க்கு வாங்குவாற்றுக் கிடக்கின்றது.

இவ்விலையானது அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய வரிக்கே சரியாய் விடுகின்றது. தவிர பயிரிடுவோனுக்கும் தங்கள் ஜீவனத்திற்கும் ஊரில் இருக்கும் ஆச்சிமார்களின் செலவுக்கும் சாப்பாட்டிற்கும் தாங்கள் கடன் வாங்கியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வட்டிக்கும் கொடுக்கப் பணம் இல்லை. கையிலிருந்த பணம் யாவும் நிலக்கொள் முதலில் செலவாய்விட்டது. இவ்வகையில் தாங்கள் நிலக்கொள் முதல் செய்த நிலம் ஏக்கர் ஒன்றுக்கு 150 முதல் 250 வரையில் கிரயம் ஏற்படுகின்றது. இக்கணக்குப்படி நிலத்தின் மதிப்பைக்கொண்டு கணக்கில் 300 கோடி ரூபாய் பர்மா நாட்டில் செட்டிமார்களின் பணம் இருப்பதாகக் கூறுகின்றனர்.

சென்ற வாரத்தில் 295 ஏக்கர் நிலம் 1150 ரூபாய்க்கு வரி கட்டாததால் ஏலம் போட்டபோது விலை போனதாம். இத்தொகை வரிக்குக் கூட ஈடாகவில்லை. எனவே நிலத்தின் சொந்தக்காரருக்கு என்ன கிடைக்கும்? இந்நிலையை நோக்க பர்மாவில் உள்ள 300 கோடி ரூபாயும் வீணானதாகவே நினைக்க வேண்டி இருக்கின்றது.

மலாய் நாட்டிலோ ரப்பர் தோட்டங்களின் விலையும் ரப்பர் பால் விலையும் குறைந்து விட்டதால் பர்மாவைப் போலவே செட்டிமார்களுக்கு இங்கும் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இலங்கையிலும் டீயும் கொப்பரையும் விலை குறைந்து விட்டதால் செட்டிமார்களின் பணம் நஷ்ட மடையலாயிற்று.

இந்தோ சைனாவில் செட்டிமார்களின் பணம் 7 கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கடன் வாங்கியவர்களிடம் வசூல் செய்ய டிக்கிரி வாங்கிய (நான்கு பெரிய வியாபாரிகளை) நாடு கடத்தும் உத்தரவால் பிரெஞ்சு அதிகாரிகள் நாடு கடத்தி விட்டனர்.

ஐயோ, இந்த அவதியை யாரிடம் முறையிடுவது? எங்கே போய் நியாயம் தேடுவது? சைகோன் என்னும் நாடோ பிரெஞ்சு அரசாங்கமாய் இருக்கின்றது. செட்டிமார்களோ பிரிட்டிஷ் குடிகளாய் இருக்கின்றனர். அதிலும் இந்தியர்களாய் இருக்கின்றனர். ஆங்கிலராய் இருந்தாலும் அரசாங்கம் தானாகவே கவலை எடுத்துக் கொள்ளும். அதுவும் இல்லை. ஏழை இந்தியர் என் செய்வது? பத்திரிகைகளில் பிரசுரிக்கலாம், சட்ட சபைகளில் பேசலாம். இந்தியா மந்திரிக்கு விண்ணப்பம் செய்யலாம். சர். சி. பி. இராமசாமி ஐயர், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஆகிய இவர்கள்போ லொத்தவர்களை ஏற்பாடு செய்து சீமைக்கனுப்பி இந்தியா மந்திரிக்கு எடுத்துரைக்கச் செய்து பிரெஞ்சு அரசாங்கத்தைக் கேட்கச் சொல்லலாம். அதற்கு மேல் என் செய்யலாம்? இந்தியருக்காக யுத்தம் நேருமா?

பத்திரிகையை என் ஆதரிக்க வேண்டும்?

('பாரதி' ஆசிரியர் திரு. ரா. நாராயணசுவாமி)

பத்திராதிபரின் கடமை, கஷ்ட நஷ்டங்கள், மேலான சேவை, பத்திரிகையை உண்மையுடன் நடத்துவதால் அவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் முதலியவைகளைப் பற்றி நம்மவரில் அநேகருக்கு நன்கு தெரியாது. கற்றறிந்த பலரும் நம் நாட்டில் பத்திரிகைகளை அதுவும் சுய பாஷைப் பத்திரிகைகளைத் தக்கவாறு ஆதரிக்கிறதில்லை. கற்றவர்களே பத்திரிகைகளை அலட்சியம் செய்தால் சாதாரண ஜனங்களைப்பற்றிக் குறை கூற இடமேயில்லை. நமது தமிழ் நாட்டில் எத்தனை பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன? ஆதரவற்று அப்படியே எத்தனை பத்திரிகைகள் மாண்டு மறைந்தன? போலிப் பத்திரிகைகளைப் பற்றிக் கவலையில்லை. நாட்டுக்கும் பாஷைகளுக்கும் தொண்டு செய்ய வெளி வந்த எத்தனையோ உயர்தரப் பத்திரிகைகளும் மாசிகைகளும் போஷிப்பின்மையால் மறைந்தன. தமிழகத்தில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குச் செல்வாக்கில்லை; ஆதரவில்லை. தமிழில் பத்திரிகைகளைப் படிப்பதும், வரவழைப்பதும், வைத்திருப்பதும் கேவலம் என்று பல தமிழர்கள் கருதுகிறார்கள். இப்படி இருந்தால் தமிழ்ப் பத்திரிகைகள் எவ்வாறு செழித்து ஓங்கும்?

போது ஜனத் தொண்டு

ஒரு பத்திரிகை எல்லா அபிவிருத்திகளுக்காகவும் நன்கு உழைக்க முடியாது. ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு விஷயத்தைத் தலைமையாகக் கொண்டே அதில் அதி தீவிரமாக உழைக்கும். கொள்கையில் சிறிதேனும் மாற்றமின்றித் தைரியத்துடனும் சத்தியத்துடனும் உழைக்கும் பத்திரிகைகள் அடையும் கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமன்று. உண்மைப் பத்திரிகைகளின் பொறுப்பு மகா கஷ்டமானது. இத்துடன் அவைகளுக்கு நஷ்டமும் ஏற்பட்டாலோ தாங்க முடியாது. உறுதியான தேசீயப் பத்திரிகைகளின் நிலையைப் பற்றிச் சொல்வதற்கில்லை. சர்க்காரின் தவறுகளை எடுத்துக் காட்டிச் சர்க்காரைக் கண்டித்துப் பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்வதில்

தேசியப் பத்திரிகைகளுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன! பத்திரிகையால் தாக்கப்பட்டவர்களது எதிர்ப்புக்குப் பத்திராதிபர்கள் ஆளாகவேண்டி யிருக்கிறது. ஆகையால் பத்திராதிபர்களுக்கு எவ்வளவோ தைரியம் வேண்டும். பொது ஜனங்களுக்கு எத்தனையோ வழிகளில் அவர்கள் தொண்டு செய்துகொண் டிருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகைகளால் அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் பத்திரிகை நடத்த முன் வரவில்லை. பத்திரிகைத் தொழில் பத்திராதிபரது சொந்த வேலையன்று. அவர்கள் பொதுஜன ஊழியத்திற்காகவே மனமுவந்து சலியாது இதைச் செய்கிறார்கள்.

இந்தியாவின் கீழ் நிலைக்குக் காரணம்

இந்தியாவில் பொது ஜனத் தொண்டர்கள் நன்கு மதிக்கப் படுவதில்லை; அதிகமாய் ஆதரிக்கப்படுவதில்லை. பொது ஜன இச்சா சேவகர்களுக்கு உதவி செய்து ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டுவது நாட்டாரது பெரும் கடமையாகும். அது போன்ற நாட்டுக்கு நல்ல பணி செய்யும் பத்திரிகைகளையும் ஆதரித்து வளர்த்துக் காக்க வேண்டியது தேச மக்களின் முக்கிய கடமை. நம் நாட்டில் எக் காலம் வரைக்கும் பத்திரிகைகளை நன்கு ஆதரிக்க வில்லையோ அக் காலம் வரைக்கும் இந் நாட்டுக்கு அதிக அபிவிருத்தி யில்லை யென்று கூறத்தான் வேண்டி யிருக்கிறது. பத்திரிகைத் தொண்டு நாட்டுத் தொண்டு என்பதை அனைவரும் அவசியம் அறிதல் வேண்டும். பத்திரிகைப் பெருக்கா லல்லவா அமெரிக்கா, இப்பொழுது இவ்வாறு மகோன்னத நிலைமை அடைந் திருக்கிறது; ஜப்பான், இன்று உலக வல்லரசுகளில் ஒன்றாக விளங்குகிறது. தனது பண்டைப் பெருமைகளைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண் டிருக்கும் இந்தியா, பத்திரிகை விருத்தியில் மிக மிகப் பின்னணியில் நிற்கிறது.

ஆதரிக்கும் குணமுண்டா?

பத்திரிகைகளை ஆதரிக்காம லிருப்பதற்குக் காரணம் நாட்டின் வறுமையைப் பற்றி மட்டும் சொல்வதற்கில்லை; நாட்டின் படிப்பின்மையை மட்டும் கூறுவதற்கில்லை. புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் போதியபடி விலைக்கு வாங்கிப் படித்து அவைகளை ஆதரிக்கும் வழக்கம் நமது நாட்டாருக்கு அதிகமா யில்லை. இதைப்பற்றி நம் தேசத்து எத்தனையோ அறிஞர்களும் ஆசிரியர்களும் தேசாபிமானிகளும் குறை கூறி யிருக்கின்றார்கள். நாகரிக மடைந்த தேசத்தார் செல்வ சக்தியையும் அவர்கள் புஸ்தகம் வாங்கும் சக்தியையும் நமது தேசத்தின் செல்வ சக்தியுடனும் புஸ்தகம் வாங்கும் சக்தியுடனும் ஒப்பிட்டு, நமது தேச சக்திக்கு மகா குறைச்சலாகவே புஸ்தகங்களும் பத்திரிகைகளும் வாங்கப்படுகின்றன என்று நமது சுதேச

பத்திரிகை ஒன்று இந்தியாவை அனுதாபத்துடன் தாக்கி எழுதி யிருக்கிறது.

தமிழர் செய்த கொலைகள்

தமிழ்ச் சகோதரர்களே, எத்தனையோ வகைகளில் எவ்வளவோ சிறப்புடன் வெளிவந்த 'வாணி விலாசனி' மாசிகை தமிழர்களது ஆதரவுக் குறைவால் மாண்டது மன்றி, அதன் ஆசிரியரையும் அபார கடனுக்குள் ஆழ்த்தி விட்டது. விவேகத்தைப் போதிக்க வந்த 'விவேக சிந்தாமணி'யையும் தமிழ் நாடு கொன்றது. பஞ்சாமிர்தம் போன்ற உருசியுள்ள 'பஞ்சாமிருத'த்தையும் தமிழ் நாடு வதைத்தது. 'பிழைக்கும் வழி' என்ற உயரிய பத்திரிகையைத் தமிழ் நாடு அதோகதி யாக்கி விட்டது; தேசாபிமானத்துடனும் பாஷாபிமானத்துடனும் கர்ஜித்துத் தேசத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டு வந்த 'பால பாரதி'யையும் மதிக்காது அதையும் முழுங்கி விட்டது; பல இன்பச் சுவைகளுடன் வெளிவந்த 'லட்சுமி'யையும் சென்ற காலத்தில் சேர்த்து விட்டது; மாதர்களுக்கென வெளிவந்த அருமையான 'மாதர் மனோரஞ்சனி' 'பெண் கல்வி'ப் பத்திரிகைகளைத் தொலைத்துவிட்டது. ஜனங்களை வசீகரிக்கும் 'ஜன விநோதினி' எங்கே? மாதர்களுக்கென வெளிவந்த உயர்தரப் பத்திரிகையாம் 'தமிழ் மகள்' எங்கே? விஷயஞ் செறிந்த 'ஞானபானு' எங்கே? நெஞ்சை அள்ளும் பாரதியாரது 'இந்தியா' எங்கே? இவை எல்லாம் மாண்டன. தமிழரது அனுதரவால் எத்தனையோ உயரிய பத்திரிகைகள் மறைந்தன.

சாபம் நீங்க வேண்டுமா?

தமிழ் நாட்டின் பரப்பையும், தமிழர்களின் பெருக்கையும் தமிழர்களில் கற்றறிந்தவருடைய தொகையையும் கவனித்துப் பார்த்தால், இன்னும் எத்தனை எத்தனையோ துறைபற்றிய பல உயரிய பத்திரிகைகள் உண்டாகிப் பெருகத் தமிழ் நாட்டில் இடமுண்டு. ஆனால், தமிழர்களுக்கு மனம் மட்டும் வேண்டி யிருக்கிறது. இன்னும் அயல் நாடுகளில் வசிக்கும் தமிழரிடையே சில சிறந்த பத்திரிகைகள் தோன்றிய போதிலும், தமிழருடைய பத்திரிகாபிமானக் குறைவால் அவைகளும் அழிந்தன. எப்படியோ சில இன்னும் உயிருட னிருக்கின்றன. நல்ல பத்திரிகைகளைக் கொன்ற சாபம் தமிழர்களைப் பிடித்து ஆட்டிக்கொண் டிருக்கிறது. இச் சாபம் விலக வேண்டுமே யானல், தமிழரிடை தேசாபிமானம் சிறக்க வேண்டுமே யானல், சுதந்திரம் பெருக வேண்டுமே யானல், தமிழ் மக்கள் பத்திரிகைகளை அதிகமாய் ஆதரிப்பாராக.

இயற்கை இன்பம்

(திரு. T. சீனிவாச ராவ் B. A.,)

கோடையின் வெப்பம் கொஞ்சமும் தாங்குதற்கின்றிக் கொடுமையாய் இருக்கவும், பொய், புனை சுருட்டு, அக்கிரமம், தீச் செயல், திருட்டு முதலியன ஒருங்கே நிறைந்துள்ள நகர வாழ்க்கையில், அலுப்பும், வெறுப்பும் தோன்றவும், அவைகளை விடுத்து, சேர வள நாட்டிலுள்ள குளிர்ச்சியும், வனப்பும் மிக்கதோர் மலைப் புறத்தை அடைந்தேன். மலையடி வாரத்தில் இருந்ததொரு சிறு கிராமத்தில் தனித்ததொரு வீட்டில் தங்கினேன். சிறிது தூரத்தே வானை நோக்கி வளர்ந்து நின்ற மலையினைக் கண்டதும் என் மனம் துள்ளிக் குதித்தது. மறு நாள் அதிகாலையில் அம்மலைமீது ஏறத் தீர்மானித்தேன். அற்றைப் பகற் பொழுதும் இராப்பொழுதும் இருந்த விடத்திற்றானே கழிந்தன. குணதிசையில் கதிரவன் எழுமுன் படுக்கையை விட்டு எழுந்தேன். பகற் பொழுதிற்கு வேண்டிய பலகாரங்களைச் சிறு மூட்டையாகக் கட்டித் தோளில் மாட்டிக்கொண்டு, மலையை நோக்கி நடக்கலானேன். புறப்பட்ட சிறிது நேரத்திற் கெல்லாம் மலை யடிவாரத்தை யடைந்தேன்.

அப்பொழுதே கீழ்த் திசையில் கதிரவன் பொன்னொளி யொத்த தன் கதிர்களை வீசிக் கடுகி வான் மிசை ஏறலானான். வானொளி படரும் இன்பத்தைக் கண்டு பாட்டுப் பாடிப் புட்கள் மகிழ்ந்தன. உவகை பூத்த மனத்தினனாய் நானும் மளமளவென்று அம்மலைமீது சென்றதோர் ஒற்றையடிப் பாதையைப்பற்றி அதன் வழிப் படரலானேன். ஒரு நாழிகைப் போழ்து அவ்வாறு நடந்த பின்னர், மரங்களின்றிப் பரந்து நின்றதோர் பாறையைக் கண்ணுற்று அதன் மீதேறித் தூரத்தே தெரியும் நிலக் காக்ஷியினை அள்ளிப் பருகலாயினேன். கீழே நோக்கவும், குளிர் போக்கிக் கொள்ளத் தம் தலைகளை வெளியில் உயர்த்திக் கொண்டிருப்பது போன்று சிற்சில பாறைகள் இங்கு மங்கும் அம்மலையில் தென்பட்டன. நாடகத்திரையில் காணப்

படும் சிறு சிறு வெள்ளைப் புள்ளிகளெனத் தூரத்தே கிராமத்தி லுள்ள வீடுகள் தோன்றின. மண் மீதே காதல் கொண்டானெனக் கதிரவனும் கண்பிறழ்வின்றிப் பூமியை நோக்கினவன்போ லிருக்க, பூமிதேவியும் ஆதவன் சோதி கண்டதால் அவன்மீது காதல் மிக மண்டினவள்போல் தன் முகத்தில் புன்னகை பூக்கத் தோன்றினுள். அம் மலைச் சரிவினில், அடுக்கடுக்காய், படிப்படியாய்ப் பற்பல நிறப் பூக்களுடன் கூடிய மரங்கள் பல வளர்ந்திருந்தன. சவுக்க மரங்கள் இலைக ளதிகமற்ற தம் கிளைகளுடனே ஆங்காங்கு மற்ற மரங்களைக் காட்டினும் உயர்ந்து இறுமாப்புத் தோன்ற நின்றன. பச்சிலைகள் நிறைந்த ஆல விருக்ஷங்கள் ஓர் பாலும், மஞ்சள் நிற மலர்க் கொம்புகளுடன் கூடி சண்பக மரங்கள் ஓர் சாரிலும் மலிந்து தோன்றின. பள்ளிச் சிறுவர்களின் பலகைகள் பல, பசும் போர்வையுடன் தரைமீது பரப்பிக் கிடக்கின்றனவோ என்றெண் ணத் தகுந்த கழனிகள் பலவும், அவற்றிற்குச் சிறிது தூரத்திற் கப்பால், இயற்கையெனும் கற்றச்சன் கைப்பட்டு உருண்டை வடி வாகிக் குவியலாகக் கிடக்கும் பாறைகள் நிறைந்த மேடான நிலமும் பார்வைக் கழகா யிருக்கக் கண்டேன்.

மழை யுலாவிய அம் மலைச் சாரலில், மந்தமாருதம் அப் பொழுதே தவழ்ந்து வந்து மெல்லிய மணங் கமழ்ந்தது. அதை ஆவலுடன் என் நாசிகள் பருக, என் மார்புக ளிரண்டும் விம்மி, விம்மி யடங்கின. என் உடம்பினிலே ஓர் வகைப் புத்துணர்ச்சி தோன்றிற்று. என் கண்களில் ஒளி வீசலாயிற்று. அச் சமயத்தில் என் மனதினில் பற்பல எண்ணங்கள் உதித்தன. என் பால்யப் பரு வத்தினை எண்ணினேன். ஆஹா! நீரிற் குமிழி என அப் பருவம் கழிந்து சென்றுவிட்டதே என்ற நினைப்பு என் மனத்தினை வாதனைக் குள்ளாக்கிற்று. ஏனெனில் அந் நாட்களி லெல்லாம் துணிகரமான காரியங்களைத் துடுக்குடன் செய்வதில் எத்துணை ஆர்வங் கொள் வேன்! அத்தகையதோர் உணர்ச்சி அன்று தோன்றியதன் காரண மாகவே, கரடு முரடான அம் மலைமீ தேறத் துணிந்தேன். இயற்கை யன்னையின் சிறப்பினைக் காணும் ஆவல் என் மனத்தின்கண் ஓங்கிநின்றது.

நிற்க, நான் அப் பாறையை விட்டிழிந்து மீண்டும் அடர்ந்த காட்டினூடே நுழைந்தேன். நாற்றிசையினின்றும் பலவகை வண்டுக ளின் ரீங்காரமே காதில் ஒலித்துக்கொண் டிருந்தது. தண்ணறுஞ் சோலையில் விண்ணளாவி நின்ற மரங்களிடையே பின்னிப் படர்ந்த வாசமலர்க் கொடிகளில் வானர மங்கையர் ஊசலாடி மகிழ்ந்து விளை யாடினர். தேக்கு, தேவதாரு, சந்தனம், சண்பகம், பலா, பாதிரி, புங்கை, புன்னை முதலிய மரங்கள் வானை நோக்கிக் கைகளைத் தூக்கி, அதனைத் தொடுவதேபோல் தோன்றின. அவைகளின் பரந்த கிளைக

ளில் அடர்ந்து விளங்கிய இலைகள் பகலவ ஞெளியை உள்ளே புக வொட்டாது தடுத்தன.

மற்றும், அம் மலைக் காட்டில் பல விந்தைச் சுவையுடைய கனி களும், எந்தப் பக்கத்தையும் மறைக்கும் வரைகளும், நெஞ்சிற் கனல் மணக்கும் பூக்களும், எங்கும் நீளக் கிடக்கும் இலைக் கடல்களும், முட்கள் மண்டித் துயர் கொடுக்கும் புதர்களும் ஆங்காங்கே காணப் பட்டன. மரங்களின் மீது பலவகை நிறங்களுடன் கூடிய பறவை கள் கூட்டம் கூட்டமாய்த் தத்தம் பேடுகளுடன் கூடிக் கொஞ்சிக் குலாவி விளையாடிக்கொண் டிருந்தன.

நடைப் பாதையில் ஊசி குத்தக்கூட இடமில்லாதபடி, செல்வ வந்தர் வீட்டுப் பளிங்குத் தரை மீது பரப்பிக் கிடக்கும் ரத்ன கம்பள மென, மெத்தென உலர்ந்த இலைகளும், வாடிய புட்பங்களும், மக ரந்தப் பொடிகளும் சிந்திக் கிடந்தன. இரு மருங்கிலும் ஆங்காங்கே வெண்ணிறப் பாறைகள் வழவழெனத் தரை மட்டத்திற்குச் சற்றே உயர்ந்து தோன்றி நின்றன. மஞ்சள் நிற வண்ணாரப் பூச்சிகள் தம் வனப்பு மிக்க இறக்கைகளை விர், விர் என்று வீசிக்கொண்டு சுற்றிப் பறந்து விளையாடிக்கொண் டிருந்தன. அம் மலைக் காட்டினில் அச் சமயத்தில் என்னை யன்றி வேறெவரு மிலர். ஆகவே இயற்கை யன்னையின் தோற்றங்களைக் கண்டு மகிழ்வெய்தி நின்றேனாயினும், திடீரென்று பக்கத்தே யுள்ளதோர் புதரினின்றும் சரேலென்று ஓர் பக்ஷிக்கூட்டம் பறந்து செல்ல, அவ்வோசை கேட்டு, காட்டுமிருகங்க ளேதேனும் அங்குக் கடுகி வந்துவிட்டதோ எனும் எண்ணம் அந் நிமிடம் என்னை ஒரு முறை குலுக்கிவிட்டது. மறு நிமிடம் நான் என்னிலை யடைந்தேன்.

அக் காட்டிடையே சருகுகளின் மேல் நான் நடந்து செல்லுங் கால் ஏற்படும் சலசலப்பும், மரங் கொத்திப் பறவைகள் கொட்டு, கொட்டென்று தம் கூரிய அலகுகளால் மரக் கொம்புகளைத் துளைக்கும் சப்தமும், வண்டுகளின் ரீங்காரமும், குக் குக் கென்று குயில்கள் பாடும் பாட்டும், தவிர வேறெவ்விதப் பேரோசையும் கேட்க வில்லை. சிறிது நேரத்திற் கொருமுறை மரங்களிடை வாயு பகவான் விர்ரென்று வீசிக்கொண் டிருந்தான். அதனால் விநாடிக் கொரு விதமான சப்தம் கேட்கலாயிற்று. இந் நிமிடம், பல மைல் தொலைவிற் கப்பால் வரும் புகைவண்டியி னோசை போன்ற தொரு சப்தம் எழும். மறுநிமிடம் நீல நிறக் கடலலைகள் கரைமீது மோது வது போன்றதோ ரொலி கிளம்பும். சரேலென, அச்சமயம் எங் கிருந்தோ, ஆசைபெற விழிக்கும் மானினத்திற் சில மருண்டு மரங்க ளிடையே, வேடன் வில்லினின்றும் விடுபட்டோடும் அம்பினைப் போல் விர்ரென்று பறந்து செல்லும்.

இத்தகைய தோற்றங்க ளனைத்தையும் கண்டு களித்துக் கொண்டே, நான் ஆனந்த உள்ளத்தினனாய் அடிமே லடிவைத்து ஒய்யார நடை நடந்து உல்லாசமாய் மென்மேலும் சென்றுகொண் டிருக்க, சூரியனும் என்னைத் தொடர்ந்து வருபவனேபோல் வான வீதியில் ஏறிச் சென்றுகொண் டிருந்தான். செஞ் ஞாயிற்றின் கதிரால் பச்சை மர மெல்லாம் பள பளென மின்னின. உச்சி வேளை வந்தது. அப்பொழுதே என் சித்தம் என் தோள் மேல் தொங்கா நின்ற சிறு மூட்டை மீது செல்லலாயிற்று. ஆகவே பக்கத்தே எங்கேனு மோர் சுனை யுளதோ என்று பார்ப்பான் வேண்டிச் சற்று வேகமாகவே நடக்கலானேன். வெம்மதக் களிறுகள் சேர நாட்டு மலைக் காடுகளில் செறிந்து காணு மென்பதை முன்னரே கேள்வியுற் றிருந்தேன். அக்காட்டிடையே அக் களிறுகள் வெருண்டு விழுமிய மரங்களை முறித்து வீழ்த்திச் சென்றிருக்கும் முறைமையை அன்று கண்டு வியந்தேன். அவ்வாறு சிதறிக் கிடக்கும் மரங்களில் அமைந்த செந்தேன் மலையின் வழி யொழுகிய மாண்பினைக் கண்டு மனக் களிப்புற்றேன்.

சிறிது தூரத்திற் கப்புறத்தே சல சல வெனக் கானாறு கற்களில் விழுந்தோடும் ஒலி கேட்டு அத்திசை நோக்கி நடந்து அவணடைந் தேன். ஆஹா! எத்தகைய காக்ஷி அது. மாவும் மாக்களும் விரும்பி நீராடும் அம் மலைச் சுனைகளில் அருவி நீர் ஆறாகப் பாய்ந்து சென்று கொண்டிருந்தது. மாசற்ற மணிநீர்ச் சுனைகளில் சல்லி மீன்கள் துள்ளி விளையாடின. களங்கமற்ற அச் சுனை நீரில் கதிரவன் சாயை காண்போர் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் தோன்றிற்று. அச் சுனை யோரத்தில் அமர்ந்து என் மூட்டைக் கனத்தைச் சிறிது போழ் தினில் குறைத்துவிட் டெழுந்தேன். அற்றைப் பிற்பகலில் வெகு நேரம் அக் காட்டிடையே சுற்றிக்கொண்டு வந்தேன். கதிரவனும் களைப்புற்றவனேபோல் மேற்றிசையில் இறங்குவானாயினன். அப் பொழுதே நானும் இயற்கை யன்னையை விட்டுப் பிரிய மனமற்ற வன் போலச் சோர்வுடன் மலையை விட்டிழிந்தேன். சம நிலத்தை யடைந்தேன். வீடு போய்ச் சேருமளவும் வனப்பு மிக்க மலையாளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றேன். வெங்கதி ரோன் மறையலும் தண் கதிரோன் குண திசையில் எல்லை யில்லாத தோர் வானக் கடலிடை விழிக்கின்ப மளிப்பதோர் தீவென் றிலங்கி வெளிக் கிளம்பினன். வீட்டை யடைந்து சாளரங்களை யெல்லாம் அகலத் திறந்து வைத்து விட்டு, ஓர் ஆசனத் தமர்ந்து பலகணி யொன்றின் வழியாகத் தெரிந்த வெண்ணிலாவி னழகில் ஈடுபட்டேன்.

சீத மணி நெடுவானக் குளத்திடைத் தேசு மிகுந்த வெண் டாமரை போன்ற வெண்ணிலாவின் அழகே அழகு! சட்டென வானத்திடை எங்கிருந்தோ அதன்மீது பொறாமையுற்று அதை

மோதவருவதே போல் ஓர் கரு மேகம் வர, தன்னை மோத வரும் அம் மேகத் திரளினுக்கு முத்தினொளி தந்தழகுறச் செய்து விட்டு மாமதி மறு நிமிடம் மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்து, தன் மேனியி னழகு மிகைபடத் தோன்றிற்று. சற்று மேற்புறம் திரும்பினேன். மரங்க ளடர்ந்த மதியினொளி தாங்கி, பகலில் கொண்ட தோற்றத்தைக் காட்டினும் பன்மடங் கதிக அழகு பெற விளங்கிற்று. அற்றைப் பகற் போழ்தினில் அம் மலையில் நான் கண்ட காக்ஷிக ளனைத்தும் என் மனக் கண்ணாடிமுன் மின்னொளியெனத் தனித்தனி தோன்றி மறையலாயின.

உடனே என் மூளை வேலை செய்யலாயிற்று. இம் மலைக் காக்ஷியைக் கண்டு, நம் மனம் வித்தை செயுஞ் சூத்திரத்தின் மேவுமொரு பொம்மையென அதன்பால் விரைந்து செல்லக் காரண மென்ன வென்பதை ஆராயலானேன். அயர்ந்து தளர்ந்து நிற்கும் நம் ஆத்மா மலைக் காட்டிடை மந்தமாருதம் வீசுதலால் தளர்ச்சி குறையப் பெறுகின்றது. உலகெனும் அரங்க மேடைமீது உழல்வதால் பெரிதும் கவலையுற்ற மனத்தினராய மக்கள், நாடு, நகரம், உற்றூர், பெற்றூர் அனைவரையும் விடுத்து இயற்கை யொளி வீசும் மலைகளிடைச் சென்று இயற்கை யமுதைப் பருகி, தம் மனம் நிம்மதியடைகின்றனர். மதுவுண்டு, தேள் கொட்டுண்ட மாயக் குரங்கினையொத்த மனத்தின் அழுக்கைப் போக்கி அறநிலைப் படுத்துவதற்கு மலையின்க ணுள்ள ஆரண்யமே சாலச் சிறந்த விடமாகும். குடும்ப சாகரத்தி லகப்பட்டுச் சில நாட்களானதும், அதுவரை நம்முடன் வசித்து வந்த இன்பமெனும் நங்கை நம் வீட்டைவிட்டு வெளிக் கிளம்பி விடுகிறாள். அவ்வாறு வெளிக் கிளம்பிய மெல்லிடையாளை வனப்பு மிக்க மலைக்காட்டிடையேதான் மீண்டும் காணலாம். நம்மைச் சுற்றிலுமுள்ள இயற்கை வனப்பு நம் மனத்தை முற்றிலு மாறுபடச் செய்து விடுகின்றது. வாழ் வெடுத்ததன் பயனை அப்பொழுதே கவலையற்று அனுபவிக்கிறோம். அக் காட்டிடையே எத்தனை நாட்களாயினும் வாழவேண்டுமெனும் இச்சை பிறக்கின்றது. வீண் எண்ணம் தலை காட்டாது மறைகின்றது. நமக்கு எதிர் பாரா ஆபத்துகள் பல அடுக் கடுக்காய் வருங்கால் இருப்பதினும் இறப்பதே மேல் எனும் எண்ணம் உதிக்கின்றதே! அத்தகைய நினைவே அம்மலைமீ திருக்கையில் வருவதில்லை. நம் மனப் போக்கைத் தடுக்க அங்கு என்ன இருக்கிறது? எதுவுமில்லை. இயற்கை யன்னையின் மடிமீ துறங்கி, அவளிடையே ஓடித் திரிந்துலாவி வசித்து, அவளது எண்ணற்ற அற்புதத் தோற்றங்களைக் கண்டு, மகிழ்ந்து கொண்டு, காலனைப் பற்றிக் கடுகளவும் எண்ணாது காலங் கழிக்கலாம்.

அங்குள்ள தூய்மையான காற்று நம்மையும் தூய்மைப் படுத்துகின்றது. தேகப் பயிற்சி செய்ய அவா காணத் தலைப்படுகின்றது.

பசியென்பதே பறந்து போகின்றது. ஆனால் தெள்ளிய நீரோடையைக் கண்டதும் பசி தோன்ற ஆரம்பிக்கின்றது. நமக்குள்ள மனச்சங்கை யனைத்தும் மறைய, அங்குச் சாந்தி தோன்ற, சுதந்திர உணர்ச்சியுடன் உலாவி வருகின்றோம். வெளி உலகைப் பற்றிய நினைவே தோன்றுவதில்லை. பணப் பேயா லலைக்கப்பட்ட மாந்தர் பரபரப்புடன் எத்தகைய பாவச் செயல்களையும் செய்யும் திடசித்தம் கொண்டு செல்லும் முறை, கண்ட விடமெல்லாம் அசங்கியமாய்க் குப்பையும், செத்தையும் குவிந்து துர்நாற்றம் வீசவும், அதனிடை வாழும் வாழ்க்கை முதலிய எண்ணங்கள் அப்பொழுது நம் மனத்தில் தலை காட்டுவதே யில்லை. அங்கு, குளிர், காற்று எனு மிருவர் தவிர வேறு பகைவ ருண்டா? உடலை வாட்டும் நோ யுண்டா? உற்றார், சுற்றத்தாரின் துன்ப முண்டா? ஆரோக்கியமான பசியைத் தவிர வேறு கடு வேதனை யுண்டா? எதுவுமின்றி, ஏகாங்கியாய், அங்கு வாழும் வாழ்க்கைக்கு நிகரேது? மனதை வாட்டிக் கருக்கும் துன்பங்கள், அறிந்தும் அறியாமலு மிழைக்கு மின்னல்கள், அதன்பின் அதைக் குறித்தனுதாபப்படுதல், கடமை கடமை யென்று கடமையென் றில்லாததைக் கணப்பொழுது மிடைவிடாது பேசிக் காலங் கழிப்பது இவை யனைத்தும் ஒப்பற்ற மலைக்காட்டிடையே, நம் மனத்தை விட்டுப் பெருங்காற்றி லகப்பட்ட மேலாடையெனக் கடுகிப் பறந்து சென்றிடுமென்பது திண்ணம். இவ்வாறாக இயற்கை வனப்பின் மாட்சியை எண்ணிக் கொண்டே யிருக்கையில், ஆறலைக்கும் கள்வனும் அயர்ந்துவிழும் நடுநிசியாய் விட்டது. என்னை யறியாமலே தூங்கிவிட்டேன் என்று பின்னர் அறிந்துகொண்டேன்.

கடவுளை எங்கே காண்பது?

கடவுள் காண்பதற்கு அரியவன்; மனம், மொழி, மெய்களாகிய முக்கரணங்களையும் கடந்து நிற்பவன். அவனை நாம் எங்கே காண்பது? இயற்கையின் வாயிலாகவே அவனை நாம் காணல் வேண்டும். இயற்கையே இறைவன் திருமேனி. இறைவனது உண்மையை உணர்த்தும் பொருள் இயற்கையே யாகும். ஆகாயத்தை நோக்கும் போதும், அங்கு விளங்கும் விண்மீன்களைக் காணும்போதும், பாதைகளின் ஓரங்களிலுள்ள பசும்புற் புதர்களைப் பார்க்கும்போதும், மெல்லியப் பூங்காற்றை நுகரும் போதும் நாம் இறைவன் தன்மையை அறியலாம். இயற்கையே இறைவனைக் காட்டும் கண்ணாடி. இயற்கையே இறைவனைச் சேர்ப்பிக்கும் புணை.

—பா. பக்கிரிசுவாமி செட்டியார்

அருள் பெற இரங்கல்

——:o:——

(திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் பி. ஏ.,)

1. அன்னையே! யென்னப்பா! எம்பிரானே! எப்பொருட்கும்
முன்னோனே! முதலாகுந் தற்பரனே! தயாநிதியே!
கன்னுரை யுரிப்போனே! கருணையங் கடலானே!
என்னைக்காத் தருளிடுவாய்! எளியேனை எடுத்திடுவாய்!

2. அன்னையே யுன்னைநான் உருவத்தில் வணங்குவதோ?
அன்னையே யுன்னைநான் அருவத்தில் வணங்குவதோ?
அன்னையே யுன்னைநான் அருவுருவில் வணங்குவதோ?
அன்னையே யுன்னைநான் அதீதத்தில் வணங்குவதோ?

3. எங்ஙனமே வணங்குவதே? எங்ஙனமே வணங்குவதே!
எங்ஙனமே இயம்பிடுவாய் அங்ஙனமே வணங்கிடுவேன்;
எங்ஙனம்வந் தருளுவையோ அங்ஙனமே கொண்டிடுவேன்;
இங்ஙனமே யடியேன்நான் அலமரவும் வந்திலையே!

4. வந்திலையே யென்னினுநான் வழிபடுதல் திண்ணந்தான்;
முந்திமுந்தி வந்திடுவாய் வழிபடுவோர்க் கருளுதற்கே;
மந்திரத்தை யானறியேன், தந்திரத்தை யானறியேன்;
தந்தையினுந் தயவுடையாய்! நின்னருளே நம்பியுள்ளேன்.

5. நின்னருளே யென்னைத்தான் உலகைத்தான் புரந்திடுமே;
நின்னருளே விட்டிங்கே உலகின்கண் உள்ளதுண்டோ?
நின்னருளே பாவியையும் ஆவியையும் பரிந்திடுமே;
நின்னருளே எல்லோர்க்கும் யாவர்க்கும் புகுமிடங்காண்.

6. புகுமிடமே என்னினுமப் புகலிடத்திற் புக்காமல்,
தகுமிடத்தைக் காணமல், தக்கதையே செய்யாமல்,
உகுமிந்த உணர்வில்லார் உள்ளதையே உணராமல்
நகுமிந்த நாத்திகர்க்கு நல்லதையே நல்கிடுவாய்.

7. நல்கிடுவாய் அவர்தமக்கும் நன்னெறியை நவின்றிடுவாய் ;
பல்கிவரும் பிணியெல்லாம் போக்கிடவே வழியாதோ
சொல்லிடுவாய் ; சொல்லாக்கால் அறிவதுந்தான் அரிதன்றோ ?
சொல்லிடத்தான் செய்யும்வழி அஃதொன்றுஞ் சொல்லிடவே ;

8. சொல்லிடுவாய் கேட்போர்க்கே ; ஈந்திடுவாய் இரப்போர்க்கே ;
எல்லார்க்கும் அணையானாய் ! அளித்திடுவாய் அருளினையே ;
நல்லார்க்கு நல்லவனே ! பொல்லார்க்கும் நல்லவனே !
எல்லார்க்கும் நல்லவனே ! எளியேற்கும் நல்லவனே !

9. நல்லவனே நல்லவனே ! நமனுரை யோட்டுவையே !
நல்லாற்றில் நடந்திடவே திடமதனைத் தந்திடுவாய் ;
பொல்லாற்றைத் தள்ளிடவே உள்ளிருந்து உதவிடுவாய் ;
அல்லாக்கால் என்செய்வேன் ? அடியேற்குப் பலனின்றே.

10. கோலத்தான் பலங்கொடுப்பாய் ! குற்றமெல்லாம் போக்கிடுவாய் !
சாலநல்லோய் ! மிகப்பெரியோய் ! மிகச்சான்றோய் ! மிகவுயர்ந்தோய் !
ஞாலமதின் தந்தைநீயே ! தாயுநீயே ! தமருநீயே !
ஓலமிடும் அடியேனும் உன்பிள்ளை அருள்வாயே.

பிரார்த்தனை

பிரார்த்தனையே என் வாழ்க்கையை உயர்த்தி வருகின்றது. அஃது இல்லாவிடின், வெகு காலத்துக்கு முன்னரே எனக்குப் பித்துப் பிடித்திருக்கும். எனக்கு உண்டான மனக் கலக்கங்களும், வேறு பல துன்பங்களும் ஒழியச் சிறந்த கருவியாக இருந்தது பிரார்த்தனையே. முதலில் யான் கடவுளிடத்தும் பிரார்த்தனை யிடத்தும் நம்பிக்கை அற்றவனா யிருந்தேன்; அதன் பின்னரே, உடலை வளர்க்க உணவு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமானது உயிரை வளர்க்கப் பிரார்த்தனையும் என்பதை உணர்ந்தேன். அந் நாள் முதல் இந் நாள் வரை நான் பிரார்த்தனை செய்து வருகின்றேன்.

—காந்தியடிகள்

ஒவ்வொருவரும் அறிய வேண்டியவை

இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் 100-க்கு 7 பேர்கள் எனச் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கால் தெரிகின்றது.

***   ***   ***

இந்தியர்களின் சராசரி வயது 24 எனக் கடைசியாக எடுக்கப் பட்ட கணக்கு அறிவிக்கின்றது.

***   ***   ***

ஆனால் இங்கிலாந்தில் சராசரி வயது 50; பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் 48.

***   ***   ***

இந்தியரின் சராசரி வருஷ வருமானம் ரூ. 40.

***   ***   ***

ஆனால் ஓர் அமெரிக்கனின் சராசரி வருமானம் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ரூபா.

***   ***   ***

இங்கிலாந்திலுள்ள ஒருவரது சராசரி வருஷ வருமானம் எழுநூற்றைம்பது ரூபா.

***   ***   ***

இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் ஐந்தில் ஒன்று ஒரு வயது பூர்த்தியாவதற்கு முன்பே எமனுலகம் ஏகிவிடுகின்றது.

***   ***   ***

இந்தியரில் ஐந்திலொருவர் ஒரு நாளைக்கு ஒரு வேளையே சாப்பிட்டுக் காலம் கழிக்கின்றனர்.

***   ***   ***

வருஷா வருஷம் இந்தியாவிலிருந்து 40 கோடி ரூபா பெறுமான நெல் வெளி தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

***   ***   ***

துணிக்காக மட்டும் இந்தியா வருஷா வருஷம் 60 கோடி ரூபாவை அன்னிய தேசங்களுக்கு அனுப்பி விடுகின்றது.

பாரதியார்

(பரலி. திரு. சு. நெல்லையப்பர்)

செந்தமிழ் நாட்டிலே தோன்றிச் சிறந்த பாடல்களினால் தாய் நாட்டுக்குப் புத்துயி ரளித்த தற்காலப் பெரு மக்களில் காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியார் ஒப்பற்றவ ராவர். சென்ற சில ஆண்டுகளுக் கிடையில் தமிழ் மொழியில் உயிருள்ள பாடல்கள் பாடிய ஒப்பற்ற புலவர் பாரதியார் ஒருவரென்றே சொல்ல வேண்டும். தமிழ் உலகத்திலே பாரதியார் ஒரு மின்னல் போலத் தோன்றி மறைந்தார்.

காலஞ் சென்ற சுப்பிரமணிய பாரதியாரின் சரித்திரத்தை அவருடன் இளமை முதல் பழகிய அறிஞர் சோமசுந்தர பாரதியாரின் எழுத்தால் அறியலாம். ஆனால் பாரதியாரது பூரணமான ஜீவிய சரித்திரம் இனித்தான் வெளியாதல் வேண்டும்.

1906 அல்லது 1907-ஆம் ஆண்டா யிருக்கலாம். வங்காளத்தில் சுதேசியக் கிளர்ச்சி மும்மரமா யிருந்த பொழுது, தென்னாட்டில் சுதேசிய ஊக்கம் உயர் நிலையி லிருந்த காலத்தில் தூத்துக்குடியில் திரு. சிதம்பரம் பிள்ளை திரு. சுப்பிரமணியசிவம் முதலியவர்கள் மீது வழக்கு ஏற்பட்ட பொழுது திரு. பிள்ளையவர்கள் வீட்டில் ஒரு நாள் மாலையில், நான் பாரதியாரை முதல் முதலாகக் கண்டேன்.

அப்பொழுது நான் அவர் பெயரைக்கூடக் கேள்விப்பட்டிருக்கவில்லை. என்னுடன் நெடுநாள் பழகிய ஒருவர் போல அவர் எனது கையைப் பிடித்து இழுத்து உலாவுவதற்காக அழைத்துச் சென்றார். அன்றுதான் அவர் திருநெல்வேலியி லிருந்து தூத்துக்குடிக்கு வந்திருந்தார். ஊருக்குப் புதிது. வெளியே உலாவுவதற்காக என்னைத் துணையாக அழைத்துச் சென்றார். அப்பொழுது அவர் சென்னையில் நடந்த 'இந்தியா' பத்திரிகைக்கு ஆசிரியரா யிருந்தார். கல கலப்பான பேச்சு. குதூகலமான நடை. குங்குமப் பொட்டு. ஓயாது பாடும் வாய். ரோஜா நிறப்பட்டு அங்கவஸ்திரம். இவற்றை நான் என்றும் மறக்க முடியாது. பாரதியார் பாடிய

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மானிலத் தாயை வணங்குதும் என்போம்

* * *

எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
யிருந்ததும் இந்நாடே

என்ற தொடக்கத்து இரண்டு பாடல்களையும் காலஞ்சென்ற சென்னைப் பெரியாரான வி. கிருஷ்ணசாமி ஐயர் ஆயிரக் கணக்காக அச்சிட்டுப் பள்ளிப் பிள்ளைகளுக்குக் கொடுக்குமாறு ஏற்பாடு செய் திருந்தார். இந்தத் துண்டுப் பிரசுரங்களும், பாரதியார் சுதேச கீதப் புத்தகங்களும் சிதம்பரம் பிள்ளை யவர்கள் வீட்டில் ஏராளமாகக் கிடந்தன. அவற்றைப் படித்த பின்னரே அவற்றின் ஆசிரியர் பெருமையை ஒருவாறு உணர்ந்தேன். நான் அதுவரை படித்திருந்த பல பாடல்களிலும் காணாத புதுமையைப் பாரதியார் பாடலில் கண்டேன். அக்காலத்தில் மக்கள் உள்ளத்தில் தோன்றிப் பொங்கி யெழுந்த தேசபக்தி வெள்ளமே பாரதியாரின் சுதேச கீதமாக வெளியாயிற் றென்று சொல்லலாம்.

பின்னர் சுமார் மூன்று ஆண்டுகள் சென்ற பிறகு தேச பக்தர்களுக்கு அடைக்கலமாக விளங்கிய புதுச்சேரியில் சலவை பங்களாவில், நான் பாரதியாரை இரண்டாவது முறையாகச் சந்தித் தேன். அப்பொழுது பாரதியாரை ஆசிரியராகப் பெற்றிருந்த 'சூரியோதயம்' என்ற வாரப் பத்திரிகையில், உபபத்திராசிரியராக இருக்குமாறு நான் அங்கே சென்றிருந்தேன். பாரதியார் அதுகாலை பார்த்த பொழுது என்னை அவர் கூர்மையாக உற்று நோக்கினார். ஊக்க மற்று, உணர்ச்சி யற்று, உயி ரற்று அடிமைப் பட்டுக் கிடக்கும் தமிழ் நாட்டி லிருந்து வரும் இவனிடம் ஏதேனும் உணர்ச்சி, ஊக்கம், உயிர் இருக்கிறதா என்று அவர் சிந்தித்தது போலத் தோன்றியது. நான் புதுவையில் இருந்த காலத்தில் பாதி நாள் இராக் காலத்தைப் பாரதியா ருடனேயே கழித்தேன். அப் பொழுது பாரதியார் வறுமையில் வாழ்ந் திருந்த போதிலும் வந்த வர்களுக் கெல்லாம் அவர் வீடு சத்திரமாகவே விளங்கியது.

புதுவையில் அவர் வறுமையிலேதான் வாழ்ந்திருந்தார். ஆயினும் எல்லோரையும் வருத்தும் வறுமை அவர் உள்ளத்தை வருத்தவில்லை. இரவெல்லாம் அவர் பாடிக் கொண்டு ஆனந்தக் களிப்பிலே யிருப் பார். தாயுமானவர் பராபரக்கண்ணியை அவர் ஓயாமல் பாடுவார். அவர் பேச் செல்லாம் தேசப் பேச்சாயும், தெய்வப் பேச்சாயுமே யிருந்தன. இயற்கைக் காட்சியில் அவர் பெரிதும் ஈடுபட் டிருந்தார். அதிகாலையில் அவர் புதுவை நகரி லிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தி லுள்ள மடுவுக்கு நீராடச் செல்வார். அப்பொழுது பூபாள ராகத்தில் திருப்பள்ளுயெழுச்சி பாடிக்கொண்டு செல்வார்.

பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்

என்ற தொடக்கத்து ஐந்து பாடல்க ளடங்கிய பாரதமாதா திருப் பள்ளி எழுச்சியைப் பாடியபொழுது நான் அவருடன இருந்தேன். அல்லும் பகலும் அவர் தெய்வ சிந்தனையிலும் தேச சிந்தனையிலுமே ஈடுபட் டிருந்தார். சுதேச கீதங்களில் ஒரு பகுதியைத் தவிர்த்துப் பாரதியார் பாடல்களிலும், எழுத்துக்களிலும் பல புதுச்சேரியிலேயே இயற்றப்பட்ட வை யாகும்.

சுமார் பத்து ஆண்டுகள் புதுவையில் வாழ்ந் திருந்த பின்னர், பாரதியார் சென்னைக்கு வந்தார். அவர் புதுவையி லிருந்த காலத்தில் அவரது வியாசங்களை ஏற்று அவரை ஆதரித்துவந்த ' சுதேசமித்தி ரன் ' அவரை மீண்டும் ஓர் உப பத்திராசிரியராகக் கொண்டது. (காலஞ்சென்ற சுப்பிரமணிய ஐயர் காலத்தில் சில காலம் பாரதியார் மித்திரனில் உப பத்திராசிரியராக இருந்தார்.) ஆனல் அவரை ஓர் உப பத்திராசிரியராகக்கொண் டிருக்கும் பாக்கியத்தைச் 'சுதேசமித்திரன்' நீண்ட காலம் பெற்றிருக்கவில்லை. புதுவையில் அவர் வறுமையில் வாழ்ந்திருந்தபொழுது கஞ்சாப் பழக்கம் எவ்வாறே அவரைப் பற்றி விட்டது. அவர் தமிழ் நாட்டிற்குத் திரும்பி வந்த பின்னரும் அத் தீய வழக்கம் அவரை விடாமறபற்றி முடிவில் அவர் வாணுள் விரைவில் முடிவதற்கும் காரணமாய் நின்றது. நண்பர்கள் சொல்லி யும் கேளாமல் சென்னைக்கு வந்த பின்னரும் அவர் கஞ்சாவை அதிகமாக உட்கொள்ளத் தொடங்கிவிட்டார். அவர் வாழ்நாளில் பிற்காலத்தில் அவர் பாடிய பாடல்களிலும் கஞ்சாவெறியின் பயனை ஒருவாறு காணலாமென்றே நான் சொல்வேன்.

சென்னை-திருவல்லிக்கேணியில் துளசிங்கம் பெருமாள் கோயில் வீதியில் ஒரு வீட்டில் 1920-ம் ஆண்டு அவர் உயிர் துறந்தார். அன்று இரவு முழுமையும் நான் அவருடன் இருந்தேன். மற்ற நாட்களில் இருந்த கஞ்சா மயக்கத்துடன் அன்றிரவு அவரிடம் சாவு மயக்கமுஞ் சேர்ந்திருந்தது. நண்பர்களுக்குச் சாவாமை உபதேசஞ்செய்த பாரதி யார் சாக நேர்ந்தது. பாண்டி நாட்டில் எட்டையபுரத்தில் தோன்றிய உடல், தொண்டை நாட்டில் சென்னை - திருவல்லிக்கேணியில் சாம்ப லாகிக் கடலிலே கலந்தது.

நான் மேலே கூறியவாறு, பாரதியார் தமிழுலகில் மின்னல் போலத்தோன்றி மறைந்தார். அவர் தமது அற்புதப் பாடல்களாலும், அதிசயமான கட்டுரைகளாலும் தமிழ் மக்களுக்குப் புத்துயிர் அளித்தார். எளிய நடையில், அரிய கருத்துக்களை ஏற்றி இன்பமான பாடல்கள் பாடுவதில் பாரதியார் இணையற்ற புலவராக விளங்கினர். அவர் பாட்டிலும், உரையிலும் தமிழ் மாது புதுமையும், இளமையும், இனிமையும், எழிலும், ஒளியும், உயர்வும் கொண்டு விளங்குகின்றள். பழந் தமிழன்னைக்கு இளமை யளித்த புலவர் பெரு மக்களில் பாரதி

யார் ஒருவரென்று நான் போற்றுகிறேன். தென்றலின் இனிமையை யும், கடலின் பெருமையையும், வானத்தின் உயர்வையும், மலையின் மாட்சியையும் பாரதியார் தமிழிலே ஏற்றி யிருக்கிறார். பாவ நாசத்து அருமையின் தெளிவைப் பாரதியார் பாடலிலே காணலாம். அவர் பாடல்களிலும் கட்டுரைகளிலும் பல தமிழ் இலக்கியத்தில் நிலையான இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே

* * *

பாருக்குள்ளே நல்ல நாடு-எங்கள்
பாரத நாடு

என்பன போன்ற நாட்டுப் பாடல்களைப் படிக்கும் எவர் உள்ளந் தான் தேசபக்தியுடன் எழுச்சி பெறாது?

அவர் பாடிய கண்ணன் பாட்டை அரவிந்தர் போற்றுகிறார். பாஞ் சாலிசபதம் வீர ரசம் நிறைந்து விளங்குகிறது. வீரத் தமிழ்ச் சொலின் சாரத்தை அதிலே காணலாம். ஞானரதம் இன்பக் கதை. அவரது கட்டுரைகளெல்லாம் இனிய, எளிய, தெளிய, அழகிய நடை. எல் லோருக்கும் விளங்கும் இன்பத் தமிழ். அவர் பிற்காலத்தில் பாடிய பாடல்களிலும் எழுதிய உரைகளிலும் வீரச் சுவை அதிக மில்லை.

தமிழ் நாட்டின் தீவினைப் பயனால் கஞ்சா நோய் பாரதியா ரைப் பற்றா திருந்தால், அவர் நெடுநாள் வாழ்ந் திருந்து தமிழில் இன்னும் எத்தனையோ பாடல்களையும் எழுதி யிருத்தல் கூடும். ஆனால் அவர் வறுமையின் கொடுமையால் மேற் கொண்ட கஞ்சா அவரைக் கொன்றுவிட்டது. அதற்குக் காரணம் தமிழ்ச் செல்வர்களே யாவர். தமிழ் நாட்டுச் செல்வர்கள் அவர் பெருமையை அறிந்து அவரை வறுமையில் வாட விடாமல் ஆதரித் திருந்தால், அவர் வறுமையில் வருந்திக் கஞ்சாவை நாட நேர்ந்திராது. ஆயினும், விதியின் கதி அவ்வாறாயிற்று. புலவர் வறுமை புலவரைக் கொன்றது. ஆனால் இனி யேனும் தமிழ் நாட்டில் தோன்றிவரும், அறிஞர்களை, புலவர்களை, கவிகளை ஆதரிக்குமாறு நமது செல்வர்களுக்குப் பாரதியாரின் கதி ஓர் எச்சரிக்கை விடுக்க வேண்டும்.

பாரதியார் மக்கள் மீது அளவற்ற ஆர்வம் உடையவர்; தமிழ் மீது தணியாக் காதல் கொண்டவர். இதனைக் கீழ்வரும் அவரது பாடலில் காண்க.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்!'

தேச விடுதலையில் அவர் அல்லும் பகலும் சிந்தனைகொண் டிருந்தார். தெய்வத்தின் மீது உறுதியான பக்தி கொண்டவர். ஜாதி வேற்றுமை

யற்றவர். சமயத்திலே பெரும் பற்றுள்ளவர். சொல்லும் செயலும் ஒன்று பட்டவர். பெண் விடுதலேயில் பேரார்வம் கொண்டவர்.

பாரதியார் காலஞ் சென்ற பின்னரே அவரது பாடல்களின் பெருமையைத் தமிழ் நாடு பெரிதும் அறியத் தொடங்கி யிருக்கிறது. ஆயினும், தமிழ் மக்கள் இன்னும் பாரதியாரைப் பூரணமாக அறிய வில்லே. பாரதியார் தமது நூல்களேப் பதினுயிரக் கணக்காக அச்சிட்டு நாடெங்கும் பரப்ப வேண்டுமென்று ஆவல்கொண் டிருந்தார். ஆனல் அவர் விருப்பம் அவர் நாளில் நிறைவேறவில்லே. பாரதியார் பாடல் களே லட்சக் கணக்காகப் பல முறைகளில் அச்சிட்டு நாடெங்கும் பரப்ப வேண்டும். பாரதி பாடலே வாயுள்ள மக்க ளெல்லாம் பாட வேண்டும்; செவியுள்ள மக்க ளெல்லாம் கேட்க வேண்டும். அதனுல் தமிழ் நாடு பல வகைக் கட்டுகளி னின்றும் விடுதலே பெற்றுப் புது வாழ்வும் பெரு வாழ்வும் பெற வேண்டு மென்பதே பாரதியாரின் கனவாக இருந்தது. அவர் கனவை நனவாகச் செய்வதற்கு அவர் பாடிய பாடல்கள் பெரிதும் துணே புரியு மென்பது எனது கருத்து. பாரதி வாழ்க! வந்தேமாதரம்!!

தமிழ்த்தாய் வாழ்த்து

1. நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனேபோல் அனேத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

2. பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லேயறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலேயா ளமும்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—சுந்தரம் பிள்ளே

தமிழ் நாடக நிலை

(சுவாமி. சுத்தானந்த பாரதியார்)

தனித் தமிழ் நாடகங்களைத் தமிழர் நடித்துத் தனித் தமிழ்க் கலையை வளர்க்க வேண்டும். வங்காளத்தில் கிரீஷ்சந்திர கோசும், தாகூரும் நாடகக் கலை வளர்ச்சிக்குச் செய்துள்ள அரிய வேலையைத் தமிழரும் செய்யலாம். நேற்றுத் தலையெடுத்த வங்க மொழி இன்று அரிய கலை வளர்ச்சியுடன் மேனாடும் புகழும்படி நிலவுகின்றது. ஐரோப்பிய நாடுகளுக்கு வங்க வாலிபர்கள் வங்க மொழியில் நாடகங்களைத் தயாரித்துச் சென்று நடத்தி இசை பெறுகின்றனர். பதினாயிரம் ஆண்டுகளுக்கு மேல் நாகரிகச் செல்வியாகவும் இசை மடந்தையின் இளவரசியாயும் விளங்கும் நமது தமிழ் உறங்கலாமா? தமிழ் வாலிபர்கள் கலை வளர்ச்சிக்கு வீறுற்றெழுக!

1924-இல் ஸ்ரீமான் வ. வெ. சு. ஐயரும் யானும் தமிழ்க் கலை வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் தயாரித்தோம். அதில் ஒன்று நாடகம்.

நாடக மேடையைப் புனித மாக்க வேண்டும். (Drama is a gospel graphically acted shown and preached from the stage) என்பது எமது கொள்கை. நாடக மேடையைச் சமய சமூக ஆசார சீர்திருத்த மன்றமாகச் செய்தல் இன்றியமையாதது. சிவனும் நடராஜன். விஷ்ணுவும் அரங்கநாதன். உலகமே அவர்களுடைய ஆனந்த நடன சபை. இந்த உயர்ந்த எண்ணத்துடன் நல்லொழுக்கமும், சிறந்த கல்வியும், அருட்பணி யுணர்ச்சியும், இசைத் திறனும், கலை நயமும், நடன சக்தியு முள்ள இருபது தமிழ் வாலிபர்கள் முன் வருவார்களானால் தமிழ் நாட்டில் மிகவும் அரிய சீர்திருத்தங்கள் இயற்றலாம். மற்ற எந்த சாதனத்தினும் நாடகத்தின் வாயிலாக மிக எளிதாகச் சீர்திருத்தங்களைச் செய்யலாம். இதைக் கொண்டே நமது நாட்டில் அறுவடைக்காலம் முடிந்ததும் தொன்று தொட்டு தெருக் கூத்துகள் ஏற்பட்டன. அரிச்சந்திரன், நல்லதங்காள், காமதகனம், பிரகலாதன், ராமாயணம், பாண்டவர் வனவாசம், கிருஷ்ண லீலை முதலிய நாடகங்கள் தமிழ் நாட்டிலும் மலையாளத்திலும் (மலையாளத்தில் கதாகேளி என்ற நடிப்பு மிகவும் அருமையானது) ஆந்திரத்திலும் கன்னடத்திலும் இன்றும் நடிக்கப்பட்டு வருகின்றன.

வேறு நாகரிக நாடகங்களுக்கும் எல்லையில்லை. ஆனால் நாடகங்களின் இயல்பு இன்று எப்படி இழிந்துள்ளது? சொல்லித் தெரிய வேண்டுவதில்லை. மைசூரில் புனிதமான நாடகக் கலை வளர்க்கப்படுகிறது. Theatre என்று நாடக சஞ்சிகையும் வெளி வருகிறது. அப்படியே ஆந்திர மேடையும் சீர் பெற்று வருகிறது.

தமிழ் உறங்கற்க! தமிழ் தென் மொழிகளின் தாய்! தமிழ் விழித்தெழுக! தமிழ் தனிக் கலையாக வளர்க! நாடகம் என்பது இயல், இசை, ஓவியம், அழகு, இன்பம், அன்பு, காதல், கற்பு, உலகம் உள்ள விதம், அது இருந்த வேண்டிய விதம், வாழ்வின் போக்கு, வாழ்வின் கருத்து, வாழ்வு புனிதமுறும் வழி, சமயநெறி, சமதர்மம், கடவுளன்பு, ஆருயிரன்பு முதலிய பல பல விஷயங்களைக் கண் முன்னே நடத்திக் காட்டிக் கருத்திற் பதிய வைப்பது. இராமாயணத்தைப் பத்துத் தடவை படிப்பதினும் ஒரு முறை இராம நாடகம் பார்த்தால் மனத்தில் உடனே பதியும். இன்று ரஷ்யாவில் நாடகங்கள் மூலம் பொது ஜனக் கல்வி விரைவில் வளர்வது தெரிக! தமிழர் சமயத்தையும் பல மதங்களுக்குள்ள ஒற்றுமையையும் விளக்கிப் புனிதமான சீர்திருத்தக் கருவியாக உதவுதற்குத் தனித் தமிழ் நாடகம் இன்றியமையாதது.

பொழுது போக்குக்காக எப்பொழுதோ நேரம் வாய்த்த பொழுது நாடகம் கற்றுக்கொண்டு நடிப்போரினும், அதற்கென்றே தமது வாழ்நாளைச் செலுத்துகின்றவர்களால் தாம் நாடகம் சிறப்புறும். ஆனால் மக்கள் நாடகத்தைப் பற்றித் தாம் கொண்ட தவறான கொள்கையை இன்னும் மாற்றிக் கொள்ள இயலாதவர்களாக இருக்கின்றனர். இந்த அறிவற்ற எண்ணமே இப்பொழுது நாடகம் உள்ள தாழ்ந்த நிலைமைக்குத் தலையான காரணம்.

* * *

நாடகத்துக்கு நடிப்பே உயிரெனப் பலருக்குப் புலப்படவில்லை. பாட்டையே நாடகத்தின் பயனாக ஏழை மக்கள் எண்ணுகின்றனர். அவர்கட்குப் பகுத்தறிவு சிறக்கவில்லை. ஆனால் நல்லதை மட்டும் உணர அவரா லாகும். அஃது எப்போதெனின், உயர்ந்த நாடகத்தை நடித்து வெளிப்படையாகக் காட்டிச் சுவையை ஊட்டி விட்டோமானால் பிடித்துக் கொள்வார்கள். அதுவரை அவர் தாமே பாவனை மூலமாக நல்லது இனியது ஈதென அறிய ஏதுவில்லை. அது கற்றோருக்கு மட்டுமே இயல்வது.

—மணி. திருநாவுக்கரசர்

குழந்தை வளர்ப்பு

(' மறையோலி ')

குழந்தை என்பது ஒரு பயிரல்ல. ஓர் உயிர்ப்பிராணி. ஒவ்வொரு குழந்தையின் தேக வளர்ச்சியும், மனோ வளர்ச்சியும் வெவ்வேறு வகையானது. அவ்விரு வளர்ச்சிகளும் நம் பயிற்சியில் மட்டுமன்றி, நாம், குழந்தைகளின் திருஷ்டியிலும், சஞ்சாரப் பாங்குகளிலும் அமைக்கும் உபகரணங்களையும் ஒட்டியிருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் பிரத்தியேக விருப்பங்களும் வல்லமைகளும் மறைந்து கிடக்கின்றன. அவைகளைப் பெற்றோர் சாதாரணமாக அறிவது இயலாது. அவ்வக் குழந்தையின் திறமையை அனுபவத்தினாலும், கவனத்தினாலும் ஊகித்தறிந்து, அதனதன் அபிவிருத்திக்கேற்ற முறையை உபயோகிப்பதே குழந்தை வளர்ப்பின் முக்கிய கொள்கையாகும்.

'காக்கைக்கும் தன் குஞ்சுபொன் குஞ்சே'. தன் குழந்தையின் முன்னேற்றத்தில் நோக்கமில்லாத பெற்றோர் யார் உளர்? ஒருவருமிரார் என்பது உறுதி. எனினும் நோக்கம் மட்டுமிருந்தும் பயன் என்? நோக்கம் நிறைவேறுமாறு, வளர்ப்பு முறைகளை அனுசரித்து முயல வேண்டும்.

தாயின் பொறுப்பும் பெருமையும்

ஒரு குழந்தையின் சரீர சௌக்கியத்திற்கும், மனோ வளர்ச்சிக்கும் முதற்படி வீடும், அதைச் சுற்றிலுமுள்ளவைகளுமே யாகும். இவ்விரண்டிலும் வீட்டின் சக்தி அபரிமிதம். வீட்டிலேதான் நற்பழக்கமோ தீப்பழக்கமோ உற்பவித்து ஆயுட்கால முழுதும், நன்மை அல்லது தீமையையோ இன்பம் அல்லது துன்பத்தையோ பயக்கும்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்றார் பெரியோரும். இம்முதுமொழி பழக்க வழக்கங்களை மட்டும் குறிப்பதாகக் கொள்ளுவது கூடாது. சரீர சௌக்கியம், அறிவு வளர்ச்சி இவைகளையும் பூடகமாகக் குறிக்கிறது. இதன் உண்மையை ஆராயுங்கால், வீட்டில் முதன்முதல் கொடுக்கும் நற்பழக்கமும் பயிற்சியுமே, தேசத்தின்

யலதுறை அபிவிருத்திக்கும் அடிப்படை யாகிறது எனப் புலப்படும். இதிலிருந்து, ஒவ்வொரு தாயும் வீட்டின் சக்தியையும், தன் பொறுப்பின் இன்றியமையாத் தன்மையையும் எளிதில் உணரலாம். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'. முதன் முதலாகக் குழந்தையின் ஹிருதயத்தைத் திறந்து பலவிதக் கிளர்ச்சிகளை எழுப்பி, பயிற்சிகளை யூட்டி, குணத்தை உருக்கொடுக்கும் இடம் எது ? வீடே. இவ்வாறு, ஸமூக வாழ்க்கைக்கும், அதன் வாயிலாக தேச வாழ்க்கையின் மேன்மைக்கும் முக்கிய காரணமாய் விளங்கும் வீட்டின் சக்தியைச் சற்று ஆராய்வோம்.

நல்ல-சுத்தமான காற்று, போதுமான வெளிச்சம், ரமணீயமான காட்சிகள், இன்சொல் இயம்பி ஊக்கும் சுற்றத்தாரின் மருங்கு, குதூகலமும் போதுமென்ற தன்மையும் நிறைந்துள்ளோரின் மத்தி—இவைகளிடையே வளர்ந்துவரும் ஒரு குழந்தையின் வளர்ச்சி, தேக வன்மையிலும் மனோதிடத்திலும் மிக மேம்பாடாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வா றில்லாமல் பிணி, வறுமை, துன்பம், கவலை இவைகளினின்று ஊடாடி வெளிவரும் குழந்தைகளின் மனப்பான்மை குறுகியும், தேகத் திண்மை சோர்ந்தும் இருக்கும். சிலர் நோயினின்றும், ஏழ்மையினின்றும் வெளிப்படின், பரோபகார சிந்தை, கடவுள் பக்தி இவை முன்னினும் திடப்பட்டு, ஹிருதயமும் இளகினவர்களாய், அநுபவங்கள் அறிந்தவர்களாய், தீயிடை உருக்கிய தங்கம்போல் பிரகாசிக்கின்றனர். எனினும் இவ்வித மனோவன்மையுளோர் மிகச் சிலரே.

ஆயுள் பரியந்தம் ஒருவனுக்குச் சிந்தையின் அமைதியையும், சந்தோஷத்தையும் அளிக்க வல்லது வீட்டின் சக்தியே. ஏன் ? வேலை முடிந்த பிறகு அவன் எங்கே செல்கிறான் ? தன் வாழ்நாளின் பெரும் பாகத்தை, ஒவ்வொரு நாளும் அவன் எங்கே கழிக்கிறான் ? தனக்கு நெருங்கியவர்களான மனைவி, மக்கள் எங்கே இருக்கிறார்கள்? வீட்டிலே. ஆதலால் நம் சுக துக்கங்கள் எல்லாம், வீட்டின் நிலைமையையே சார்ந்திருக்கின்றன.

சுக துக்கங்களுக்குக் காரணமா யிருப்பது மல்லாமல், ஒருவனது வாழ்க்கையாகிய கப்பலுக்குப் பிரதான இயந்திரம் போன்றது வீட்டின் பராமரிப்பு. அநேக கவிகள் இதன் உண்மையை எடுத்துரைத்திருக்கிறார்கள். 'இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை.' என்ன உண்மைச் செறிவும், உறனும் இம்மொழியில் பொதிந்து கிடக்கின்றன!

வீடுகளின் மேம்பாடு சமூக மேம்பாட்டிற்கு மூலமாகிறது. அது, அதன் வழியில், தேச மேம்பாட்டிற்கு மூலமாகிறது. ஆகவே தேச நலம், வளம், மேம்பாடு முதலியவைகளுக்கு மூலம் வீட்டின் சக்தியே. இத்தகைய வீட்டிற்கதிகாரி யார்? ஒரு மாது,

தாய். ஆதலின் சமூக விருத்தியிலும், அதன் வாயிலாக தேச விருத்தியிலும் தாயின் பொறுப்பு எத்தகைத்து என எளிதில் உணரலாம்.

இத்துணை அரிதும், பெரிதுமான பொறுப்பை நம் நாட்டுத் தாய்மார்கள் அறிவது மில்லை; அறிந்திருப்பினும் அப் பொறுப்பைச் சரிவர வகிப்பது மில்லை. தகப்பன்மார்களுக்குப் போதுமானவரை கவனிப்பதற்கு, இக்காலத்தில் பொழுது இல்லை. ஆதலின் பொறுப்பு முழுதும் தாயையே சார்ந் திருக்கிறது. குழந்தைகளைப் பெறுவதும் தாயே. அவைகளை அன்புடன் வளர்ப்பதும் தாயே. அவைகளைத் தேக பலம், மனோ திடம் எய்துமாறு செய்ய வேண்டியதும் தாயின் பொறுப்பே. குழந்தைகள், பிற்காலத்தில் புகழும் செல்வமும் நோயற்ற வாழ்வும் பெற்று சந்தோஷமா யிருக்குமாறு செய்வதும் தாயே. சிவாஜியின் இளமைப் பருவத்தை நினைத்துப் பாருங்கள். சிவாஜியின் வீரப் பிரதாபத்திற்கு மூலம் அவாது தாயாரே யாவர்.

குழந்தை என்பது தாயிடம் வந்தடைந்த அடைக்கலப் பொருள் என்னலாம். அடைக்கலம் அடைந்தோரைக் காப்பாற்றுதல் அவசியமல்லவா? அடைக்கலம் உற்றோரின் அவா என்ன என்பதை முதலில் அறிந்து கொள்ளுவது அதனினும் அவசியம். அந்த அவாவுக்கும் சமூகக் கொள்கைக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களைக் கவனித்துத் தக்கவாறு செய்தலே தகைமை யல்லவா?

குழந்தை வளர்ப்பு என்பது அரியதோர் துறை. இதன் கொள்கை என்ன? குழந்தை தனக்கும், தன் சமூகத்திற்கும், அதன் வாயிலாக தேசத்திற்கும், கடவுளுக்கும் ஆற்ற வேண்டிய பணிகளைப் பயிற்றுவதே. தனக்கும் சமூகத்திற்கும் பயன்படச் செய்வதே.

கடமைகள் மூன்று வகைப்படும். 1. தனக்கு 2. சமூகத்திற்கு, அதன் வாயிலாக தேசத்திற்கு 3. கடவுளுக்கு. இவ்வண்ணம் கடினமான கடமைகளைச் செய்வதற்கு, தேக பலமும் மனோ வளர்ச்சியும் அடிப்படை. இவ்விரண்டையும் குழந்தை அடையுமாறு தாய் செய்யக் கடமைப்பட்டவள்.

குழந்தை வளர்ப்பு முறைகளை எந்த வயதில் துவக்குதல் நன்று எனக் கேட்கலாம். குழந்தை 3, 4 மாதங்களில் முதன் முதலாகப் புன்னகை புரியத் தொடங்கும் போதே, தாய் விழித்துக் கொள்ள வேண்டுமென்று அனுபவஸ்தர்கள் சொல்லுகிறார்கள்.

குழந்தை வளர்ப்பில் சம்பந்தப்பட்டவர்கள் முக்கியமாக, குழந்தையின் தாய், தந்தை, உபாத்தியாயர் ஆகிய இவர்களே. ஆதலின் இவர்க ளெல்லோரும் வளர்ப்பு முறைகளை நன்கறிந்து

இருத்தல் அவசியம். உபாத்தியாயர் கல்வி முறைகளில் மட்டும் சம்பந்தப்பட்டவர். ஆகவே பெற்றோருக்கே பொறுப்பு அதிகம்.

குழந்தை வளர்ப்பு விஷயத்தில் அறிந்து கொள்ள வேண்டியவை சரீர சாஸ்திரம், தேக ஆரோக்கிய விஷயங்கள், மனோவிருத்தி சம்பந்தமான நூல்கள், கல்வி முறைகள் முதலியவைகளாகும். அந்தந்தக் குழந்தையின் பிரத்தியேகமான குணங்களையும், நடத்தைகளையும் அறிந்து, அததற்கேற்ற முறைகளை அனுசரிப்பது அவசியமானது.

தாய்மார்களும், தந்தைமார்களும் தத்தம் பொறுப்பை அறிவார்களாக.

சிறுவர்கள் அறிவுடைய இயங்கு திணைப் பொருள்கள். அவர்கள் கல்லைப் போன்ற சடப்பொருள்கள் அல்லர். அவர்களுக்கு மகிழ்ச்சி யூட்டத் தக்க பல இனிய கதைகளைச் செப்பி நல்லுணர்ச்சியை நாடோறும் இன்முகத்துடன் குளிர்ந்த மொழிகளால் ஊட்டி வருதல் வேண்டும். அவர்களுக்கு வேலை தராவிட்டால் அவர்கள் பேசியே தீருவார்கள் என்ற இச் சிறிய உண்மையினை அறியாதவர்கள் ஆசிரியர்களாக இருத்தற்கு ஒரு சிறிதும் அருகர் அல்லர். சிறுவர்களை எக் காரணம் பற்றியும் அடிக்காமல் வளர்க்கலாம் என்பது எமது முடிந்த நோக்கம். ஆனால் அது மிகவும் பொறுமையுடனும் அறிவுடனும் ஆற்றலுடனும் செய்யப்பட வேண்டும். உண்மையிலே உயர்தர பாடசாலை ஒன்றிலே சில பிள்ளைகள் செய்த குற்றத்தைக் கண்டறிய மாட்டாத ஆசிரியர் அனைவர்க்கும் நான்கு அணு அபராதம் விதித்தார். எல்லோரும் அத் தொகையைச் செலுத்தினர். இதனால் அந்த ஆசிரியர் ஆற்றலும் அறிவும் புலப்படவில்லையா? அநியாயமாக அபராதம் செலுத்திய மாணவர்கள் உபாத்தியாயரை வெறுக்கின்றனர். குற்றம் செய்தவர்கள் குதூகலிக்கின்றனர். இதுதான் விளைந்த பயன்.

*** *** ***

சரியான நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்படாததன் காரணமாக இந்தியாவில் 100-க்கு 47 வீதம் நிலங்கள் பயிர் செய்யப்படாமல் கரம்பாகக் கிடக்கின்றன.

*** *** ***

சில வருஷங்கள் இந்தியாவில் சர்க்கார் உத்தியோகம் பார்த்துவிட்டு இங்கிலாந்து சென்று அங்குத் தங்கியிருப்பவர்களுக்கு உபகாரச் சம்பளம் இந்தியாவின் வரிப்பணத்திலிருந்தே கொடுக்கப்படுகின்றது. இதற்காகக் குறைந்தது வருஷம் ஒன்றுக்குச் செலவழிக்கப்படும் தொகை 37 லட்சத்து ஆயிரத்து அறுநூற்று எழுபத்தேழு பவுன்கள், அதாவது 5 கோடியே, 55 லட்சத்து 25 ஆயிரத்து நூற்றைம்பத்தைந்து ரூபா.

ஸ்ரீ மேஹர் பாபாஜியின் பொன் மொழிகள்

(மொழி பெயர்த்தவர் திரு. எஸ். வி. இரத்தின சபாபதி)

1. என்று இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற பிரிவு ஏற்படுத்தப்பட்டதோ அன்றே இந்தியாவும் தாழ்த்தப்பட்டு விட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப்படும் போதுதான், இந்தியா ஏகபோகமாகத் தனிப் பெருஞ் சிறப்பினை யுடைய நாடாக ஆகா விட்டாலும், உலகி லுள்ள சிறந்த நாடுகளில் ஒன்றாக விளங்கும் பெருமை வாய்ந்ததாகும்.

* * *

2. செய்யும் சீர்திருத்தங்கள் அனைத்தும் கல்வியை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டுமே யன்றி பலாத்காரத்தைக் கொண்டிருத்தல் கூடாது. மக்கள் விரும்பாத எந்த மாறுபாட்டையும் சட்ட சபையின் மூலமாகக் கொணர்தல் கூடாது. எந்தச் சீர்திருத்தத்தையும் செய்யு முன்பு முதன்முதலாக மக்களுடைய மனப்பான்மையை மாற்றி, அவர்கள் தற்போது இருக்கும் நிலைமையினின்றும் மாறி முன்னேற்ற மடைதற்குச் சீர்திருத்தம் வேண்டுமென்பதை உணருமாறு செய்தல் வேண்டும்.

* * *

3. எங்கும் பரந்து இருக்கும்படியான அந்த ஒரு கடவுளே கல்லாகவும், இரும்பாகவும், தாவரமாகவும் (வாயில்லாப்) பிராணியாகவும், மனிதனாகவும் இருந்து பற்பல விதமாக நடிக்கிறார். அவர் அந்த அநுபவங்களுள் ஒவ்வொன்றன் மூலமாகவும், தம்முடைய சொந்த மாயத்தினாலும், தந்திரத்தினாலும் அவதாரங்கள் பல எடுக்கிறார். மற்றும் பிரிக்க முடியாத அந்தக் கடவுளே அறிந்த ஒரு தோற்றத்தின் உஜ்ஜீவிப்பின் மூலமாகவோ அல்லது ஆத்ம ஞான முதிர்ச்சி பெற்ற தோற்றத்தினாலோ மாயத்திற்கும் தந்திரத்திற்கும் மேலாகவுள்ள தம்முடைய உண்மை நிலையை அநுபவிக்கிறார்.

* * *

4. உண்மை பக்தி (தெய்வ வழிபாடு) என்பதற்கு மத சம்பந்தமான சடங்குகளை அத்யாவசியமாக அநுசரிக்க வேண்டுமென்பதோ, மந்திரங்களை ஜபிக்க வேண்டுமென்பதோ அர்த்தமல்ல; ஆனால் கடவுளின் ஏதாவதொரு நாமத்தை இடைவிடாது

ஸ்மரனே செய்தல் அல்லது சதா சர்வ காலமும் இறைவனைப் பற்றி நினைத்தல் என்பதே நிச்சயமான அர்த்தமாகும்.

* * *

5. எவனொருவன் எல்லா வழிகளிலும் தாழ்த்தப்பட்டபோதிலும் தன்னுடைய புத்தி சுவாதீனத்தை மட்டும் இழந்து விடாது அமைதியாக விருந்து தன்னுடைய துரதிருஷ்ட காலத்திலும் அதிருஷ்ட காலத்தில் அடையும் சந்தோஷத்தைத் தான் அடைகிறுன் என்ற உணர்ச்சியும் பெற்றிருக்கின்றுனே அவனே உண்மையில் வீர புருஷனுவான்.

* * *

6. எவ்விதம் பிணத்திற்கு மரணம் இல்லை யென்பது நிச்சயமோ, எவ்விதம் வெட்க மென்பது பெரும் பாவிக்கு இல்லையென்பது நிச்சயமோ, எவ்விதம் புலன்களில் கட்டுப்பட்ட சிற்றடிமைக்குப் பேரின்பம் இல்லை யென்பது நிச்சயமோ, எவ்விதம் மெய்யன்பனுக்குப் பகைமை இல்லை யென்பது நிச்சயமோ அதேபோல் உண்மையான ஆத்ம சாதகனுக்கு வெல்லக் கூடாத இடையூ ருென்றும் இல்லை என்பது நிச்சயம்.

* * *

7. விலை யுயர்ந்த பரல் மாணிக்கத்தை யாரே ஈயத் தகட்டில் பதிய வைப்பர்? மலத்தை யுண்பவர் யாரே? வண்ணுத்திப் பூச்சியைத் துப்பாக்கியால் சுடுபவர் யாரே? பாலொடு உப்பைக் கலப்பவர் யாரே? தம்மிடத்துள்ள இனிய குயிலைப் பிறரிடங் கொடுத்து காகத்தைப் பெறுவார் யாரே? இவற்றிற் கெல்லாம் நீ ஆணித்தரமாக எதிர்மறையிலேயே பதி லிறுப்பாய். ஆனுல் உலக போகத்தில் உழன்று கிடக்கும் ஒவ்வொரு மனிதனும் ஈசுவரனே மறந்த தன்னுடைய ஒவ்வொரு வாழ் நாளிலும் எப்படியோ மேற் குறிப்பிட்ட காரியங்களை யெல்லாம் ஒரு வழியில் இல்லை யெனில் மற்ருெரு வழியில் செய்துகொண்டுதான் இருக்கின்றுன்.

* * *

8. வறுமையோ, துக்கமோ அல்லது துரதிருஷ்டமோ உன்னிடத்தில் பெருக்கெடுத் தோடும்போது நீ மனத் தளர்ச்சி, பீதி முதலியவைகளை அடையாதே. இதனுல், பொறுமையையும் (எத்தகைய கஷ்டங்களையும் சகிக்கக்கூடிய) சகிப்புத் தன்மையையும், நீ பெறுதற்குக் கடவுள் உனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தனரென்று கருதி, அதற்காக அவருக்கு வந்தனே புரி. கஷ்டங்களைச் சகிக்கக் கூடிய சக்தியைப் பெற்ற ஒருவன் ஞான மார்க்கத்தை எளிதில் அடைகிறுன்.

* மரணத்திற்குப் பின் மனிதர் நிலை

(திரு. தாஸ் குப்தா)

'மூன்று வருஷங்களாக நான் ஆவி யுலகத்தின் அற்புதங்களை நேராகவே கண்டு வருகின்றேன். ஆவி யுலகத்தி லிருந்து நேராகவும் எனக்குப் பல கடிதங்கள் கிடைத் திருக்கின்றன. அவற்றை அனைவரும் பிரத்தியட்சமாகக் காணலாம்.

பத்து வருஷங்களுக்கு முன்பு எனக்கு இவற்றிலெல்லாம் சிறிதும் நம்பிக்கை கிடையாது; ஆத்மா, ஆவி, பேய், பிசாசு முதலியவைகளில் நம்பிக்கை யில்லாம லிருந்தது. ஆத்மா என்பது ஒன்று உண்டானால் அது இவ்வுடலுடன் அழிந்துவிடுகின்றது என்று நான் நினைத்து வந்தேன். பேய்களைப்பற்றிய கதைகளில் எனக்கு நம்பிக்கை கிடையாது. பேயைக் கண்டேன் என்று கூறுபவர்களைக் கண்டால் எனக்குச் சிரிப்புத்தான் வரும்.

ஆனால் திடீரென எனது எண்ணங்கள் மாறிவிட்டன. புதிய அறிவு திடீரென ஓர் அனுபவத்தின் மூலம் எனக்கு ஏற்பட்டது. மரணத்திற்குப் பின் வாழ்வு உண்டென்பதில் எனக்கு இதன் பின்தான் நம்பிக்கை உண்டாயிற்று.

விநோத நடவடிக்கைகள்

1922-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் உள்ள எனது மாளிகையிலும், கிராமாந்திரத்தில் உள்ள எங்கள் வீட்டிலும் நடந்த சில விசித்திரமான சம்பவங்கள் என்னை பிரமிக்கச் செய்தன. கல்லூரி பண்டிதர்கள், உயர்ந்த அதிகாரிகள், போலீஸ் சூப்பரிண்டுகள் முதலிய பல படித்தவர்களும் அச் சம்பவங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்து எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் உண்மையே என்பதை ஒப்புக்கொண்டனர். அதன்பின் சிறுகச் சிறுக எனக்கு ஆவி யுலகத்தில் நம்பிக்கை ஏற்பட ஆரம்பித்தது.

---

* இது சில மாதங்களுக்கு முன் கல்கத்தாவில் நீதிபதிகள், பண்டிதர்கள், பல பெரியோர்கள் கூடிய கூட்டத்தில் வங்கவாசிக் கல்லூரி ஆசிரியராயிருக்கும் திரு. தாஸ் குப்தா செய்த சொற்பொழிவாகும்.

பெண் மரணம்

எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த சிறு பெண் ஒருத்தி 1922-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ஆந் தேதியன்று உயிர் துறந்தாள். எழு வயது கொண்ட அச் சிறுமியின் பெயர் பரூல். நாங்கள் அனைவரும் அப் பெண்ணின் மரணத்தால் மிகுந்த வருத்தமடைந் திருந்தோம். ஏனெனில் அப்பெண்ணின் மீது அனைவருக்கும் பிரியம் அதிகம். அவளது விளையாட்டையும், அன்பான வார்த்தைகளையும் இழந்த மற்றக் குழந்தைகளும் மிகுந்த வருத்தம் அடைந்தனர்.

அப்பெண் மரணமடைந்ததற்கு மூன்று வாரங்கள் கழித்துக் கல்கத்தாவில் உள்ள எனது மாளிகையில் ஒரு விசித்திரமான பெண் தோன்ற ஆரம்பித்தாள். என் வீட்டுப் பெண் குழந்தைகளுடன் இப்பெண் விளையாடியதாகவும் தெரிந்தது. குழந்தைகள் யாவரும் இவளைக் கண்டதாகவும் இவளுடன் விளையாடியதாகவும் கூறி வந்தனர். ஆனால் குழந்தைகளின் கண்களைத் தவிர வேறு எவரது கண்களுக்கும் இவ்விசித்திரப் பெண் தென்படவில்லை.

இப்பெண் விலை உயர்ந்த பாவாடைகளைத் தரித்திருப்பதாகவும் நகையும் ஏராளமாகப் போட்டுக்கொண் டிருப்பதாகவும் அடிக்கடி வரும்போதெல்லாம் தங்களுக்குப் பட்சணம் கொண்டுவந்து கொடுப்பதாகவும் குழந்தைகள் கூறினார்கள். பெண் மிகுந்த அழகானவள் என்றும் ஆனால் உடல்தான் நிழல்போல இருப்பதாகவும் குழந்தைகள் உரைத்தார்கள்.

இதன் பின்தான் எங்கள் வீட்டில் பல விபரீத சம்பவங்கள் நடைபெறத் தொடங்கின. பல சாமான்கள், பூட்டி யிருந்த அறையிலிருக்கும் சாமான்கள் எவ்வாறோ மாயமாக வெளியில் வந்து கிடந்தன. பூட்டிவைத் திருந்த கண்ணாடி பீரோக்களில் உள்ள பொம்மைகள் தரையில் கிடந்தன. தரையில் கிடப்பதை எடுக்கப் போனால் அடுத்த நிமிஷம் அவைகள், படுக்கையின்மீது கிடக்கும். பல சமயங்களில், ராதா—கிருஷ்ண படத்திற்கு முன், பொம்மைகள் யாவும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஆனால் அந்த இடத்திற்கு ஒருவருமே சென்றிருக்கமாட்டார்கள்.

மாயமாய் மறைந்த அடுப்பு

ஒரு நாள் இதைவிட வேடிக்கையான ஒரு சம்பவம் நேரிட்டது. எனது தாயார் மிகுந்த ஆசாரமானவராதலால், தனியான ஓர் அடுப்பிலேயே சமைத்து உண்பது வழக்கம். ஒரு நாள் திடீரென அவ்வடுப்பு மாயமாக மறைந்து விட்டது. எனது தாயார் வேறு அடுப்புகளில் செய்த உணவை அருந்தமாட்டார். ஆகவே அன்று முழுதும் எனது

தாய் பட்டினியாகவே யிருக்க நேர்ந்தது. ஆனால், மாலையில் எங்கிருந்தோ அந்த அடுப்பு திரும்பி வந்து விட்டது. அதைக் கண்டு நாங்கள் மிகுந்த ஆச்சரிய மடைந்தோம்.

சிறிது நேரத்தில், இதற்குக் காரணமும் ஒருவாறு விளங்கியது. எனது சகோதரி ஒருத்தி நவசாரியில் அன்று காலை இறந்து விட்டாள். காலையில், கல்கத்தாவிற்கு இச்செய்தி தெரியாது. தெரிந்திருந்தால் எனது தாய் சாப்பிடாது பட்டினியாக விருந்திருப்பார். சாயங்காலம்தான் இச்செய்தி கிடைத்தது. எனது தாய் பட்டினி கிடக்கவேண்டுமென்பதை உத்தேசித்துத்தான், அடுப்பும் மாயமாக மறைந் திருக்கிறது.

இன்னும் பல விதமான விசித்திரங்களும் நடந்தன. பெட்டிகள் தாறுமாறாக மாற ஆரம்பித்தன. பெட்டிக்குள் ளிருந்த குழந்தைகளின் பட்டுச் சட்டைகள் வெளியில் கிடக்க ஆரம்பித்தன. நகைகளும், இரும்புப் பெட்டியி லிருந்து வெளியே வரத் தொடங்கின. இவற்றை யெல்லாம் கண்டு நாங்கள் மிக கலவர மடைந்து போலீசுக்குத் தெரியப்படுத்தினோம்.

போலீஸ் விசாரணை

போலீசாரும் வந்து விசாரணை நடத்தினர்; ஒவ்வொருவரையும், நன்றாகப் பன்முறை குறுக்கு விசாரணை செய்தனர்; ஆனால் கடைசியில் தங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை என்று கூறிவிட்டனர்; தங்களால் இந்த விஷயத்தில், எவ்வித உதவியும் செய்ய முடியாதென்று உரைத்து விட்டனர்.

போலீஸ் இன்ஸ்பெக்டரான திரு. ஹமித் எ[illegible]பவர் மட்டும் எனக்கு அந்தரங்கமாக ஒரு யோசனை கூறினார்; [illegible]ாவது ஒரு பூசாரியை அழைத்து தேவதைகளுக்குப் பூசை போ[illegible]மாறு கூறினார். எனக்கு இதற்குமேல் என்ன செய்வதென்றே [illegible]பவில்லை. மிகுந்த மனக்கலக்கத்துடன், நான் வங்காள பிரும்ம ஞா[illegible] சங்கத்திற்குச் சென்றேன்.

சந்தேகக் கிளர்ச்சி

இது ஓர் ஆவியின் சேஷ்டையாக இருக்கக் கூடுமா[illegible] பதையே நான் அறிய விரும்பினேன். ஆவியா யிருந்தால் இதை [illegible] வாறு சாந்தப்படுத்துவது என்பதையும், அந்த ஆவி யாருடைய[illegible] என்பதை எவ்வாறு அறிந்துகொள்வதென்பதையும் அறிய நான[illegible] ஆவல் கொண்டேன்.

பிரும்ம ஞான சங்கத்தின் காரியதரிசியான பண்டித துளசி தாசரைக் கண்டு நான் பேசினேன். அவர் நான் கூறியவைகளை

வெகு அனுதாபத்துடன் கேட்டுவிட்டு, பிரின்சிபால் யோகேந்திரநாத மித்திரரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். மூன்று மணி நேரம்வரை எனது வரலாற்றைப் பிரின்சிபால் பொறுமையுடன் கேட்டார்; அதன்பின், இது ஓர் ஆவியின் வேலையே என்பதில் சந்தேக மில்லை யென்று கூறினர். மறு உலகத்தி லிருந்து என் னுடன் பேச விரும்பும் ஓர் ஆவியே இந்த வேலைகளை யெல்லாம் செய்து வருவதாகப் பிரின்சிபால் உரைத்தார்; ஆவியின் செய்கைகளைக் கண்டு அச்சமுற்று ஆர்ப்பாட்டம் செய்வதால் அதன் கோபம் அதிக மாகுமென்றும், அதைச் சாந்தப்படுத்துவதே சிறந்ததென்றும் சொன்னர்.

ஆவியிடம் அன்பு

அதுமுதல் நான் அந்த ஆவியுடன் வெகு அன்போடு நடந்து கொண்டு வந்தேன். எந்தப் பூசாரியையும் மாந்திரீகரையும் அழைத்துப் பேய் ஓட்டுவதை அனுமதிக்க மறுத்துவிட்டேன். மரணத்திற்குப் பின் உள்ள வாழ்வைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலும் எனக்கு அதிகரித்தது. சொத்துக்களுக்கும் சாமான்களுக்கும் சேதம் நேர்ந்தால்கூட, மறு உலக வாழ்வைப்பற்றிய விவரங்களைத் திட்டமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென உறுதி செய்து கொண்டேன்.

மறு உலகக் கடிதங்கள்

அதன்பின் ஆவியின் துஷ்டத்தனங்கள் சிறிது சிறிதாக மறைந்துவிட்டன. மாளிகையின் மச்சி லிருந்து அச்சிறு பெண்ணின் ஆவியிட மிருந்து பல கடிதங்கள் விழத் தொடங்கின. அக் கடிதங்களில் சிறு சிறு செய்திகளே குறிக்கப்பட்டிருந்தன. தான் மனித உருவு கொண்டு குழந்தைகளுக்கு மட்டும் புலனுகுமாறு வந்து விளையாடியதாகவும், குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் கொடுத்ததாகவும் அப்பெண் ஆவி கூறியது; மரணத்திற்குப் பின்னும், தான் இருந்து வருவதை அறிவுறுத்துவதற்காகவே, வீட்டில் இந்த ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் செய்ததாகவும் கூறியது. அவ்வாறு தெரிவித்தபின் வீட்டில் நடக்கும் விபரீத விநோத சம்பவங்கள் யாவும் அடங்கிவிட்டன.

மாயப் பொம்மை

அதன் பின் நான் ஒரு ரப்பர் பொம்மையைக் குழந்தைகளுக்காக வாங்கி வந்திருந்தேன். அந்தப் பொம்மையின் பின் பக்கத்தை அமுக்கினல் விசில் சப்தம் போன்ற ஒலி கேட்கும். அதை நான் மறு உலகத்தில் வாழ்ந்துவரும் அச்சிறு குழந்தைக்குப் பரிசாக அளித்தேன். உடனே அந்தப் பொம்மை நேராக உயரக் கிளம்பியது. விசில் சப்தமும் கேட்டது. மச்சில் சென்று தாக்கியதும் மாயமாக

மறைந்துவிட்டது. ஆனால் பொம்மையை அமுக்கும் கையும் மேலே தூக்கிச் செல்லும் உருவமும் எங்களது கண்களுக்குப் புலப்படவில்லை.

ஒவ்வொரு நாளும் ஆவி யுலகச் சிறுமி சில செய்திகளைக் கடிதங்கள் மூலம் அனுப்பிக்கொண்டே யிருந்தாள். கல்கத்தாவிலிருக்கும் காலத்தில் மச்சி விருந்து வரும் துண்டுக் கடிதங்கள் மூலமாகவே எங்களுக்குச் செய்திகள் கிடைத்துக்கொண் டிருந்தன.

வீண் ஜாலவித்தையாக வில்லாம லிருக்கவேண்டு மென்பதற்காக நான் சகல விதமான முன் ஜாக்கிரதைகளையும் எடுத்துக் கொண்டேன். சிறிது காலங் கழித்துப் பரூலின் ஆவி தனக்குக் கயாவில் பிண்டம் போடவேண்டு மென்று கேட்டுக்கொண்டது; எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த சில குழந்தைகளுக்கு ஆபத்து நேரும் என்றும், அதற்காக முன்னமேயே கிராமத்திற்குச் சென்றுவிடுமாறும் எச்சரித்தது.

நாங்கள் கிராமத்திற்குச் சென்றபின் நேராகக் கடிதங்கள் மூலமாகவும், பத்து வயதான எனது இரண்டாவது புதல்வி மூலமாகவும் எங்களுக்குச் செய்தி அனுப்பிக்கொண்டே வந்தது. எனது இரண்டாவது புதல்வி மட்டும் அந்த ஆவியைப் பார்க்கவும் அதன் வார்த்தைகளைக் கேட்கவும் முடியும். மற்றவர் கண்களுக்கு ஒன்றும் புலப்படாது. மற்றவர்களுக்குச் சப்தமும் கேட்காது.

மாண்டவர்களுக்கு உணவு

சென்ற காலத்தில் நடந்த சம்பவங்களும் நிகழ்கால நிகழ்ச்சிகளும் வெகு சமீபத்தில் நடக்கப்போகும் சம்பவங்களும் இந்த ஆவிக்குத் தெரிந்தது.

மரணமடைந்தவர்களின் வாழ்வைக் குறித்தும், மறு உலகத்தின் அழகைக் குறித்தும் அது கூறியது. மாண்டுபோன மற்றும் சில உறவினர்களையும் பரூலின் ஆவி எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது. அந்த ஆவிகளும் வந்து எங்களை ஆசீர்வாதம் செய்து நாங்கள் அளித்த உணவுகளை உண்டன. என் கண் முன்னாலேயே அவைகள் உணவை உட்கொண்டன. தான் பரூலின் ஆவிதான் என்பதை அந்த ஆவி நன்றாக நிரூபித்து விட்டது. பரூல் இவ்வுலகத்தி லிருக்கும்போது நடந்த சம்பவங்களைப்பற்றியும், தனது தாய் தந்தை உறவினர் முதலியவர்களைப்பற்றிய பூர்ணமான விவரங்களையும் சரிவரச் சொல்லியது. அந்த ஆவி மனிதரால் முடியாத பல அற்புதங்களைச் செய்தது; மாண்டு போன உறவினர்களை உண்ணுமாறு செய்தது. மற்ற ஆவிகளிட மிருந்தும் செய்தி

கிடைத்தது. குடும்பத்தில் நேரவிருக்கும் ஆபத்துகளைக் குறித்து ஆவி கூறியவை அனைத்தும் உண்மையாகவே நேர்ந்தன.

கயாவில் பிண்டம்

பருலின் ஆவி கேட்டுக் கொண்டதற் கிணங்க, நாங்கள் கயாவில் பிண்டம் போட்டோம். அதன் பின், பருல் இவ்வுலகில் தோன்றுவது வெகு அரிதாகி விட்டது. வெகு நாட்கள் கழித்து எப்போதாவது ஒரு செய்தி கிடைக்கும். கடைசியில் வருவதையே நிறுத்தி விட்டது.

[பண்டித தாஸ் குப்தா, தமது பிரசங்கத்திற்குப் பின் ஒரு கட்டுக் கடிதங்களை எடுத்துக் கூட்டத்தில் உள்ளவர்களுக்குக் காட்டினர்; அவைகள் தாம் ஆவி யுலகத்தி லிருந்து கிடைத்த செய்திகள் என்று கூறினர். கூட்டத்தி லிருந்தவர்கள் யாவரும், அவைகளை வெகு குறிப்பாகப் பரிசோதித்தனர்.

பண்டித துளசி தாசரும், பிரின்சிபால் யோகேந்திர நாதமித்திரரும், ராவ் பகதூர் சாந்தி சரண சாட்டர்ஜியும், திரு. தாஸ் குப்தா கூறிய யாவும் உண்மையே என உரைத்தனர்.]

பிறர் துன்பம் கண்டு இரங்குங்கள். அவர் துன்பத்தை நீக்குமாறு கூடியவரை முயலுங்கள்.

* * *

உங்களுக்கு உள்ளதைக் கொண்டு திருப்தியா யிருங்கள். செல்வம் என்பது சிந்தையின் நிறைவு.

* * *

சிந்தனைகளும், கர்மங்களும் ஒரு பொழுதும் இறப்ப தில்லை. எனவே, புண்ணிய கர்மங்களைச் செய்யுங்கள். அவை உங்களுக்கு ஞானத்தையும், சித்த சுத்தியையும் அளிக்கும்.

* * *

நீங்கள் உங்கள் தோட்டத்தில் மல்லிகை, முல்லை, ரோஜாச் செடிகளும், மா, பலா, வாழை முதலிய பழ மரங்களும் வைத்து வளர்ப்பது போல உங்கள் உள்ளமாகிய தோட்டத்தில் அன்பு, பொறுமை, இரக்கம், அடக்கம், ஜீவ காருண்யம் முதலிய அழகிய செடிகளை வைத்து வளர்க்கலாம். பழக்கமாகிய நீர் பாய்ச்சி அவற்றை வளர்த்து வந்தால் தீய குணங்க ளெல்லாம் தாமே அழிந்து போம்.

—சுவாமி சிவானந்தர்.

‘தாமரைக்குச் சேறு, ரோஜாவுக்கு முள்’

பொடியின் தத்துவமென்ன ?

(‘இலைமறை’)

நான் ஒரு பெரிய ஹாலில் நின்றுகொண் டிருந்தேன்; கம்பீரமாகவும் பயமற்றவனாகவும் நின்றுகொண்டிருந்தேன்; வெளிச்சம் மங்கலாக இருந்ததால் இரவு என்றே நினைத்தேன்; திடீரென்று பின் பக்கம் என் பார்வை செல்ல, உருவிய வாள் தாங்கி நிற்கும் கையுடன் ஐவரைக் கண்டேன்; உடனே மனங் கலங்கிவிட்டேன். நான் பயந்தேனாயினும் அவர்கள் என்னைப் பார்க்காதது போலவே நின்றனர். ஆனால் வாஸ்தவத்தில் என்னை ஓடுவதினின்றும் தடுப்பதற்கே அவ்வைவர் நிற்கிறார்கள் என்று ஊகித்துக் கொண்டேன். அச்சமயம் பளீரென்று மின்சார விளக்குகள் அநேகம் எற்பட்டன. நான் நின்றுகொண் டிருந்த ஹாலிலுள்ளவையெல்லாம் எனக்கு நன்றாய்ப் புலப்பட்டன. எங்கும் நிசப்தமா யிருந்தது. எனினும் தோற்றம் மிகவும் கம்பீரமாகவே இருந்தது. நான் இருந்த அறை சாகலெட் வர்ணம் (பொடிக்கலர்) தீட்டப்பெற்றிருந்தது. அங்கிருந்த எல்லா வஸ்துக்களும் அந்த நிறமே. அந்த ஹாலில் நீள வாட்டில் ஒரு புறத்தில், இடம் நன்றாய் உயர்த்தப்பட்ட ஓர் ஒய்யாரமான மேடையில் பெரிய சிம்மாசனம் ஒன்று போடப்பட்டிருந்தது. அதற்குமுன் அழகிய சித்திர வேலை செய்யப்பட்ட பெரிய மேஜை ஒன்றும் போடப்பட்டிருந்தது. மேஜையில் பார்க்க மிகச் சிங்காரமான விளக்குகள் இரண்டு, இரண்டு ஓரத்திலும் வைக்கப்பட்டிருந்தன. அதற்குச் சற்று முன்பாக விசித்திரமான லஸ்தர் ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. சிம்மாசனம், மேஜை இவைகள் இருந்த மேடைக்குப் பின்னால் சுவற்றில் கத்திகள், கேடயங்கள் முதலிய பல ஆயுதங்கள் பார்ப்பதற்கு மிக ரமணீயமாயும், பயங்கரமாகவும் சந்திரப் பிறைபோல அடுக்கப்பட்டிருந்தன.

நான் எங்கிருந்தேன் என்றாவது, என்னை எதற்காக, காவலுடன் அங்கு நிற்க வைத்திருக்கிறார்கள் என்றாவது ஊகிக்கக் கூடவில்லை. என் பின் சற்று மறைந்து நின்ற ஐவர் தவிர வேறொருவரும் அங்கு இருந்ததாக நான் நினைக்கவேயில்லை.

திடீரென்று ‘ஐயோ’ என்ற ஓலச்சப்தம் கேட்டது. சற்று உற்றுக் கவனித்தேன். அது பெண் சப்தம் போலவும், வரவர அதிக அண்மையிலிருந்தே வருவதுபோலவும் அறிந்தேன். அக்குரல் என் மனைவி ‘ராதா’ வின் குரல்போலிருந்தது. நான் என்ன ! கனவு காண்கிறேனாவென்று நடுங்கித் திகைத்து நின்றேன். (உண்மையில் நான் கனவு கண்டுகொண் டிருக்கிறேன்.)

ஒரு நிமிஷநேரம் சென்றது. என்னுயிரும் துடித்துக்கொண்டிருந்தது. சப்தமும் நின்றுவிட்டது. திடீரென என் முன்னே என் மனைவி நிற்கக்

கண்டேன். அவளது பரிதாப நிலையை என்னென்று சொல்லுவேன். மகா கோர ரூபமாக இருந்தது. நீண்டு கறுத்தடர்ந்திருந்த அளகபாரம் சிதைந்து தோள் மேலும் மார்பு மேலும் கிடந்தது. கண்கள் கோவப்பழம் போல் சிவந்து, கோபாவேசத்தைக் குறித்து நின்றன. அவளது மென்மையான தேகம், காற்றில் தவிக்கும் மாந்தளிரை ஒத்து படபடவென நடுங்கிக்கொண்டிருந்தது. பளிங்கை யொத்த வழவழப்பும் பிரதிபலிக்கும் தன்மையும் கொண்ட அவளது இரு கன்னங்களும் கண்ணீர் வடிந்து, கறுத்தும் கன்னியு மிருந்தன? அவளது இரு அழகிய கைகளையும் இருவர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பதையுங் கண்டேன். இவ்வளவு மாறுதல்களையும், அவள் அங்குக் கொண்டுவந்து நிறுத்தப் பட்ட மறு க்ஷணத்திற்குள் கண்டுகொண்டேன். அவளும் என்னைப் பார்த்து விட்டாள். 'ஐயோ' என்று அலறினாள். அதுதான் தாமதம். நான் என் செய லற்ற நிலைமையை அறவே மறந்து அவளிருக்கும் திக்கில், ஹனுமார் கடலைக் கடந்ததுபோல் பாய்ந்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். இரு பலமான இரும்புப் பிடிகளை யொத்த இரண்டு கைகள் என்னைத் தடுத்து திமிர வொண்ணாது செய்ததையும் என் மனைவியும் விரீல், விரீல் என அலறி மூர்ச்சையற்றுக் கீழே விழுந்ததையுந்தான் அறிவேன். நான் மயக்கமுற்றுக் கீழே விழுந்து விட்டேன்.

II

நான் எவ்வளவு நேரம் மயக்கமுற்ற நிலையி லிருந்தேன் என்று தெரியாது. எனக்கு ஞாபகம் வந்தபொழுது இனிமையான சங்கீத வாத்தியங்களின் கோஷம் என் செவிகளை எட்டிற்று. வாத்தியங்களின் தொனி யுடனே ஒரு மாது பாடும் ரமணீயமான குரலும் கேட்டு ஸங்கீதத்தில் லயித்து, நல்ல நினைவுற்றேன். என் முன்னிலையில் என் அருமை ராதாவும் மயக்கந் தெளிந்து யதேச்சையாக நின்றுகொண் டிருந்ததைக் கண்டு மிக மகிழ்ச்சி கொண்டேன். எனினும் என் மகிழ்ச்சி நெடு நேரம் நீடிக்கவில்லை.

நான் கேட்ட பாட்டு ஒரு விருத்தம். பொடியின் பெருமைகளைப்பற்றியும் பொடி தேவதையின் துதியும் அதிலடங்கி யிருந்தது. அப்பாட்டின் சொல் நயம், கருத்தமைப்பு முதலியவை இணையற்று மிகவும் இனிமையாய் இருந்த தோடு அதைப் பாடின நாரீமணியின் குரலும் எடுப்பாக இருந்தது. அந்தப் பாட்டை நான் முழுதிலுங் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை. என் மூர்ச்சையற்ற நிலையில் நான் அதன் இன்பரசத்தைப் பருக இயலவில்லை. அப் பாட்டை எப்படியாவது நான் இப்பொழுது வாசகர்களுக்கு அறிவிக்க முயன்றும், முடியவில்லை.

திடீரென ஸங்கீதம் நின்றது. மேற் குறித்த ஒய்யாரமான மேடையில் ஒரு தேவதை, ஸ்திரீகள் புடை சூழ வந்து அங்குள்ள சிம்மாசனத்தில் அமர்ந் தாள். அரை நொடியில் அந்தத் தாதி ஸ்திரீகளெல்லாம் தேவதையின் சிம்மா சனத்தின் இரு மருங்கிலும் வெகு அலங்கிருதமாக நின்றனர். ஒரு நொடியில் நிசப்தம் குடிகொண்டது. ஒரு குண்டூசி கீழே விழும் சப்தமும் கேட்கக் கூடியவாறு அவ்வளவு அமைதி நிலவியது.

நானும் ஒரு நொடிக்குள் அந்தத் தேவதையை உற்று நோக்கினேன். தேவதையைப் பார்ப்பது ஒரு ஜோதியைப் பார்ப்பதுபோல் இருந்தது. என் கண்கள் கூசினவேயன்றி நான் ஒன்றையும் பார்க்கக் கூடவில்லை.

கணீரென்ற ஒரு பெண் குரலைக் கேட்டேன். 'நீங்கள் இருவரும் என் இங்குக் கைதியாக நிற்கிறீர்கள்' என்று தெரிந்துகொண்டீர்களா ?'

'கைதியாக' என்ற வார்த்தை சற்று அழுத்தமாகச் சொல்லப்பட்டது. நான் நடுங்கினேன். என் மனைவியும் நடுங்கினாள்.

'இல்லை' என்பதற்கு அறிகுறியாக நான் தலை யசைத்தேன். என் மனைவியும் அவ்விதமே செய்தாள்.

என் அப்பொழுதைய நிலையில் என்ன குற்றஞ் செய்திருக்கக்கூடும் என்று யோசித்தேன். மனோ, வாக்கு, காயமாகிய திரிகரணங்களாலும் யாதொரு பிழையுஞ் செய்ததாகத் தெரியவில்லை. நான் அறிந்த மட்டில், என் இல்லாளும், 'படிசொற் கடவாத பாவை,' 'பின்றூங்கி முன்னெழும் பேதை,' 'அடிசிற் கினியாள்,' 'அன்புடையாள்'. எங்களிருவரையும் சனீஸ்வரன், நள தமயந்தியரைப் பிடித்ததுபோல் பிடித்துவிட்டானோ என்று திகைத்து நின்றேன்.

முன்னமே கேள்விகேட்ட பெண்மணியே, என்னை நோக்கி, 'பொடியின் பெருமைகள் யாதென நீ அறிவாயா ?' என்று கேட்டாள்.

நான் அவளது வினாவைக் கேட்டதும், அடக்க முடியாது சிரித்தேன். அவளுக்குக் கோபம் பிறந்தது. என்னைச் சீறிய சினத்துடன் கண்ணில் தீப் பொறிகள் பறக்க நோக்கினாள். நான் என் சிரிப்பை அடக்க முடியவில்லை. அந்த ஸ்திரீ என் பின்புறம் யாரையோ நோக்கினதுபோல் இருந்தது. அவ்வளவுதான். என் தலையில் திடீர் என்று ஒரு பலத்த குட்டு விழுந்தது. நான் அதன் வேகத்தைப் பொறாது, உட்கார்ந்து மறுபடியும் எழுந்திருந்தேன். சரியாய் நிற்பதற்குள் மற்றோர் குட்டு அதே மாதிரி விழுந்தது. மறுபடியும் பொறுத்துக்கொண்டு, என் முழு மனோவன்மையையும் தேக வன்மையையும் திரட்டி சமாளித்துக்கொண்டேன். இவ்வாறு 10 குட்டுகள் எனக்கு விழுந்தன. என் எலும்புகள் தவிடுபொடியாகி யிருக்கும். இரத்தமும் கணக்கின்றிக் கசிந்தது. என்னைக் குட்டியது, பின்புறமிருந்த ஜவர் என்று என் மனைவி சொல்லத் தெரிந்துகொண்டேன். ஒவ்வொன்றும், ஸ்டீம் ஹாமர், (Steam Hammer) இலக்டிரிக் ஹாமர் (Electric Hammer) இடியைப்போ லிருந்தது. நான் மறுபடியும் ஸ்மரணை தப்பிவிட்டேன். எனினும் அந்தத் தேவதையின் வலிமையால் அதிசீக்கிரம் நினைவு வந்து வலியின் கொடுமையை அதிகரித்தது. என்னை வினவிய கேள்வியே என் மனைவிக்கும் போடப்பட்டது.

அவள் நான் பட்டபாடுகளைக் கவனித்துக்கொண் டிருந்ததால், தனக்கும் இதே கதி வருமே என்ற நடுக்கத்துடன், 'அம்மணி, எனக்குத் தெரியவாது. தாங்கள் தயவு புரிந்து எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்' என அதி விநயத்துடன் பதிலுரைத்தாள்.

'இம்மாது பொடிவைத்துப் பேசி என்னை மயக்கிவிட்டாள்' என்று எங்களைக் கேள்வி கேட்ட ஸ்திரீ கல்லென்று நகைத்தாள். உடனே சிங்காதனத்து வீற்றிருந்த தேவதை உள்பட எல்லாரும் நகைத்தனர்.

நானும் ராதாவும் மட்டும் வெறித்து நின்றோம். எங்களுக்கு ஒன்றும் புலப்படவேயில்லை.

திடீரென ஒரு மணியோசை கேட்டது. தேவதையுள்பட அனைவரும் சரேலென எழுந்து நின்று புறப்பட ஆயத்தமாயினர். என்னைக் கேள்வி கேட்ட ஸ்திரீயும் என்னிடத்தில் ஒரு புத்தகத்தைப் பிரித்து ஏதோ ஒன்றை வாசிக்க உத்தரவிட்டு புறப்படத் தயாரானாள். அவள் மறுபடியும் என்னை நோக்கி எங்க ளிருவரையும், நாங்கள் பண்ணின அபராதத்திற்காக இலேசாய் விடப்போகிறதில்லை யென்றும், நாங்கள் எவ்வித முயற்சியினாலும், உபாயத்தி னாலும் அங்கிருந்து வெளியேற முடியாது என்றும் பயமுறுத்த, ஸ்திரீகள் அனைவரும் அந்த ஹாலைவிட்டு வெளியே ஏகினர்.

நான் கிலேசத்துடனும் கிலியுடனும் அவள் காட்டிய கட்டுரையைப் படித்தேன். அது பின் வருமாறு:

'பொடியின் பெருமையையும் அதன் தத்துவத்தையும் அறியாதோர் அதைக் கொடிய பேயென்றும், பிசாசென்றும் தூற்றுகின்றனர்.

உண்மையை நோக்கினால் இப் பிரபஞ்சமே பொடிமயம்; ஒரு பெரும் மாயம். பிறக்குமுன் எங்கிருந்து வருகிறோம்? இறந்தபின் எங்கே செல்கிறோம்? என் றவைகளைக் கண்டுபிடிக்க முடியாது, பொடி வைத்து மூடப்பட்டிருக்கிறது. இசை, இலக்கியங்கள் பொடி வைத்து எழுதப்பட்டு நம்மை மயக்குகின்றன.

இப் பெரும் பரம்பொருளின் அம்சமே மூக்குப் பொடியாகும்.

மனிதனுக்கு விரும்பத் தக்கதும் இன்றியமையாதது மானவைகளில் ஈகை, உத்ஸாகம், சுறுசுறுப்பு, ஊக்கம், ஸ்நேகபாவம், குதூகலம் இவை முக் கியமான சிலவாகும்.

பொடியின் அடியார்கள் இவைகளை நன்கறிவார்கள். தற்கால சமூக வாழ்க்கையில் மிகவும் கொண்டாடப்பட்ட சமரசம் என்னும் கொள்கையைப் பரவச் செய்வதில் மூக்குப்பொடிக் கிணையில்லை. ஏழை, ஈனன், செல்வந்தன் என்ற பேதம் பொடியி னடியார்களிடத்தில் அறவே கிடையாது. இவ்விதத்தில் பொடியானது குடியரசு கொள்கைகளை விதைத்து வளர்க்கிறது.

ஈகை யென்பது அரும்பெருங் குணம் என்று அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. பொடியைப் போல், கொடைக் குணத்தைத் தூண்டும் மற்றொன் றைக் கூற முடியுமோ? நீங்களே யோசியுங்கள்.

சுறுசுறுப்பு, உத்ஸாகம், குதூகலம் இவைகள் பொடியி னடிமைகளே. ஒரு சிம்டா பொடியை உள்ளே 'கிர்' என்று நாசித்துவாரத்தின் வழியே இழுத் தால் ஆளே வேறு புதிய ஆள்தான். புத்துயிரும், குஷியும் உடனே சித்திக்கும். புத்தியைத் தீட்டி, அசைதியுற்று அமைதி கொண்டிருக்கும் நரம்புகளைத் தட்டி எழுப்பி, சுறுசுறுப்பு குதூகலம் அளிப்பதும் அப்பொடியின் மாயையே. ஒரு க்ஷணம்தான்; யோசனை யற்றவனுக்குப் புதிய உபாயம்; களைத்தவனுக்கு, ஒரு சஞ்சீவி. ஒரு பெரிய தமிழ்க் கிரந்த கர்த்தா பொடியின் பொய்க்காத அடியாரா யிருந்தாராம். ஒரு பட்டை பொடி இருந்தால் அவர் ஒரு நாளில் ஒரு 'படலம்' முடித்து விடுவாராம்.

மேற்கூறியவைகளை எல்லாம் ஒருவனுக்குப் பொடியினால் ஏற்படும் நன் மைகளாகும்.

சமூக வாழ்க்கையில் பொடியின் வேலை அதிகம். இருவரை அதி சீக்கிரமாய்ச் சிநேகம் செய்து வைப்பதில் மூக்குப் பொடியைப்போல் பிறிதொன்றில்லை. 'வாங்கோ, ஸார்! எங்கே! உங்கள் பொடி கொஞ்சம் எடுங்கள்!' என்று அழைத்து ஒரு சிம்டா பொடி எடுத்துப் போட்டுக்கொண்டு, 'உங்கள் பொடி நல்ல காரமும் மணமுமா யிருக்கிறது. நீங்கள் எந்தக் கடையில் வாங்குவது வழக்கம்' என்று பெருமையுங் கூறிவிட்டால் இருவரும் பின்னர் இணை பிரியா நண்பர்களே. பொடி கூட்டுவித்த நண்பர்களைப் பிரிப்பதென்றால் இயலவே இயலாது. பொடியின் பக்தர்கள் அத்தகையோர் அல்லர். அன்பென்னும் பிணைப்பால் இணைக்கப்பட்டவர்களாகிறார்கள்.

தற்காலத்தில் பொடிக்கலர் புடவை, பொடிக்கலர் கோட் முதலிய பல நவீனங்கள் எதை அறிவுறுத்துகின்றன? (நானும் என் ராதாவுக்குச் சென்ற வாரம் ரூ. 62-11-0 க்கு ஒரு சாக்லெட் கலரில் கராச்சி சில்க் வாங்கிக் கொடுத்தது என் நினைவுக்கு வந்தது.)

சமூக வாழ்க்கைக்கும் சுவயநலத்திற்கும் இவ்வளவு அளவற்ற நன்மை பயக்கும் பொடிக்கு அனைவரும் அடியார்கள் ஆகவேண்டுவதை அறிவுறுத்த வேண்டுமோ?

பொடிக்கு இயற்கையிலேயே துர்நாற்றமுண்டு என்று சிலர் அதைப் புறக்கணிப்பதால் அதன் நன்மைகளை அடைவதில்லை. தாமரைக்குச் சேறும் ரோஜாவுக்கு முள்ளும் எப்படியோ, அப்படியே அந்நாற்றமும் பொடிக்கு. ஆண்-பெண் பாலராகிய மேல் நாட்டார் அனைவரும் பொடிக்கு (பொடியின் மூலப்பொருளாகிய புகையிலைக்கு) சிறந்த அடியார்கள்.

எல்லோரும் பொடியின் பக்தர்களாகுக!

'ஒரு பொடியின் பக்தன்'.

என்ற கட்டுரையை வாசித்து அடக்கவொண்ணு ஆனந்தமும், வியப்பும், நகைப்பும் கொண்டு ஸ்தம்பித்து நின்றேன். எனக்கு ஒரு யோசனையும் தோற்றவில்லை. கட்டுரையை வாசித்தது நல்ல ஞாபகம் இருந்தது. ஒரு சிம்டா பொடி போட்டால் யோசனை தோன்றும் என்ற நினைவு வந்தது. உடனே பொடியைத் தேடினேன். தற்செயலாய் விழித்துக்கொண்டேன்.

III

நான் நேற்று மாலை ஆபீஸி லிருந்து திரும்பி வரும்போது மிகுந்த ஜலதோஷ (நீர்க்கோர்வை)த்தினால் வாதைப்பட்டுக்கொண் டிருந்தேன். இரயிலில் என்னருகில் இருந்த ஒருவர் நான் படும் கஷ்டத்தைக்கண்டு கொஞ்சம் பொடி போட்டுக்கொண்டால் குணப்படும் என்று சொல்லி, சட்டை ஜேபி லிருந்து ஒரு சிறு வெள்ளி டப்பியை எடுத்தார். நான் அதுவரையில் பொடி போட்டதே கிடையாது. ஆகையால் சிறிது திகைத்தேன்; அந்த மனிதரோ பொடியின் உண்மையான பக்தர்.

நான் தயங்குவதைக் கண்டு, என்னைத் தட்டிக்கொடுத்து, என் சஞ்சலத்தையுந் தேற்றி, மிகுந்த அனுதாபமுங் காட்டி, எனக்குத் தும்முவதற்குக் கஷ்டமில்லாதவாறு தாம் உட்கார்ந்துகொண்டிருந்த ஓரமான இடம் கொடுத்து ஒரு சிம்டா பொடியை வெகு தந்திரமாகவும் நயமாகவும் பேசி ஏற்றிவிட்டார்

சற்றுத் தள்ளியும் உட்கார்ந்து கொண்டார். நான் சரியாய் 9 தரம் தும்மினேன்.

உண்மையில் சற்றுக் குணப்பட்டதுபோல் தோன்றிற்று. என் புதிய நண்பருக்கு வந்தனம் செய்து வீடு சேர்ந்தேன்.

என் மனைவி ராதா, என்னருகில் பிரியமாகப் பேச வந்தவள் திடீரென ஒதுங்கி நின்றாள். பொடியின் நாற்றமே அவள் நடத்தைக்குக் காரணம் என அறிந்துகொண்டேன்.

'நாதா,' என்று மெல்லிய குரலில் தொடங்கி, 'பொடிப் பிசாசினிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

நானும் மாலை ரயிலில் நடந்ததைச் சொல்லி அவள் பிரியத்திற்கு வாக்குறுதியுங் கொடுத்தேன்.

அவ்வாக்குறுதியின் பலனே என் கனவும் அதன் கொடுமையும் குட்டும், மற்றும்.

என்ன இருந்தபோதிலும், 'நஞ்சை வாயிலே கொணர்ந்து நண்பரூட்டு போதினும்,' 'உச்சிமீது வானிடிந்து வீழ்ந்த போதினும்,' ராதாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை நான் மீறப் போவதில்லை.

ஆயினும் பொடியி னடியார்களின் உண்மை அனுதாபம், உயரிய நோக்கங்கள், ஈகை, உற்சாகம் முதலியன எனக்கு இப்பொழுது நன்கு விளங்குகின்றன. என் நண்பர் ஒருவர் பத்திரிகை படிக்கு முன் பொடியிழுத்துவிட்டுத்தான் படிக்கத் தொடங்குவதை நான் முன்னமேயே பார்த்திருக்கிறேன். பத்திரிகையிலுள்ள சாராம்சங்களையும், சுவையையும் தவக்கமின்றிப் பருகுவதற்கு அது ஒரு உபகரணம் போலும். நானும் அவ்விதம் செய்யலாமென்றால், என் வாக்குறுதி குறுக்கே நிற்கிறது!

இந்திய நடனக் கலை

சமீபத்தில் வட இந்தியாவில் மோகன் ஜோதாரோ என்னும் பிரதேசத்தில் சிலா சாசன ஆராய்ச்சிக்காரர் பூமியை வெட்டிப் பரிசோதித்தனர்; பூமிக்குள் ஒரு வெண்கலச் சிலையைக் கண்டெடுத்தனர். அது ஒரு நடனமாதின் சிலையாக இருந்தது. சிலாசாசன ஆராய்ச்சியாளர் அச் சிலையைப் பரிசோதித்தபோது, அது கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று உரைத்தனர். அதாவது அந்தச் சிலை சுமார் 7000 வருடங்களுக்கு முன்னரே சமைக்கப்பட்டதெனத் தெரிகிறது. இதிலிருந்து 7000 வருடங்களுக்கு முன்பே இந்தியாவில் உயர்ந்த கலைகளில் ஒன்றாகிய நடனக் கலை உன்னத நிலையிலிருந்ததெனத் தெளிவாகிறதல்லவா?

தாசிகளும் தாசிகாந்தர்களும்

ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரிய ருடையது)

சென்ற வெளியீட்டின் தொடர்ச்சி

காட்சி 2.

இடம்:—பிரம்பூரில் தருமராய முதலியார் வீடு.

காலம்:—மாலை 4 மணி.

(தருமராய முதலியாரும் அவர் மனைவி பானுமதி அம்மாளும் பேசிக்கொண் டிருக்கிறார்கள்.)

பானுமதி:—உங்களைத் தான்! நீங்கள் போய், குழந்தை சாரதாவைப் பார்த்து வரக் கூடாதா?

தரும:—என்ன? நான் போய்ப் பார்த்து வர வேண்டுமா? நீ 'என் அண்ணன் பிள்ளைக்கே கொடுப்பேன், என் அண்ணன் பிள்ளைக்கே கொடுப்பே'னென்று குதித்துக் கூத்தாடிக் கொடுத்தையே நீ போய்ப் பார்த்து வருகிறதுதானே. அந்தத் துட்டப்பயல் வீட்டிற்கு நான் போகவே மாட்டேன். அந்தப் பயல் துர்நடத்தைகளையெல்லாம் நான் கேட்டுக்கொண்டுதான் வருகிறேன். அவனுக்கு இப்போது கூவென்னா வாயிற்று; இன்னுஞ் சில நாட்களுக்குள் குனா வரப் போகிறது. பிறகு, அந்தச் சாண் பயலுக்குக் கேயென்னா வரப் போகிறது. அப்போது நீ அழப்போகிறாய். இப்போது நான் சொல்லுவானேன்?

பானு:—நீங்க ளென்ன இப்படிப் பேசுகிறீர்களே! குனா-கூவென்னா-கேயென்னா என்று பாடம் படிக்கிறீர்களே. என்னென்னமோ சொல்லுகிறீர்களே, அதென்ன எனக்குச் சொல்லுங்கள்.

தரும:—அடி! நீ நாட்டுப் புறத்தா ளானதினால், அது உனக்கு விளங்கவில்லை. குனா வென்றால் குடி, கூவென்னா வென்றால் கூத்தி, கேயென்னா வென்றால் கேடு. இப்போது தெரிந்ததா?

பானு:—அவ னென்ன குடிக்கிறானா? இதெல்லாம் வீண் பேச்சு.

தரும:—அடி! இப்போது கூத்தியாயிற்று. இன்னுஞ் சில நாட்களுக்குள் குடியும் ஆகப் போகிறது. பிறகு, கேடு வரப் போகிறது. தேவடியாள் வீட்டி லில்லாத சரக்கு என்ன இருக்கிறது? குழந்தை படுகிற துன்பத்தைக் கேட்க என் வயிறு எரிகிறதடி. குழந்தை நம்

முடைய வீட்டில் என்ன செல்வாக்கோடு வளர்ந்தாள்; எப்படிக் கல்வி கற்றுப் பரிக்ஷையில் தேறினுள்; எவ்வளவு அக்கறையோடு நாள்தோறும் பல புத்தகங்களைப் படித்து வந்தாள். அப்படிப்பட்ட பெண்ணைப் புட்டுக்கூடை முண்டத்தில் பொறுக்கி யெடுத்த முண்டத்திற்குக் கொடுத்தாயே. கிளியை வளர்த்துப் பூனைக்கு இரையாக்கினையே. அடி பாவி! நீ போய்க் குழந்தையை அழைத்துக்கொண்டு வா. நாளையதினம் குழந்தையைப் பாராமல் நான் சாப்பிடவே மாட்டேன். 'தையல்சொற் கேளேல்' என்ற நீதியை மறந்ததினுல் தான் இவ்வளவு கவலைக் கிடமாயிற்று.

பானுமதி:—என் அவனை இப்படித் திட்டுகிறீர்கள்? அவனென்ன படிக்காத மூடமா? ஏதோ இப்போது கொஞ்சந் தவறி நடக்கின்றான். இன்னுஞ் சில நாள் போனுல் தானே வீடடங்கிப் போகிறுன். அவனுக் கென்ன அழகில்லையா? பணமில்லையா? படிப் பில்லையா? பெண்டாட்டியைக் காப்பாற்ற மாட்டானு? நாளைக்கே பெண்டாட்டிக் காலண்டை விழுந்து கிடக்கப் போகிறுன். நான் நாளைக்கே போய்ச் சாரதாவை அழைத்து வருகின்றேன். போதும், சும்மா இருங்கள்.

தருமர்:—அடி! என்னையா சும்மா யிருக்கச் சொல்லுகிறுய்? என் மகள் படும் மனோ வேதனையை நினைக்க நினைக்க நான் சும்மா யிருக்க முடியவில்லையே. காந்திமதி யம்மாளின் மகன் உத்தமராயன் பி. ஏ. பட்டம் பெற்றவன். அவன் உத்தியோகத்தி லிருக்கிறுன். அவர்கள் ஏழைகளா யிருந்தாலும், அவனுக்குக் கேட்டபோது சாரதாவைக் கொடுத் திருந்தால், அவனிடத்தில் கவலை யற்று, கரும்புஞ் சுவையும் போல வாழ்ந்து வருவாளே. பணமும் அழகு மிருந்தால் மட்டும் போதுமா? நற்குணமும், நன்னடக்கையு மிருக்க வேண்டாமா? நீ நாட்டுக் கட்டையானதினுல்தான், ஒரு பெண்ணை யொருவனுக்குக் கொடுத்துக் கலியாணஞ் செய்வதின் பொறுப்பைத் தெரிந்து கொள்ளாமற் போனுய். இப்போது உன் மகள் படுகிறுளா? அல்லது நீ படுகிறுயா? பக்ஷக்காரன் வழக்கறியான் என்பது போல, உன் அண்ணன் பிள்ளையின்மே லிருந்த ஆசையினுல், மேல் வருவதை எண்ணுமல், அந்தத் தேவடியாக் கள்ளனுக்கே கொடுத் தாய். எப்போதுங் கூத்தியாரை வைத்துக்கொண்டிருப்பவனுக்குப் பெண்ணைக் கொடுப்பது பெரும்பாவமே யாகும்.

பானுமதி:—போதும் நிறுத்துங்கள். பிரமதேவன் போட்ட புள்ளிக் கிரண்டாமா? அன்றைக் கெழுதினதை அழித்தெழுதப் போகிறுனு? என்னமோ, அவனுக்கென்று இவள் பிறந்தாள், இவளுக்கென்று அவன் பிறந்தான். நம்மாலாவ தென்ன? அவரவர் தலை யெழுத்தின்படி யாகிறது. நாளை காலையில் வண்டிசெடி

அம்படி வண்டிக்காரனுக்குச் சொல்லுங்கள். (என்று சொல்லி ச் சமையல் அறைக்குள் போய் விட்டாள்.)

காட்சி 3.

இடம்:—தங்கசாலை வீதியில் இராஜவேல் முதலியார் வீடு.

காலம்:—காலை 8 மணி.

(இராஜவேல் முதலியாரும், அவர் மனைவி பத்மாவதி அம்மாளும், அவர்கள் மருமகள் சாரதாவும் பலகாரஞ் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.)

பானுமதி அம்மாள் பிரவேசம்

பத்மாவதி அம்மாள்:—வரவேணும், வரவேணும் சம்பந்தியம்மாளவர்களே! நீங்கள் வருவதற்கு இத்தனை நாளாயிற்று? வீட்டில் எல்லோரும் க்ஷேமந்தானா? பெரியவர் சௌக்கியமா?

பானுமதி:—எல்லோரும் சௌக்கியமே. நீங்க ளெல்லோரும் க்ஷேமந்தானே? பிள்ளையாண்டான் சௌக்கியமெப்படி? (பெண்ணைப் பார்த்து) அம்மா சாரதா! சௌக்கியமா? ஏன் முகம் வாட்டமாயிருக்கிறாய்? உடம்பும் இளைத்திருக்கிறதே. இங்கே உனக்கு என்ன குறைவாய்ப் போச்சுது?

பத்மாவதி:—எல்லோருஞ் சுகமேதா னிருக்கிறோம். ஆனால், குழந்தை சாரதாவுக்கு மட்டும் மனோசுகமில்லை. செவ்வையாகச் சாப்பிடுகிறதுமில்லை. பால் கொடுத்தாலுங் குடிக்கிறதுமில்லை. எந்த நேரமும் படித்த வண்ணமே. தன் புருஷனைப்பற்றித்தான் கவலை. உங்கள் அண்ணனும் சாரதாவின் இருப்பைப் பார்த்துப் பார்த்து வருத்தப்படுகிறார். மகள் எங்களுக்குப் பணிவிடை செய்வதில் மனங் கோணாள். அவள் மேல் நாங்கள் யாதொரு குறையுஞ் சொல்வதற்கில்லை. அவளுக்கு, அடிக்கடி உங்கள் நினைப்பே. அம்மா எப்படியிருக்கிறார்களோ, அப்பா எப்படி இருக்கிறாரோவென்று என்னிடஞ் சொல்லி வருத்தப்படுவாள். சாரதா மெத்த புத்திசாலி யாயிற்றே. நாங்கள் இப்படிப்பட்ட பெண்ணைப் பெறக் கொடுத்து வைக்கவில்லையே.

பானுமதி:—(அண்ணியாரைப் பார்த்து) அண்ணி! இருக்கட்டும். அதன் தலையெழுத்தெப்படியோ அதன்படி முடியும். நானிப்போது குழந்தையை அழைத்துக்கொண்டு போகலாமென்றுதான் வந்தேன். வீட்டில் பெரியவரும் குழந்தையைப் பாராமல் சாப்பிடமாட்டேனென்கிறார். நீங்கள் பிள்ளையாண்டானைக் கேட்டு அனுப்பி வையுங்கள். (அண்ணனைப் பார்த்து) அண்ணா! உங்கள் அத்தான், குழந்தையை

அழைத்துவரச் சொல்லி என்னை யனுப்பினர். குழந்
ஒரு மாதிரியா யிருக்கிருள். குழந்தையை அனுப்பி வையுட
பத்து நாளைக்கு இருந்து வருவாள்.

இராஜவேல் முதலியார்:—அம்மா பானு! நீ போசனஞ் செய்துவிட்டு, குழந்தையைச் சுகமா யழைத்துக் கொண்டு போ. எங்களுக் கிருக்கும் மனக் கவலையை சாரதா ஒருவாறு மாற்றி வந்தாள். அவள்தான் எங்களுக்குப் பெண்ணும் பிள்ளையும். அவள் வீட்டி லில்லாமற் போனல், எங்களுக்குச் சுகமே யிராது. குழந்தையைச் சீக்கிரமே அனுப்பிவிடு. அத்தானுக்கு என் வந்தனஞ் சொல்லு.

பானுமதி:—அப்படியே சொல்லுகிறேன். வண்டி போட்டா யிற்று. நாங்கள் போய் வருகிருேம். (தாயும் பெண்ணும் வண்டியேறிப் போகிருர்கள்.)

தருமம்:—அம்மா சாரதாம்பா! என்ன இப்படி இளைத்துப் போயிருக்கிருய்? உன் மாமியார் வீட்டில் என்ன குறைவு? முகம் வாடி யிருக்கிறதே. ஏனழுகிருய்? அழாதே அம்மா. எல்லாம் உன் தாயார் செய்த வேலைதானே. உன்னைப் பார்க்கப் பார்க்க என் மனம் புழுங்குகிறது. அழாதே கண்மணி!

சாரதா:—அப்பா! நீங்க ளேன் வருத்தப்படுகிறீர்கள்? 'விதி வழி மதி' என்பது உங்களுக்குத் தெரியாதா? என் தலைவிதிப் பிரகாரம் அம்மாளுடைய மதி சென்றது. அம்மாளை நிந்திப்பதிலும் பிரயோசனமில்லை. சும்மா இருங்கள்.

பானுமதி:—சாரதா! நான் நல்லதற்கே பாடுபட்டேன். உன் புருஷன் இப்போது தேவடியாளுங் கையுமா யிருந்தாலும், ஒரு கலியாணத்தைச் செய்துவைத்தால் வீடடங்கி, வாசலடங்கி, பொருளைக் காப்பாற்றி, உனக்கு உற்ற துணையா யிருப்பானென்று நினைத்துச் செய்தோம். அவன் எப்போதும் இப்படியே இருப்பான? தானு அடங்கிப் போகிருன்.

சாரதா:—அம்மா! புருஷன் அப்படியே யிருந்தால்தா னென்ன? அடங்காமற் போனல்தா னென்ன? நாம் எப்போது ஒருவரைக் கணவராக மனத்தில் வரித்துக் கழுத்தைக் கொடுத்தோமோ அவரே கணவ ராவார். 'கல்லென்ருலுங் கணவன் புல்லென்ருலும் புருஷன்' என மதித்து உயிருள்ளவரையும் அக்கணவரோடு அன்புடன் வாழ்ந்து வருவதே பெண்களின் கடமையாகும். இது வேத சம்மதமும், ஜன சமூகத்தின் சம்மதமுமாகும். அதைவிட்டு, அவர் அப்படி யிருக்கிருர், இப்படிச் செய்கிருர், அவர் அடிக்கிருர், அவர் திட்டுகிருர் அது எனக்குப் பிடிக்கவில்லையென்று விவாகரத்து செய்து, அந்தப் புரு

ஷனை விட்டு வேறு புருஷனைக் கலியாணஞ் செய்துகொள்ளக்கூடுமா? கூடாது. கூடுமாயின் பெண்களுக்குக் கற்பென்பதே யில்லாமற் போகிறது; அன்றியும், மனத்தில் அருவருப்புத் தோன்ருமற் போகிறது. அந்தப் புருஷனும் ஏறுமாருயிருப்பானுயின், அவனையும் விவாகரத்து செய்து, இன்னெருவனைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டும். இவ்விதமாகவே பல புருஷரைக் கலியாணஞ் செய்துகொள்ள நேரிடுகிறது. இதுதான் விவாக ரத்தின் நன்மையான உபதேசம். இவ்வாறு செய்வது பெண்களுக் கழகாகுமா? கட்டிக்கொண்ட கணவன் மிக்க மூர்க்கனு யிருந்து மனைவியை வையினும், பொறுத்துக் கொண்டு, அவன் சாந்தமா யிருக்கும் போது, அவன் தவறுகளை யெடுத்துச் சொல்லி அவனைத் தன் வசப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதுதான் பெண்களுக் கழகாகும். அம்மா! என் புருஷன் தேவடியாள் வீடே கெதியா யிருக்கிருரே, என் முகத்தைப் பார்க்கிறதில்லையே, என்னேடு பேசுகிறதில்லையே யென்று நான் வருத்தப்படவில்லை. ஆனுல், தேவடியாள் கூட்டுறவினுல்,

அறங்கெடும் நிதியுங்குன்றும் ஆவியும் அழியும் காயம்
நிறங்கெடும் நிதியும்போகும் நீண்டதோர் நரகிற் சேர்க்கும்
மறங்கெடும் மறையோர் மன்னர் வணிகர் நல்லுழவோரென்று
குறங்கெடும் வேசை மாதர் குணங்களை விரும்பினேர்க்கே

என்று பெரியோர் கூறி யிருப்பதால், அதற்காக வருந்துகிறேனே யொழிய வேருென்றுக்கு மல்ல.

தருமராய:—பானு! உன் மகள் சொன்னவற்றை யெல்லாங் கேட்டனையா? தன் புருஷன் தனக்கு எவ்வளவு துன்பஞ் செய்பவனு யிருந்தபோதினும், தான் அவன் மேல் வைத்திருக்கும் அன்பின் அளவைப் பார்த்தனையா? இப்படிப்பட்ட புத்திசாலியான பெண்ணை உடல், பொருள், ஆவி மூன்றையுங் குதுவை வைத்துத் தேவடியாள் வீடே கதியெனத் திரிபவனுக்குக் கொடுத்தனையே, உன்னை யென்னென்று சொல்வதடி?

தருமராய:—அம்மா சாரதா! உன் புருஷன் வீட்டிற்குச் சரியாய் வருகிருனு? உன்னைக் கவனிக்கிருனு?

சாரதா:—அப்பா! என்னமோ சாப்பாட்டு வேளைக்கு வருவார். வெகு அவசரமாகச் சாப்பிடுவார். கையைக் கழுவுவாரோ இல்லையோ, உடனே போய்விடுவார். சாப்பிட்டானதும் தாகத்திற்கு இங்கேயே அருந்தினுலும் அருந்துவார், இல்லாவிட்டால் அவள் வீட்டிற்குப் போய் அருந்துவார்.

தருமராய:—அப்படியா! அடி மடையா! எனக்கு இப்படிப் பட்ட மருமகனும் வாய்ப்பானு! கடவுளே! கடவுளே! அம்மா

சாரதா ! உன் புருஷனுக்குச் சாப்பாடு வட்டிப்பது நீயா ? உன் மாமியா ?

சாரதா:—மாமி அம்மாள் என்னைத்தான் வட்டிக்கச் சொல்வார்கள். இரண்டு வேளையும் நான்தான் வட்டிக்கிறது.

தருமராய:—அம்மா ! நீ சாப்பிடப் போ, நேரமாகிறது.

சாரதா:—அப்பா ! நீங்களும் வாருங்கள், சாப்பிடலாம்.

தருமராய:—சரி, பானு ! எங்க ளிருவருக்கும் சாப்பாடு வட்டி. குழந்தை பசியா யிருப்பாள். பகல் அங்கே சாப்பிட்டது தானே ?

(எல்லோருஞ் சாப்பிட்டாயிற்று. படுக்கைக்குப் போயினர்.)
(காலையில் சாரதா கண் விழித்து, வீட்டுப் பின்புறத் தாழ்வாரத்தில் பல் தேய்த்துக்கொண் டிருக்கும்போது, ஒரு வண்டு மலத்தை உருட்டிக்கொண்டு வருவதைப் பார்த்து)

சாரதா:—' பூ மண மறியாத புழுத்த வண்டே, என் புருஷனை யொத்த கழுதை வண்டே ' (என்று சொன்னதைக் கேட்டு, பக்கத் தறையில் பலகாரஞ் செய்துகொண் டிருந்த பானுமதியம்மாள் வெளி வந்து மகளைப் பார்த்து)

பானுமதி:—அம்மா, சாரதா! உன் புருஷனைப்பற்றி யென்னமோ சொல்லினையே, அதென்ன ?

சாரதா:—அம்மா ! ஒன்று மில்லை. நீங்கள் போங்கள்.

பானுமதி:—கண்மணி ! மறைக்காதே. அதைச் சொல். என்ன சங்கதி ?

சாரதா:—அம்மா ! சொல்லுகிறேன். பிறகு என்னைத் திட்டா தீர்கள்.

பானுமதி:—திட்டமாட்டேன். சும்மா சொல்லு கண்ணே.

சாரதா:—அம்மா! எங்கள் வீட்டிற்குப் பத்துப் பன்னிரண்டு வீட்டிற்கு அப்பால்தான் அந்தத் தேவடியாள் வீடு. ஒரு நாள் அவர் சாப்பிட்டுக்கொண் டிருக்கும்போது, நான் செய்த சாம்பார், இரசம் இவை நன்றாயில்லை யென்று சொல்லித் தம்மிஷ்டம் போலத் திட்டி, ' அடி! சீக்கிரம் போய் அவளிடமிருந்து கொஞ்சம் இரசம் வாங்கி வா ' என்று சொன்னார். அம்மா ! நானிருந்ததற்கும் அங்கு வாழ்க்கைப்பட்டதற்கும் என் மனம் எப்படி யிருக்குமென்று நீங்களே யோசியுங்கள். பிறகு நானொன்றும் பேசவில்லை. உடனே, ஓர் பாத்திர மெடுத்துக்கொண்டுபோனேன். அப்போது மிக்க இருட்டா

யிருந்தது. மழையுந் தூறிக்கொண் டிருந்தது. பிறகு மழை அதிகமா யிருந்தது. இருட்டுக்கும் மழைக்கும் அஞ்சி, அவள் வீட்டிற்குப் போகாமல், எங்கள் வீட்டிற்கு ஐந்தாறு வீட்டிற்குப் பக்கத்தில் ஓர் குடிசைவீட்டுக் குட்டிச் சுவற்றின் ஓரமாகச் சற்று நேரம் நின்றிருந்தேன். பிறகு, அந்தத் தேவடியாள் வீட்டிற்குப் போவது என்னத்திற்கென்று நினைத்து, நான் வைத்திருந்த பாத்திரத்தில், கொஞ்சம் மழை ஜலத்தைப் பிடித்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பி, நான் செய்த இரசத்தை விட்டுக் கலக்கிச் சிறிது உப்பும் சேர்த்து முன் போலவே அவருக்கெதிரில் வைத்தேன். அதைவிட்டுச் சாப் பிட்டு, 'அடி இதல்லவா இரசம். இதன் ருசி யென்ன ? நீ செய்த இரசமென்ன ? நீ செய்தது கொட்டு இரசமடி' என்று அப்போதுந் திட்டினர், அடிக்க வந்தார். நானொன்றும் பேசவில்லை.

ஐயோ ! என்னுடைய புருஷன் அந்தத் தேவடியாள் மயக்கத்தி லகப்பட்டு இப்படியும் புத்திகெட்டுப் போய்விட்டாரே என்று மிகவுந் துக்கப்பட்டேன். வேறொன்றுக்குந் துக்கப்பட வில்லை. சாதாரணமாக புருஷர்களுக்கு இருக்கிற இயற்கை யறிவும் இவருக்கில்லாமற் போயிற்றே', 'தையலார் மயலிற் பட்டோர்தமக் கொரு மதி யுண்டாமோ' என்று பெரியோர் கூறியது தவறுமா? அம்மா! இதோ பார்த்தாயா? என்று தரையைக் காட்டி, இந்த வண் டானது இவ்விடத்தி லிருக்கும் பல வித புஷ்ப சாதிகளின் நல்ல வாசனையை யறிந்து நுகர மாட்டாமல், மலத்தின் வாசனையை நுகர்ந்து போகின்றதைப் பார்த்ததும் என் புருஷனுக் கிருந்த அறி வின் நிலைமை என் கவனத்திற்கு வந்து 'பூ மண மறியாத புழுத்த வண்டே, என் புருஷனை யொத்த கழுதை வண்டே' யென்று சொன் னேன். அம்மா! நான் உங்கள் அண்ணன் பிள்ளையை யிப்படிச் சொன்னேனென்று வருத்தப்படாதீர்கள். இந்தச் சங்கதியை அப்பா காதில் போடாதீர்கள். உங்களை நான் மிகவுங் கேட்டுக் கொள்ளு கிறேன்.

பானுமதி:—குழந்தாய்! நீ சொன்னது உன் புருஷனுக்குப் பொருத்தமானதே. இருக்கட்டும். நீ யின்னும் மனம் பொறுத்துக் கொள். வருத்தப்படாதே. வடிவாம்பிகை உனக்கு நல்லது செய்வாள். பலகாரஞ் சாப்பிட வா அம்மா. (இருவரும் அறைக்குள் போனார்கள்.)

(தொடரும்)

ரயில் அமர்க்களம்

('ஏசி')

'ஆரஞ்சு, கமலாரஞ்சு' என்று கூவிக்கொண்டு ஒருவன் போகின்றான். 'லிமினெட், சோடா' என்று சொல்லிக்கொண்டு ஒருவன் செல்கின்றான்.' எதை எடுத்தாலும் ஓரணா' என்று இயம்பிக்கொண்டு இன்னொருவன் பல சாமான்கள் கொண்டு வருகின்றான். 'ரோஜாப்பு, மல்லிகைப்பூ' என்று சொல்லிக் கொண்டு மற்றொருவன் வருகின்றான். சுதேசமித்திரன், ஹிந்து, மெட்ராஸ் மெயில், இந்தியா, தமிழரசு, தமிழ் நாடு என்றெல்லாம் கூவிக்கொண்டு தட்டு நிறையப் பேப்பரை எடுத்துக் கொண்டு 'சங்கு இன்னைய பேப்பர் காலணா' என்று மொழிந்து கொண்டே ஒருவர் இருவர் வருகிறார்கள். நேரமென்ன ஆயிற்று என்று பார்த்துத் தங்கள் தங்கள் கெடியாரங்களைப் பலர் சரிப்படுத்திக் கொள்கிறார்கள். 'போனதும் தபால் போடு' என்று சொல்லிவிட்டுப் பலர் திரும்புகின்றனர். வண்டியெல்லாம் கூட்டம் நிரம்பிவிட்டது. 'எப்பொழுது வண்டி புறப்படும், புழுக்கம் கொஞ்சம் ஒழியும்' என்று எதிர்பார்த்து நிற்கின்றார் பலரென்று அவர்கள் முகஞ் சொல்கிறது. ஒன்பது அடிக்க இரண்டே நிமிஷம் உளது. வண்டியில் ஏறி நானும் உட்கார்ந்து விட்டேன். ஆனால் பிளாட்பாரத்தைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அதோ ஒரு மாது ஓடோடியும் வருகிறாள். தலையில் ஒரு மூட்டை, கையில் ஒரு மூட்டை, இன்னொரு கையில் குழந்தை இங்ஙனம் வருகின்றாள் அவள். 'நில்லு, டிக்கெட் எங்கே' என்கிறார் வாசற்படியண்டை யுள்ளவர். அவளும் மூட்டைகளை யிறக்கிவிட்டு, டிக்கெட் காட்ட ஒரு மூட்டையை அவிழ்க்கிறாள். 'சே, சே, எங்கே டிக்கட்' என்று அவசரப்படுத்துகிறார் அவர். கடைசியில் அவளும் டிக்கெட் காட்டுகிறாள். ஒரு 'பட்' சத்தம். 'ஜல்திபோ, வண்டிக்கு நேரமாச்சு' என்று அவர் சொல்லவே, அவள் ஓடோடியும் எதிரே யுள்ள வண்டியில் ஏறப்போகிறாள். 'ஏ! இங்கே ஏறாதே, இது சகிண்டு கிளாஸ்' என்று ஒரு சப்தம் கேட்கிறது. இதற்குள் மணி யடித்து விட்டது. யாரோ ஒருவர் ஓடி வந்து அம்மாளின் மூட்டைகளை எடுத்து உள்ளே போட உதவுகிறார். குழந்தையைத் தான் வாங்கிக் கொண்டு உள்ளே ஏறிவிடுகிறார். ஆனால், அவள் ஏறவில்லை. அதற்குள் வண்டி நகர்ந்து விடுகிறது. 'ஐயோ, பிள்ளை அப்பா, பிள்ளை' என்று கத்து

கிருள் அவள். ஏ. எஸ். எம்மோ யாரோ அடுத்த வண்டியில் போக லாம் எனத் தள்ளுவதாகத் தெரிகிறது. 'புஸ் புஸ்' என்று வண்டி பாலந் தாண்டி வந்து விடுகிறது.

குழந்தையோடு வந்த ஆசாமி ஏறிய வண்டி என் வண்டியைச் சேர்ந்ததுதான். அங்குப் போய்ச் சற்று நிற்கிறேன். அந்த ஆசாமி குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு இப்படியும் அப்படியும் ஆட்டுகிறுர். குழந்தை ஓயாமற் கத்துகிறது. அங்கிருப்போருள் ஒருவர் 'இதென்ன நியூசன்ஸ் ஐயா இது' என்று கத்துகிறுர். 'சரி, இன்னேய தூக்கம் தூக்கந்தான்' என்கிறுர் இன்னெருவர். இதற்குள் அங்குச் சண்டை வேறு. உட்காரக் கொஞ்சம் இடம் கேட்க, 'பெஞ் சுக்கு 2 பேர் என்று போட்டிருக்கிறது பார்த்தீரா' என்கிறுர் ஒருவர். ஆனல் ஒரு நீண்ட பெஞ்சில் ஓராள் படுத்துக்கொண்டு, உறங்கு வதுபோல் பாவனே செய்கிறுர். அவரை எழுப்புவோர் ஒருவரும் இல்லே. அவர் நல்ல சட்டை கிட்டை எல்லாம் போட்டிருக்கிறுர்.

குழந்தை மறுபடியும் கத்த ஆரம்பிக்கிறது. 'ஏன் கத்துகிறது?' என்று ஒருவர் கேட்கிறுர். 'அம்மாளிடம் இருந்தால் கத்தாது' என்ற பதில் வருகிறது. அம்மாள் எங்கே என்று இன்னெருவர் கேட்க, அவள் ஏறு முன் வண்டி புறப்பட்டுவிட்டது என்று தெரி விக்கப்படுகிறது. 'ஆஹா! அப்படியா? ரயில் அம்மாள் வர்ரவரையில் காத்திருக்குமா? முன்னடியே வர்ரதற்கு என்ன கேடு?' என்று ஒரு மஹான் கேட்கிறுர். அவர் கண்டாரா, பஸ்காரரும் டிராம்காரரும் செய்யும் கால தாமதத்தை! 'இந்தக் குழந்தை உமக்கு என்ன வேணும்?' என்று கேட்கிறுர் ஒருவர். 'இது ஆண்டவனின் பிள்ளே, என்னுடன் பிறந்ததற்குச் சமானம்' என்று சொல்கிறுர் அவர், குழந்தையை அணைத்துக் கொண்டே. 'அதென்ன? ஆண் குழந் தையா? பெண் குழந்தையா?' என்ற கேள்விக்கு 'எனக்குத் தெரியாது' என்று பதில் வருகிறது. 'என்ன ஐயா இது வேடிக்கை?' என்கிறுர் ஒருவர். 'ஒன்றும் இல்லே. குழந்தைக்குக் கவுன் போட்டிருக்கிறது. தலேமயிரைப் பார்த்துத் தான் நான் கூறக் கூடும்' என்கிறுர் அவர். 'இருக்கட்டும், இப்படிக் காட்டும் குழந்தையை' என்று ஒருவர் உரைக்க, அவர் குழந்தை யின் தலேப் பக்கம் உள்ள துணியை நீக்குகின்றுர். 'இதென்ன ஐயா இது? தலேயிலே புள்ளி புள்ளியா இருக்கே' என்று சொல்ல, 'கொட்டை கொட்டையா யல்லவோ இருக்கு' என்று இன்னெருவர் இயம்ப, 'நல்லா உற்றுப் பாருங்க. என்னமோ அம்மை கணக் கால்லோ இருக்கு' இன்று மற்றெருவர் மொழிய, 'அம்மைதான், பெரியவ ளல்லவா?' என்று நான்காமவர் நவில, 'அம்மையா? பெரி யவளா? இந்தப் பாழும் ஜனங்கள் இத்தோடு வண்டியில் வந்துவிடு கிருர்களே. கலிகாலம், கலிகாலம்' என்று தலேயிலே சில வைதீகர்கள்

போட்டுக் கொள்ள, ஒன்றும் புரியாமல் விழிக்கிறார் அந்த ஆசாமி. பிறகு ஒவ்வொருவராக அந்தக் குழந்தை இருக்கும் இடத்தை விட்டு நழுவ ஆரம்பிக்கிறார்கள். அவரோ குழந்தைக்குக் கைவிரலைக் கொடுக்க, அதைச் சப்பிக் கொண்டே சற்று அது சும்மா இருக்கிறது. மறுபடியும் வீறிட்டுக் கத்த ஆரம்பித்துவிடுகிறது. அங்குள்ள ஒரு பெரிய தாயார் அக்குழந்தையை வாங்க எழுகிறாள் என்பதை அறிகின்ற அவர் புருஷர் ஒரு கோபப் பார்வை பார்க்கிறார்; கையைப் பிடித்து அமுக்குகிறார். அத் தாயாரும் உட்கார்ந்து விடுகிறார்.

செங்கற்பட்டு ஸ்டேஷன் வந்துவிடுகிறது. பிளாட்பாரத்தில் வண்டி நிற்க நேரமில்லை. ஒரே கூச்சலும் கும்பலுமாக இருக்கிறது. இக் குழந்தையும் கத்துகிறது. ஒரு ரயில்வே போலீஸ்காரன் வண்டி வண்டியாய் என்னமோ பார்த்து வருகிறான். எங்கள் வண்டியண்டை வருகிறான். குழந்தை கத்தும் சத்தங் கேட்டு, 'ஏ! இந்தக் குழந்தை உன்னுடையதா?' என்று கேட்கிறான். இல்லை என்ற பதில். கீழே இறங்கு என்ற கட்டளை. என்ன செய்வார் அவர் பாவம்! மூட்டை முடிச்சுகளை எடுத்துக் கொண்டு அவர் கீழே இறங்குகிறார். 'ஏன்? ஐயா' என்று போலீஸ்காரனை நான் கேட்கிறேன். 'இந்த ஆளை அரஸ்ட் செய்யும்படி தந்தி வந்திருக்கிறது. குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டாராம்' என்று சொல்லி விட்டு, அவன் காரியத்தில் கண்ணாகிறான். குழந்தை கத்துகிறது; மலஜலங் கழிக்க ஆரம்பிக்கிறது. அப் புண்யவான் அதை யெல்லாம் சகித்துக் கொண்டு துணியினால் துடைத்துச் சுத்தம் செய்கிறார். போலீஸ்காரரைப் பார்த்து ஒருவர் சொல்கிறார்: 'குழந்தைக்குப் பெரியம்மை. இத்தோடு இந்த ஆளு வண்டியில் ஏறி வந்ததால் அரஸ்ட் பண்ணத்தான் வேண்டும்.' 'என்ன! பெரியம்மையா?' என்று சொல்லிப் போலீஸ்காரன் ஏங்குகிறான். 'குழந்தையைக் கீழே போட்டுவிட்டு நீர் மாத்திரம் வாரும்' என்று போலீஸ் சொல்ல, மாட்டேன் என்று அவர் தலையை யசைக்கிறார்; 'இதைப் போட்டுவிட்டு வந்தால், யார் இதைப் பார்த்துக் கொள்வது' எனக் கேட்கிறார். குழந்தை கத்த ஆரம்பிக்கிறது. அவர் 'தாலாலோ தாலிலலோ, தாலாலோ தாலிலலோ' என நாவை அசைத்துப் பாடுகிறார். நான் அந்தப் போலீஸ்காரனிடம் போகிறேன். அந்த ஆசாமியை முதலில் இருந்து நான் ஒரு போலீஸ்போலவே ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தேன் என்றும், அவர் மிகவும் நல்லவர் என்றும், அவரைச் சிறைப்படுத்துவது மகா பாவம் என்றும், குழந்தையை அவர் பேணி வந்த முறையைப் பார்த்தால் அவரைப் போன்று சிலராகிலும் உலகில் இருப்பதால்தான் உலகம் அஸ்தமிக்கவில்லை யென்றும் பலபடியாகச் சொல்கிறேன். 'நான் என் செய்வது? எனக்குக் கட்டளை யிப்படி இருக்கிறதே' என்கிறான் அவன். 'ஆனால், ஒன்று செய்யும். இவரை இப்

பொழுது அரஸ்ட் செய்ய வேண்டாம். அந்தப் பெண் அடுத்த ரயிலில் வந்து விடக்கூடும். அதுவரை இவரை இங்கேயே வைத்திரும். இவர் குழந்தையைத் திருடி வந்தவ ரல்லர் என எனக்குப் படுகிறது. அம் மாது வந்தபிறகு விஷய மறிந்து வேண்டுமானால் அரஸ்ட்செய்யலாம்' என்று சொல்கிறேன் நான்; ஒரு சலாம் போட்டு வேண்டியுங் கொள் கிறேன். என் கையைப் பிடித்துக் கொண்டு அவனும் ஒப்புக் கொள் கிறான். ரயில் ஊதுகிறது. வண்டியில் நானும் ஏறுகிறேன். சே, சே, என்ன உலகம்! குழந்தையைக் காத்து வந்த அப்பெரியாருக்குப் பழி வந்து சேருகிறதே என்று நினைத்து ஏங்குகிறேன். சே, சே, என்ன உலகம்! அம்மை யென்று நினைத்து எல்லோரும் ஓடிவிட்டார்களே என்று ஆச்சரிய முறுகின்றேன். அம்மையாக இல்லாமல் வெறுங் கொசுக்கடியாக இருந்தாலும் இருக்கலாம் என்றுதான் எனக்கு இன்னும் எண்ணம் இருந்துவருகிறது. ஆ! அன்பு, அன்பெனப் பேசு கிறார்கள்!! அன்பைக் காட்டுவார் அரிது. காட்டினாலும் அவர்க்கு இப்படியா பழி!!!

பிறப்பின் நோக்க மென்ன?

தருமங்கள் பல வகைப்படும். நமது முன்னோர்கள் தருமத்தை முப்பத்திரண்டு விதமாக வகுத் திருக்கிறார்கள். அவைகளில் அன்னதானம் சிறந்ததே யாயினும், அதற் கடுத்த நிலையில் இருப்பது கல்வி தானமே யாகும். கல்வி ஒன்றே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு வகைப் புருஷார்த்தங்களையும் நல்கக் கூடியதா யிருத்தலினால் கல்வி தானமே தலை சிறந்த தானமாகும். இதை யெல்லாம் எண்ணியே நமது முன்னோர்கள் மடங்களையும் மடாலயங் களையும் கட்டி வைத்து அவைகளின் நிருவாகத்துக்கென்று அளவற்ற பொருள்களைத் தானமாக வைத்துச் சென்றார் கள். இத்தகைய நல்ல எண்ணத்தோடு நமது முன்னோர்க ளால் ஏற்படுத்தப்பட்ட மடங்கள் மடாலயங்கள் ஆகிய இவைகளிற் சில, நாளடைவில் வேறு வகையில் மாறிச் சென்றன. நமது நாடு நல்ல நிலைக்கு வரவேண்டும். அதற் காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும். எங்கெங்கும் கல்வி மணம் கமழ்தல் வேண்டும். மக்கள் கல்வியாலாய பயனை எய்தி இறைவனை உணர்தல் வேண்டும். இஃதன்றோ மானிட யாக்கையை யடைந்தவர் பெறும் பேறாகும்.

எஸ். எஸ். அருணகிரிநாதர்

இந்திய மக்கள் நிலைமை

(மே. மா.)

இந்தியாவிலே தமிழ் மன்னர்கள் ஆண்ட காலத்தி லிருந்து முஸ்லீம்கள் ஆண்ட காலம் வரையிலும் குடிகளிடம் ஒரே விதமான நிலத் தீர்வை வசூலிக்கப்பட்டு வந்தது. அத்தீர்வையானது விளையும் பொருள்களில் 6-இல் ஒரு பங்காகும். அரசாங்கம் அதையே வசூலித்து வந்தது.

ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் வந்த பின் தானியங்களாக வசூலிப்பதை விடுத்து நாணயமாக வசூலிக்க முற்பட்டார்கள்; அதிலும் வங்காளம் தவிர மற்ற நாடுகளில் 30 ஆண்டுக்கு ஒரு தரம் வரி உயர்த்தும் ரெவினியூ செட்டில்மெண்ட் என்ற ஒரு முறையை ஏற்படுத்தித் தீர்வையை உயர்த்திக் கொண்டு வந்தார்கள். அவற்றுள் 1-ஆம் நெம்பர் தீர்வையி லிருந்து 6-ஆம் நெம்பர் தீர்வை வரையில் வகுத்து வசூலித்து வருகிறார்கள்.

1-ஆம் நெம்பர் தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு போகம் 2-க்கு ரூபா 18-முதல் 24 வரை வசூலிக்கப்படுகின்றது. இது போல மற்ற நெம்பர் தீர்வைகளும் கொஞ்சம் குறைவாக நீர்ப்பாசனத்திற்குத் தகுதியான படி வசூலிக்கிறார்கள். இம் முறையை மக்கள் ஆதரிக்காவிடினும் செங்கோலுக்கு மிஞ்சி ஒன்றும் செய்ய இயலாததால் வரியைப் பணமாகக் கட்டி வந்தார்கள்.

இந் நிலையில் வரி கட்டி வந்த மக்கள் செய்யும் விளை பொருள்கள் வரிப் பணத்திற்கும் தங்கள் சாப்பாட்டிற்கும் சற்றேறக்குறைய போதுமானதாக இது வரையில் காணப்பட்டது. இப்பொழுதோ நெல் விலையானது பர்மாவில் பட்டணம் படி 1700 ரூபா 50 ஆகவும், மற்ற இடங்களில் ரூபா 27 ஆகவும் விற்கப்படுகின்றது. எனவே இந்த விலையானது அரசாங்கத் தீர்வைக்கே சரியாய்ப் போய் விடுகின்றது.

உழவாளி ஒருவன் விரை முதல் போட்டு உழவுக் கூலி, நடவுக் கூலி, களை எடுப்புக் கூலி, தண்ணீர் மாறும் கூலி, அறுப்புக் கூலி, கட்டடிக்கும் கூலி முதலிய கூலிகளைக் கொடுத்து வரியும் செலுத்தித்

தானும் வாழ வேண்டியவனாய் இருக்கின்றான். இத்தகைய ஒருவன் விளையும் தானியத்தை விற்றால் இப்பொழுது கிடைக்கும் விலை வரிப் பணத்திற்கு மட்டுமே போதுமானதாய் இருப்பதால் மற்றவைகளுக்கு என்ன செய்வது என்று யோசிக்க வேண்டிய கடமை ஆளப்பட்டவர்களுடையதல்லவா?

ஏழை விவசாயிகள் பிழைக்க வகையின்றி, இருக்கும் சொத்துக்களை விற்று பட்டினி கிடந்து வரிப் பணத்தை இதுவரையில் அரசாங்கத்திற்குச் செலுத்தி வருகிறார்கள். இந்நிலையில் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அரசாங்கமும் பயிரிடுபவரின் நிலைமையை உணராமல் வரிகட்டும்படி வற்புறுத்தி வசூலித்து வருகின்றனர். குடிகள் தம் வசம் இருந்த எல்லாப் பொருள்களையும் விற்று வரி கட்டி ஆய்விட்டது. இனி, கட்ட முடியாத நிலைமை வந்திருக்கின்றது. இப்போதாவது அரசாங்கம் தன் பொறுப்பை உணர்ந்து பண்டங்களாக, விளைபொருள்களாக வரியின் பொருட்டு ஆறில் ஒரு பங்கு வசூலித்தால் நலமாய் இருக்கும். இதை விடுத்து சட்ட சபைகளில் வரியைக் குறைக்கலாமா, $12\frac{1}{2}$ விகிதம் நூற்றுக்குக் குறைக்கலாமா என்று வார்த்தையைக் கிளப்பி விட்டுக் காலத்தைக் கடத்திக் கொண்டே போய் அம்பலத்தில் குடிகளை விடும் தந்திரத்தைக் கையாள்வார்களே யானால் இந்தியர்கள் நிலை ருஷிய நிலையில் கொண்டு போய்ச் சேர்த்து விடும். தவிர அரசாங்கத்தினிடம் அளவுக்கு மீறிய ஆத்திரம் கிளம்பி விடும். எனவே அரசாங்கத்தார் கால தாமதம் செய்யாமல் குடிகள் கூச்சல் போடவில்லை என்று சாக்கு சொல்லாமல் உடனே வரியை மாற்றி யமைக்க வேண்டும்; அல்லது சில ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்கவேண்டும். இதைவிடுத்து, குடிகள் வஜா கேட்கவில்லை என்று சட்ட சபையிலிருந்து பதில் கூறுவது பொருத்த மற்றதாகும். ஏனெனில் கூச்சல் போடுவதாலும் தீர்மானங்கள் அனுப்புவதாலும் இவ்வரசாங்கம் கவனிப்பதில்லை என்று மக்கள் நம்பி யிருப்பதால் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு உயிர் விடும் நிலைமையில் வந்திருக்கின்றார்கள். இத்தகைய மக்களின் நிலைமையை அலட்சியம் செய்யும் பட்சத்தில் அத்தகைய அரசாங்கத்தினிடம் வெறுப்புக் கொள்வர். எனவே இது சமயம் 6-இல் ஒரு பங்கு விளையும் பொருள்களை வரிக்காக வசூலிக்குமாறு அரசாங்கம் தங்கள் சிப்பந்திகளுக்கு உத்தரவிட வேண்டுமாய்க் கோருகிறோம். குடிகள் கெட்ட பின் அரசும் கெடும் என்பதை உணர்ந்து குடிகளின் குறையை உடனே கவனிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சன மருளோ? சாஸ்திர மருளோ?

('கனகம்')

இந்தியாவிலே தக்காணத்தில் அரசன் ஒருவன் தன் மந்திரியை நோக்கி, மந்திரி! நமது நாட்டில் நடைபெற்று வரும் ஆசாரங்களும் வழக்கப் பழக்கங்களும் சடங்குகளும் சனமருளோ சாஸ்திரமருளோ ? என்று கேட்டான். சன மருள்தான் என்றான் மந்திரி. அதெப்படி என்றான் அரசன். பிறகு சொல்லுகிறேனென்று சொல்லி, வேறு விஷயங்களைப் பேசத் தொடங்கினான் மந்திரி. அரசன் தான் கேட்டதை மறந்துபோனான். ஒரு வார மாயிற்று. மந்திரி ஏதோ ஒரு காரியமாக வெளியே போக வேண்டுமென்று அரசனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டான். ஊரூராய்த் திரிந்தான். பிறகு, மலையை அடுத்த ஒரு கிராமத்தை அடைந்தான். மலையடிவாரத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த ஓர் உயர்ந்த ஆளைக் கண்டான். அவனுக்கோ தாடி மயிரும் தலை மயிரும் உடம்பெங்கும் மயிரும் புதர்போல் வளர்ந்திருந்தன. அவன் பிறந்தது முதல் அம்பட்டன் தயவைத் தேடினவ னல்ல. மந்திரி அவனருகே சென்றான். அவன் பயந்து கோலையுங் கம்பளத்தையும் எறிந்துவிட்டு ஓட்டமெடுத்தான். அடே ! ஓடாதே. நானொன்று சொல்லுகிறேன்கேளென்றான் மந்திரி. ஐயா எனக்கு ஒன்றும் வேண்டா சாமி. ரெண்டாடு கொடுக்கிறேன் என்னை விட்டிடுங்கோ, ஒன்றுஞ் செய்யாதிங்கோ சாமி என்றான். அப்பா! நான் உன்னை யொன்றுஞ் செய்யவில்லை. நீ என் பின்னோடுவா, உன்னை இராஜாவாக்குகிறேன் என்றான் மந்திரி. அப்பாடா! ராஜா வேலை பெரிய வேலை ஆச்சே! அந்த வேலை கெட்ட வேலை, என்னால் முடியாது சாமி, உனக்கொரு கும்பிடு. என்றான். அப்பா! உனக்கு அந்த வேலை யெல்லா மில்லை. எல்லா வேலைகளையும் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ சோளக் கொல்லையில் வைக்கோலால் செய்து நிறுத்தி யிருக்கும் மனிதனைப் போல சும்மா உட்கார்ந்திருக்க வேண்டியவனே. உனக்கு ஒரு வேலையுமில்லை என்றான். ஆனுக்கா வர்றேன் என்றான் மயிராண்டி. மந்திரி அவனை அழைத்துக் கொண்டு தன் அரண்மனை வந்து சேர்ந்தான். அவனுக்கு உச்சி முதல் உள்ளங் கால் வரையும் விபூதியை நிறையப் பூசித் தன் நகரத்தி லிருந்த மலையின் குகைக்குள் உட்கார வைத்து, அப்பா! நீ கண்ணை மூடிக் கொள். உன்னை யார் என்ன செய்த போதிலும்

கப்சிப், ஒன்றும் பேசாதே. மௌனமாயிரு, பத்திரம். வாயைத் திறவாதே. திறந்தால் உன் உயிர் போய்விடும் என்று திட்டஞ் செய்து திரும்பினன் மந்திரி. பிறகு, மந்திரி மூன்று நாள் பொறுத்து அரசனிடம், அரசே! ஓர் அதிசயங் கேட்டீர்களா? நம்முடைய நகரில் யாரோ ஒரு மகரிஷியாம். அவர் பெரிய மகானும். மலைக் குகையில் அன்னுகாரமில்லாமல் வெகு நாளாயிருக்கிறாராம். அவரை நாம் இதுவரையும் பாராதிருந்தது நமது தவறாகும். ஆகையால், நாம் அவரைத் தரிசிப்பது அவசியமாகும். ஒரு நாள் நியமியுங்கள், நாம் போய்ப் பார்க்கலாம் என்றான் மந்திரி. சரி, வருகிற சுக்கிரவாரம் போகலாம் என்றான் அரசன். உடனே மந்திரி, நமது அரசர் பெருமான் மலைக் குகையிலுள்ள மகரிஷியைத் தமது குடும்பத்தோடு தரிசனஞ் செய்யப் போகிறார், வீதிகளை அலங்கரியுங்கள் என்று சனங்களுக்குத் தண்டோரா போடச் செய்தான். சனங்கள் வீதிகளை அலங்காரஞ் செய்தார்கள். அரசன், தனது குடும்பத்தோடும் மற்றப் பரிவாரங்களோடும் சுக்கிரவாரஞ் சாயங்காலம் 4-மணிக்குப் புறப்பட்டான். எல்லோரும் மலையேறினார்கள்; குகையருகே போனார்கள்; மகரிஷியைப் பார்த்தார்கள்; அவரை வணங்கினார்கள். மந்திரி உடனே தரையில் வீழ்ந்து நமஸ்காரஞ் செய்து எழுந்து, மகரிஷியின் தாடி மயிரில் ஒன்றை மெல்லப் பிடுங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு முந்தானையில் முடிபோட்டுக் கொண்டான். பிறகு, அரசனும் மகரிஷியின் காலில் வீழ்ந்து தாடி மயிரில் ஒன்றைப் பிடுங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு முந்தானையில் முடிபோட்டுக் கொண்டான். அதன் பிறகு அரசியும் காலில் வீழ்ந்து வணங்கி தாடிமயிரில் ஒன்றை மெதுவாகப் பிடுங்கிக் கண்களில் ஒற்றித் தன் புடைவையின் முந்தானையில் முடிபோட்டுக் கொண்டனள். பின்னர் இளவரசனும் மற்றப் பரிவாரங்களும் ஒருவர் ஒருவராகத் தாடி மயிரைப் பிடுங்கி முன்னே செய்தவர்களைப் போலவே செய்தார்கள்.

அரச குடும்பமும் அவரது பரிவாரங்களும் மயிர் பிடுங்கி ஆயிற்று. வீட்டுக்குத் திரும்பினார்கள். தாடி மயிரில் அரைவாசி மயிர் போயிற்று. மிச்சம் அரைவாசி மயிர். மகரிஷியோ சிறிதும் அசையவில்லை. மந்திரி சொன்ன திட்டத்திலேயே யிருக்கின்றார். பிறகு, பட்டணத்திலுள்ள பிரபுக்கள் ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்து மகரிஷியை நெருங்கினார்கள். தாடிமயிரில் கையை வைத்தார்கள். இனி ஒவ்வொரு மயிராகப் பிடுங்குவது சாத்தியப்படுமா? நாலு ஐந்து ஆறு மயிராகச் சேர்த்துப் பிடுங்கினார்கள். சிலர் எனக்கோ உனக்கோ வென்று கொத்துக் கொத்தாகப் பிடுங்கினர். தாடி மயிரெல்லாம் காலியாயிற்று. குகைக்குள்ளிருந்த மகானை வெளியே உருட்டி விட்டனர். எல்லோரும் போய் விட்டார்கள். பிறகு, பட்டணத்துச் சனங்கள் ஒருவர்மேலொருவர் விழுந்தடித்து ஓடி வந்தார்கள். மகரிஷியைப் பார்த்தார்கள். கும்பிடு போட்டார்கள். தாடியில் ஒரு மயிரு

208523

மில்லை. தலை மயிரில் கை வைத்தார்கள். ஒருவர் ஒருவரைத் தள்ளிக் கொத்துக் கொத்தாகப் பிடுங்கினர். கண்ணில் ஒற்றித் துணியில் முடிபோட்டனர். மகானை மலையி லிருந்து உருட்டுக் கொண்டு வந்து நடு வீதியில் விட்டனர். இச் சம்பவத்தைக் கேள்வியுற்ற பக்கத் தூரார் கும்பல் கும்பலாக ஓடிவந்து ரிஷியைத் தரிசித்துக் கும்பிட்டார்கள். தாடி மயிரு மில்லை, தலைமயிரு மில்லை. அக்குள் மயிர் நீண்டிருப்பதைக் கண்டார்கள். ஆச்சோ போச்சோ வென்று கொத்துக் கொத்தாகப் பிடிங்கினார்கள். அக்குளுங் காலியாயிற்று. உடம்பிலும் ஒரு மயி ரில்லை. மணி 7 ஆயிற்று. அங்கு ஜனங்கள் யாருமில்லை. உடனே மந்திரி ஆள்களை யனுப்பி அவனைத் தூக்கி வரச் சொன்னான். அவன் வந்ததும் அவனுடம்பில் நல்ல தைலங்களைப் பூசி வெந்நீர் ஒற்றிடங் கொடுத்துப் போதுமான நல்ல ஆகாரம் உண்ணச் செய்து கட்டிலின் மேல் படுக்க வைத்தான். இப்படியே ஒரு வாரஞ் சிகிச்சை செய்து அவனுடம்பைத் தேற்றினான் மந்திரி.

பிறகு ஒரு நாள் மந்திரி, அரசனைப் பார்த்து, அரசே! தாங்கள் சில வாரங்களுக்கு முன் சன மருளோ? சாஸ்திர மருளோ? என்று என்னைக் கேட்டீர்களே, அது விஷயமாக என்ன முடிவுக்கு வந்தீர்கள்?' என்று கேட்டான். அதற்கு அரசன் 'மந்திரி! நான் இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை; அவ்விஷயம் இன்னும் எனக்குச் சந்தேகமே' என்றான். 'சரி, உங்கள் சந்தேகத்தை நான் நிவர்த்தி செய்கிறேன்' என்று சொல்லி குகையில், மயிரோ டிருந்த மகரிஷியை அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தினான் மந்திரி. அரசன் 'மந்திரி! இவன் யார்?' என்றான். மந்திரி 'அரசே! தாங்களும் இராணி அம்மாளும் இளவரசரும் மற்றப் பரிவாரங்களும் மலைக் குகையில் தரிசித்து மயிர் பிடுங்கிக் கண்ணி லொற்றிக் கொண்ட மகரிஷி இவர் தான்' என்றான். அரசன் மிக்க வியப்படைந்து 'இவனா நாம் பார்த்த மகரிஷி? தாடி மயி ரெங்கே? தலை மயி ரெங்கே? உடம்பு முற்றும் மழ மழ வென்றிருக்கின்றதே. நாம் பார்த்த மயிரெல்லாம் எவ்வாறு போயிற்று' என்று கேட்டான். அதற்கு மந்திரி 'அரசே, சொல்லுகிறேன் கேளுங்கள். முதலில் நான் ரிஷியைப் பார்த்ததும் அவர் காலில் வீழ்ந்து கும்பிட்டு, அவர் தாடி மயிரில் ஒன்றைப் பிடுங்கிக் கண்ணி லொற்றி முன்தானையில் முடிந்ததை நீங்க ளெல்லோரும் பார்த்தீர்கள். பிறகு, என்னைப் பார்த்து அரசர் பெருமானாகிய தாங்களும் அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கி ஒரு மயிரைப் பிடுங்கிக் கண்ணி லொற்றி முடிந்தீர்கள். பின்னர் அரச பெருமாட்டியும் நம்மிருவரையும் பார்த்து நாம் செய்தது போலவே செய்தார்கள். இளவரசரும் மற்றையரும் நம் மூவரையும் பார்த்து மயிர் பிடுங்கினார்கள். அரசே இத்தகைய செய்கையும் என் ஒருவனை நம்பியே நடந்திருக்கிறது.

இப்படியே நமது நாட்டுச் சனங்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் அவர் மகா பண்டிதர் சாஸ்திர நிபுணர் அவருக்குத் தெரியாத ஆசாரமா வென்று யோசித்துப் பாராமல் மனச்சாட்சிக்கு மாறாக யுக்த வயது வாராததற்கு முன்னரே சிறுவருக்கும் சிறுமிகட்கும் கிழவனையோ குமரனையோ நியமித்துக் கலியாண முடிக்கிறார்கள். கணவனை யிழந்த பெண்களுடைய தலையை மொட்டை யடிக்கிறார்கள். அவர்களை வெள்ளாடை கட்டச் செய்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வேளை உணவே கொடுக்கிறார்கள். திரிகாண சுத்தியோடு கடவுளைத் தொழ விருக்கும் சிவாலய விஷ்ணு ஆலயங்களில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் மனைவியரென்று தெரியும்படி முத்திரை போட்டுப் பொட்டுக் கட்டி யிருந்தும், பல புருடரோடு சங்கமஞ் செய்து யதேச்சையாகத் திரியும் தேவ தாசிகளை அவர்கள் கணவன்மார்களாகிய அக்கடவுளருக்கு முன்பாக ஆடச் செய்தும் பாடச் செய்தும் சந்தோஷிக்கிறார்கள். ஆலயங்களில் கடவுளுக்குப் பள்ளியறை அலங்கரித்துப் பால் பழம் தாம்பூலம் வாசனைத் திரவியங்கள் வைத்து வேடிக்கை பார்ப்பது வழக்கமா யிருக்கிறது. காலையில் அவற்றை யெடுத்து அர்ச்சகராகிலும் சாப்பிடுவார். அல்லது, அவருடைய ஆசை நாயகிக்கேனும் அனுப்புவார். இப்படி ஓர் ஆலயத்தில் நடப்பதைக் கண்டு மற்ற ஆலயங்களிலும் நடப்பது பார்ப்பனர் ஏற்படுத்திய ஆசாரமாகும். இப்படிச் செய்வ தெல்லாம் புண்ணியமா புருஷார்த்தமா? இரண்டு மில்லை. வீண் விளையாட்டுச் செய்கையேயாம். இவ்வாறு செய்யும் ஆசாரங்க ளெல்லாம் கடவுளைப் பரிகசிப்பதாகும். இவை போன்ற ஆசாரங்கள் இன்றும் பல உள. அரசே! இன்னும் கேளுங்கள்.

நமது நாட்டுச் சனங்களுக்குள்ளே ஏதாவது நோய் காணுமாயின், உடனே பெரியபாளையத்து அம்மனுக்கோ, கன்னிமாருக்கோ, அண்ணமாருக்கோ, முனீஸ்வரனுக்கோ, காட்டேரிக்கோ, காத்தவராயனுக்கோ, மதுரை வீரனுக்கோ, மன்னார் சாமிக்கோ, அங்காளம்மனுக்கோ பொங்கலிட்டு ஆடு கோழி காவு கொடுக்கிறேன் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுகிறார்கள். பிறகு, நோய் சௌக்கிய மாயிற்றோ இல்லையோ ஆட்டையுங் கோழியையும் பலியிடுகிறார்கள். ஐயோ! ஆடுங் கோழியும் என்ன தப்பு செய்தன? சனங்கள் தெய்வத்தின்மேல் உண்மையும் உறுதியுமுள்ள பக்தியுடையவர்களானால், என் தெய்வமே! என் பையன் சௌக்கியமடைவானானால் உனக்கு என் காதின் முனையை அல்லது விரலின் முனையையாவது வெட்டித் தருகிறேன். பிறகு, நீ அதனை வளரச் செய்வாய் என்று பிரார்த்தனை செய்து கொள்ளாமல், யாதொரு தவறுஞ் செய்யாத ஆட்டையுங் கோழியையும் பலி யிடுகிறார்களே எவ்வளவு மதியீனம்! இன்னும் பல அற்ப காரியங்களிலும் வாயில்லாப் பிராணிகளைப் பலியிடுகிறார்கள். சிலர் பாம்புப் புற்றுக்கு முட்டை

யையும் பாலையும் ஊற்றுகிறார்கள். இதென்ன அர்த்தங் கெட்ட வேலை. இவ்வாறு வாயில்லாப் பிராணிகளைக் கொல்லும் வழக்கம் என்ன வழக்கமையா வென்று கேட்டால் இது எங்கள் குடும்ப வழக்கம் என்று சொல்லுகிறார்கள். ஆசாரங்களும் சடங்குகளும் வழக்கப் பழக்கங்களும் கொடிய பாவச் செயல்க ளல்லவா? அரசே! யோசித்துப் பாருங்கள். இப்படி ஒருவர் ஒருவரைப் பார்த்தே அவ் வித பாவ காரியங்களைச் செய்யத் தலைப்படுகிறார்கள். அவ்வாறு பிராணிகள் விஷயத்தில் இரக்க மற்ற வன்னெஞ்சர் ஆட்டையுங் கோழியையும் பலி யிடும்போது அவை,

'உங்கள் மக்களும் நீங்களும் நோய்பட
எங்கள் மக்களும் நாங்களும் என் செய்தோம்
எங்கள் மக்களும் நாங்களும் போம் வழி
உங்கள் மக்களும் நீங்களும் போவிரே'

என்று சொல்லிக் கதறி அழுகின்றன.

அரசே! பிரார்த்தனை செலுத்துபவர் ஆட்டைப் பலியிடுங் காட்சியைச் சொல்லுகிறேன் கேளுங்கள். எந்தத் தெய்வத்திற்குப் பலியிடப் போகிறார்களோ அந்தத் தெய்வத்திற் கெதிரே ஆட்டைக் கொண்டு வந்து நிறுத்தி, அதன் தலையில் தண்ணீரை யூற்றி நெற்றியில் மஞ்சளையுங் குங்குமத்தையும் அப்பிப் பூமாலை சூட்டிக் கற்பூர தீபங் காட்டுகிறார்கள். அவ் வாயில்லாப் பிராணி உடுக்கை சத்தத்தையும், சிலம்பின் சத்தத்தையும், பம்பையின் சத்தத்தையுங் கேட்டு மிகவும் பயந்து, தன்னை வெட்டப் போகிறார்களென்று தெரிந்தோ தெரியாமலோ அம்மா! அம்மா! வென்று கத்துகிறது. உடனே கொலைகார பூசாரி நீண்டு வளைந்த பட்டாகத்தியால் அதன் தலை வேறு, முண்டம் வேறாகும்படி வெட்டி வீழ்த்துகிறான். அக்காட்சி மிகவுங் கோரமான காட்சியாகும். அவ்வாடு அம்மா வென்று கத்தும் போது அச் சத்தத்தைக் கேட்டு அப்பிராணி கொல்லப்படுவதைத் தடுக்காமற் போனவன் கதி என்னவாகிறது?

'அம்மா வென அலறிட ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானிட ரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ் சத்தங் கேட்டகன்ற மாதவற்குப்
பொய்ம்மா நிரய மென்றால் புசித்தவர்க் கென் சொல்லுவதே'

என்று தரும நூல் கூறுகின்றது. அரசே! இன்னும் இத்தகைய துராசாரங்களும் ஆபாசமான சடங்குகளும் துர்வழக்கங்களும் சனங்களுக்குள்ளே நடந்து வருகின்றன. அவற்றை எண்ண முடியாது; எழுத வேண்டுமானால் ஏட்டில் அடங்காது. அவற்றைக் கேட்க உங்களுக்கும் அவகாச மிராது. எனக்கும் சக்தி போதாது. இத்தகைய குருடருக்குத் தெய்வந்தான் கூலி கொடுக்க வேண்டும்.

தீனிப்பை

(டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்)

தீனிப்பையிலிருந்து குடலுக்குச் செல்லும் வழியில் டூடினம் என்னும் ஒரு கருவி இருக்கின்றது. இக் கருவியில் இரணம் ஏற்படில் வயிற்றுவலி உண்டாகும். இதனையும் குன்ம நோய் என்று சொல்லலாம்.

சுவாசப்பை குவிந்து விரியும்போது தீனிப்பையும் குவிந்து விரியும். தீனிப்பை குவிந்து விரிதலால் தீனிப்பையில் காற்று உண்டாகி அங்கிருக்கும் வஸ்துக்களைத் தள்ளிக்கொண்டு குடல்களில் நுழைந்து மலப்பையில் வந்து ஆசனத் துவாரத்தின் வழியாய் வெளிப்பட்டு விடுகின்றது.

இப்படித் தீனிப்பையில் உண்டாகும் காற்றானது நிமிடம் ஒன்றுக்கு ஒன்றின் பின் ஒன்றாகக் கடலில் வரும் அலைகளைப்போல் இருபது தரம் ஏற்படுவதினால் தீனிப்பையிலிருக்கும் ஆகாரவகைகளோடு கலந்து புசித்த சிறு கற்களும் குடலில் நுழைந்து மலப்பையில் வந்து சேர்ந்து வெளிப்பட்டுவிடும். சில சமயங்களில் அக் கற்களானவை குடல் ஓரங்களில் பிடித்துக்கொள்ளுமானால் குடல் புண்ணாவதுடன் ஒவ்வொரு அலையாகிய காற்றின் பிரவேச காலத்தில் குடலுக்குள் செல்லும் மலம் கல்லின்மேல் உறைந்தால் வலி காணும். இவ்வலியை அப்பெண்டிசிட்டி எனவும் பக்க சூலை எனவும் கூறுவர்.

இந்நோய் கண்டவர்கள் வலியைத் தாங்காமல் புரண்டு அழுவதைக் காணும் மக்கள் மனம் பரிதாபப்படும். இதன் விவரத்தைக் குடலைப்பற்றி எழுதும்போது விரிவாக எழுதலாம்.

தீனிப்பையில் உள்ள ஆகாரத்தின் மேல் உஷ்ணம் அதிகப்பட்டு பித்தம் அளவுக்குமேல் வந்து சேருமானால் ஏப்பமும் வாந்தியும் காணும்.

இதனைப் பித்த உப்பரி நோய் என்றும், பித்தவாயு என்றும் கூறுவர். பித்தவாயு என்னும் நோயைப் பல பிரிவாகப் பிரிக்கலாம். இருதயவலியையும், வயிற்றுவலியுடன் உப்பலையும் பித்தவாயு என்றே சொல்லுவர்.

தீனிப்பையில் போய்ச் சேரும் ஆகாரமானது அன்னக் குழல் மூலமாக அன்னகோசத்திற் போய்ச் சேருகிறது. அங்கு ஜாடராக்கினி (காஸ்டிரிக் ஜூஸ்) என்னும் திரவ பதார்த்தம் அதில் கலக்கிறது. அதனுலேயே உண்ட ஆகாரம் மிருதுவாகின்றது. அதன்பின் பித்தப் பையி லிருந்து பித்தம் துளித் துளியாக மாறி மாறி வந்து விழுந்து ஆகாரத்தை ஜீரணிக்கச் செய்கின்றது. ஜீரணித்த ஆகாரமானது திரவ பதார்த்தத்தை யொத்ததாகின்றது. ஜீரணத்திற்கு வராத சில ஆகாரங்களும் குடலுக்குள் பிரவேசிக்கும். ஆனுல் அவை குடலிலும் ஜீரணமாகி விடலாம்.

நாம் உட்கொள்ளும் ஆகாரங்களில் சதையை வளர்க்கக் கூடியதும், உஷ்ணத்தைத் தாக்கூடியதும், இரத்தத்தைப் பெருக்கக் கூடியதும், எலும்புக்கு உப்புச் சத்தை உண்டுபண்ணக் கூடியதும் எண்ணெய்ச் சத்தைப் பெருக்கக் கூடியதுமான பல ஆகாரங்கள் உள.

ஆகவே மக்கள் இவைகளே உத்தேசித்தே வெண்ணெய், நெய், பால், தயிர், காய் கறிகள், முட்டை, கிழங்கு வகைகள் முதலானவைகளேச் சேர்த்து ஆகாரத்தோடு புசிக்கிருர்கள்.

நாம் உட்கொள்ளும் ஆகாரமானது தீனிப்பையில் கொஞ்சம் குறைவாகவே இருக்க வேண்டும்.

ஆகாரத்தை மென்று தின்பதால் உமிழ்நீர் கலந்து தீனிப்பைக்குச் செல்லும். உமிழ்நீர் கலந்த ஆகாரம் சீக்கிரம் ஜீரணமாகும். ஆகாரம் உண்டபின் 24 மணிநேரம் கழிந்தால் உண்ட ஆகாரம் பூராவும் ஜீரணமாகிவிடும். எனவே நாள் ஒன்றுக்கு ஒருதரம்தான் ஆகாரத்தைப் புசிக்க வேண்டும். அதை யறியாமல் 4 மணி நேரத்திற் கெல்லாம் போட்டடைத்து வருவதால் பழக்கத்திற்கு வந்துவிடுகின்றது. அத்தகைய பழக்கமுடையவர்களுக்கு 4 மணிக்கு ஒரு தரம் பசி யுண்டாகின்றது.

நாலு மணிக்கு ஒரு தரம் உண்பவர்கள் பலவித நோயால் வாடுவர். பலயீனமாகவும் காணப்படுவர். அத்தகையோர்களுக்கு அற்ப ஆயுசும் காணப்படும். எனவே 24 மணி நேரத்திற்கு ஒரு முறை சாப்பிடுவதே தேக ஆரோக்கியத்திற்கு மேலானது. இத்தகையோர்களுக்குக் குறைந்த அளவில் மலம் தள்ளும். இவர்கள் பேதிக்குச் சாப்பிடவேண்டிய அவசியம் ஏற்படாது. இவர்களேப் பசிமந்தம், பித்தம், சோம்பல், வயிற்றுவலி முதலானவை பற்ற மாட்டா.

" மீனுட்சி " பிரஸ், 31, வைத்தியநாத முதலி வீதி, சென்னே.

அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷச் சுரத்தினலாவது அல்லது வேறு எந்த சுரத்தினலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வ மெனவே காட்டும்.

இது சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசி யுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல்வயோதியர் வரை ஆண்பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அநுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினுல் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானுலு மாவேணுதலால் அதை யனுசரித்து அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா !

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்கத் திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினுல் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கு அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்,

20-6-30, கண்ணுபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்கு மாதம் சாப்பிடக்கூடிய மருந்து விலை அணு 12.

தபால் கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளவும்.

சஞ்சீவிச் சூரணம்

இச்சூரணம் ஒரு அரிசி எடை எடுத்துக்கொண்டு காலை மாலைகளில் தேனில் உட்கொண்டு வந்தால், மூலத்தில் காணும் பவுத்திரம் என்னும் புண், அஜீரணம், குன்மம், பித்த சுரம் இவைபோம்.

இம் மருந்து முக்கியமாய் பாலிய வயதுடையவர்களுக்கு இரவில் தானாக ஸ்கலிதமாகும் இந்திரியத்தைத் தடைப்படுத்துவதில் நிகரற்றது.

இவ் வியாதியை ஒரு மருந்தும் குணப்படுத்துவது கிடையாது. இவ் வியாதியால் பெருத்த கெடுதலும் சம்பவிப்பது இல்லை என்றதால் அநேகர் பராமரிக்கையாய் இருக்காதீர்கள்.

ஸ்கலிதத்தின் கொடுமையானது நாளடைவில் பலயீனத்தை உண்டு பண்ணி கைகால் அசதி, சோம்பல், நித்திரை இவைகளால் துன்புறுத்தப்படும்.

வெண்ணெய் அல்லது நெய்யில் ஒரு அரிசி எடை சாப்பிட குணமாய் விடும்.

குழந்தைகளுக்குக் காணும் மாந்த சுரம், வயிற்றுக் கழிச்சல் இவைகளுக்குத் தேனில் பாதி அரிசி எடை காலை மாலையில் கொடுக்க நிவர்த்தியாகும்.

குழந்தைகளுக்குக் காணும் பால் கட்டி என்னும் கொடிய வியாதியை இவ்வொரு மருந்தே கேட்கின்றது. நானும் பல இங்கிலீஷ் டாக்டர்களும் பல இடங்களிலும் பல மருந்துகளிலும் ஆராய்ந்து பார்த்து கடைசியில் இம் மருந்து கிடைக்கப்பெற்று அநேக குழந்தைகளைக் காப்பாற்றப்பட்டது.

சென்னையில் காலட்சேபம் செய்யும் பன்னிபாய் என்னும் மாதின் வீட்டுக் குழந்தைக்கு லீவர் என்லார்ஜ்மெண்ட் என்னும் பால் கட்டிக்கு இம்மருந்து சஞ்சீவியைப்போல் உபயோகப்பட்டது. கட்டி கரைந்து விட்டது.

கங்கிபட்டி சம்பத்து செட்டியார் எழுதியது :

பால்கட்டிக்குக் கொடுக்கும் கறுப்புச் சூரணம் கொடுத்தனுப்பவும். எப்படியும் அந்தச் சூரணம் எங்களுக்குக் கையிருப்பு வேண்டும்.

சம்பத்து செட்டியார்.

ஐயா, நான் 4 குழந்தைகளைப் பால்கட்டியால் பரிகொடுத்தேன். இந்த குழந்தைக்கும் பால்கட்டி என்றவுடன் திகிலடைந்து பலரை விசாரித்து தங்கள் அருமை வாய்ந்த பஸ்பத்தின் குணத்தைக்கேட்டு தங்களை நாடி சிகிச்சை பெற்றேன். தங்கள் மருந்தால் குழந்தை பூரா குணமடைந்தது. முன்னமேயே எனக்குத் தெரிந்திருந்தால் என் குழந்தைகள் ஒன்றுகூட மரண மடைந்திருக்காது. என்போல் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். தங்கள் மருந்தை வெளிப் படுத்தினால் பெரும் புண்ணியம் கிடைக்கும்.

ஸ்ரீனிவாசாச்சாரி, B. A., B. L. வக்கீல்.

குழந்தைகளுக்கு அரை அரிசி எடை தேனில் இழைத்து மூலைப் பாலில் கரைத்து காலை மாலைகளில் கொடுத்துவர மேல்சொன்ன நோய்கள் நீங்கும். தாய்மார்களுக்குப் பத்தியமில்லை. குழந்தைகளுக்கு மலம் தள்ளும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 3.

சிவப்பிரகாச ஜன்னித் தைலம்

நம் தேசத்தில் பாலியத்தில் மோகத்தினாலும், தேகவலிமையினாலும், நாள் கிழமை பாராமல் ஸ்நானம் செய்து புணரும் ஸ்திரி புருஷர்களுக்கு உண்டாகும் ஒரு தலைநோய் கழுத்து நரம்பு வலி முதலிய வியாதிகளுக்கு இந்தத் தைலம் மிகவும் உபயோகமானது.

உபயோகிக்கும் விதம்:—இந்தத் தைலத்தைத் தலையில் தடவி இரண்டு நாளைக் கொருதரம் ஸ்நானம் செய்து வரவும். ஸ்நானம் செய்தவுடன் ரசம் சாதம் சாப்பிட வேண்டும். இப்படி 2, 3 ஸ்நானம் செய்வதற்குள் தலைவலி நின்று விடும். வேறு பத்தியம் கிடையாது.

5—பலம் கொண்ட எண்ணெய் விலை ரூபா 5—0—0

வி. பி. தபாற் கூலி பிரத்தியேகம்.

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில்சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புறுக்கி

நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

ஆர். சடகோபாச்சாரியார், பி. ஏ., பி. எல். ஐகோட் வக்கீல் என்ன எழுதி யிருக்கின்றார்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6—மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கிலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக்கொடுத்துவருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும் சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேக்கியத்தை 1 ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும் இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள் வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M.C. நஞ்சுண்டராவ். B. A., M. B. & C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்தபிறகு ‘டனுக்கு’ என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து

நன்ருக பலத்து இருந்தது. இப்போது எனக்கு கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாச்சாரியார். B. A , B. L.

District Munsiff Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A. B. L. District Munsiff Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தப் பாண்டு, பித்த சோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் விக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்திலாவது வேறு எந்த லேக்கியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கி விடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கைடிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1—க்கு ரூ. 3.

எனதன்புள்ள டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: எனது மூத்த குமாரத்திக்குத் தாங்கள் கொடுத்த அயக்காந்த செந்தூரம் கொடுத்ததில் கை கால் வீக்கம், கண்ணில் இரத்தமில்லாமல் வெளுத்திருந்தது இப்பொழுது நீங்கி இருக்கின்றது. உப்பில்லாப்பத்தியம் மூன்று நாளும் வறுத்த உப்பு, சுட்டபுளி சேர்த்து பத்தியம் மூன்று நாளும் தீர்ந்துவிட்டது. இனிக் கூழ்ப்பாண்ட லேகியத்துடன் சேர்த்துப் பத்தியமில்லாமல் சாப்பிடலாம் என்ருல் இந்தக் கடிதம் கண்டவுடன் 1 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. மூலமாய் அனுப்பி வைக்கவும்.

கிருஷ்ணசாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.

சிவப்பிரகாச பற்பொடி

உலகில் அநேகவித பல்பொடிகள் கிளம்பி உலவி வருவதை உணர்ந்திருப்பீர்கள். நமது சிவப்பிரகாச பல்பொடி பல வருஷங்களாகப் பலரால் உபயோகிக்கப்பட்டும், அநேக காட்சி சாலைகளில் பொன், வெள்ளி முதலான பரிசுகள் பெற்றும் விளங்கி வருவதை அறிவீர்களாகவும். நகரத்தார்கள் சிவப்பிரகாச பல்பொடியைத் தவிர வேறு பல்பொடியை உபயோகிப்பது கிடையாது.

தற்சமயம் பல போலிப் பல்பொடிகளைத் தயார் செய்து நாட்டு டின்களில் போட்டு சிவப்பிரகாச பல்பொடி என்று போலி விளம்பரம் செய்து விற்கப்படுகின்றது. உண்மையாக எங்களால் தயாரிக்கப்பட்ட பல்பொடியின் டப்பி அழகிய பொம்மை அமைந்த சொர்ண வர்ணமுள்ள ஜெர்மன் டப்பியில் வரும் சிவப்பிரகாச பல்பொடியையே பார்த்து வாங்குங்கள்.

சிவப்பிரகாச பல்பொடி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தும் சிலர் எங்களிடம் கமிஷனுக்கு வாங்கி விற்றவர்கள் சில மாதமாக கண்டதை டப்பியில் நிரப்பி எங்கள் பெயரால் விற்றுவருவதை உலகமுணர தெரிவிக்கின்றோம்.

நன்மதிப்புகள்

ஐயா, இக்கடிதம் கண்டவுடன் சுணங்காமல் 100 டஜன் பல்பொடி கள்ளிப் பெட்டியில் வைத்து அனுப்பவும்; இவ்விடம் பல்பொடி அனேகர் வற்புறுத்துவதால் விரைவில் அனுப்பினால் நலம்.

வேலாயுதம் செட்டியார்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு V. ஆள்வார் செட்டியார் எழுதுவது :- தங்களுடைய பல்பொடியைத் தவிர வேறு இங்கு பிடிக்கவில்லை. பல்லில் இரத்தம் வருதல் நின்று விட்டது. வாய்க்கு ஆரோக்கியமாய் இருக்கின்றது.

பல் வெள்ளையாய் துலங்குகின்றது. நான் தென்னிந்திய ரயில்வேயுக்கு எங்கள் சாமானுடன் இதையும் சப்ளை செய்ய யோசனை. 100000 டின் மாதா மாதம் அனுப்பவும்.

இப்படிக்கு,

V. ஆள்வார் செட்டியார், Hoe & Co,

இன்னும் இத்தகைய கணக்கற்ற கடிதங்கள் குவிந்து கிடக்கின்றன.

12 டசன் கொண்ட குரோஸ் விலை 13—0—0

டின் 1-க்கு விலை அணா 2—0—0

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 - நிமிஷத்தில் தலைவலி நீங்கும். தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகைய சுரமானுலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை 8.

ஸ்பிளினே பில்ஸ்

இம் மாத்திரையில் அயம், காந்தம், நவாச்சாரம் வெடியுப்பு, சுரப்பட்டை ஆகிய பல அரிய மருந்துகள் சேர்ந்துள்ளன. சென்னையில் சகலரும் இம் மருந்தை சுரக்கட்டி கறைய வாங்கி உபயோகிக்கின்றுர்கள்.

அநேக டாக்டர்களும் இதை வாங்கி வைத்துக் கொண்டு உபயோகிப்பது இதன் பெருங்குணத்தைக் காட்டுகின்றதால் சுரத்தால் பீடிக்கப்பட்டவர்களும் இரத்தக்குறைவால் சோகை முதலான பாண்டு ரோகிகளும் பலஹீனர்களும் இம்மாத்திரையை உபயோகித்தால் பலமடைவார்கள்.

சுரக்கட்டி எத்தகைய அளவு பெருத்திருந்தாலும் இம்மாத்திரையால் கறைந்து விடும்.

சுரம் அடிக்கும் காலத்தில் இம்மாத்திரையைக் கொடுக்க சுரம் நீங்கும். குழந்தைகள் முதல் சகலரும் தாராளமாய் இம்மாத்திரையைக் கையாளலாம்.

ஏ. **இரங்கநாதம் அண்டு கோ, கால்பாதேவிரோட், பாம்பே.**

எழுதுவது:—ஸ்பிளீனே பில்ஸ் என்னும் சுரக்கட்டி மாத்திரை எனக்குச் சஞ்சீவியாக இருக்கின்றது. பம்பாயில் இதைப் பரப்பினுல் வெகு ஜனங்களுக்கு உபகாரமாகும். இவ்விடத்தில் சுரக்கட்டியும் விஷ சுரமும் அதிகம்.

நான் இதற்கு ஏஜண்டாக இருக்கப் பிரியப்படுவதால் உடனே பதில் எழுவதுடன் 50 மாத்திரை புட்டி ஒன்றும் வி. பி. யில் அனுப்பவும்.

குள்ளபள்ளி நாராயண செட்டி,

கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, சென்னை.

ஐயா, உடனே ஸ்பிளீனே மாத்திரை டப்பி ஒன்று அனுப்பவும். இம்மாத்திரை எங்கள் குடும்ப ஔஷதமாய் இருக்கின்றது.

50 மாத்திரையின் விலை ரூபா 2—8—0

கெர்ப்ப நிராஞ்சனி

ஸ்திரீகளுக்கு வீட்டுத் தூரமாகும் பொழுது வயிற்று வலி உண்டாவதற்குக் காரணம் கெர்ப்பப்பையில் உள்ள கல்மிஷம் அல்லது சதை வளர்ந்திருத்தலால் பூச்சிகளின் உபத்திரவம் சதை பிரளல் முதலியனவாம்.

2. இதனுல் உண்டாகும் பாதை சொல்ல முடியாததாம். அஃதல்லாமலும் கெர்ப்பம் தரியா திருத்தல், கை கால் ஓய்ச்சல் பலயீனம் முதலியனவாம்.

3. இதைத்தான் இங்கிலீஷில் டிஸ்மனேரியா என்பார்கள். இதற்கு மருந்து இல்லையா என்ருல், உண்டு.

4. மருந்து உண்டு என்ருல் உலகத்தில் இந்த வியாதியால் அநேகர் கஷ்டப்படுகின்ருர்களே அது என்ன காரணம் என்ருல், தக்க ஔஷதம் உபயோகிக்காததேயாம்.

5. ஆனுல் உங்கள் கெர்ப்ப நிராஞ்சனி என்னும் மருந்து தக்க மருந்தோ வென்ருல், அதைச் சொல்லவேண்டியதில்லை. இதை வாங்கி உபயோகித்தவர்களைச் சற்று விசாரியுங்கள். அல்லது ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

6. வீட்டுத் தூரம் ஆகும் நாளில் உண்டாகும் வயிற்றுவலி எத்தனை வருஷ காலமாய் இருந்தாலும் சரி இந்த மருந்தை உபயோகித்த மாத்திரத்தில் நீங்கிவிடும்.

7. உபயோகிக்கும் விதம்:—வீட்டுத் தூரமாகும் தினத்தில் காலையில் ஒரு மாத்திரை, உச்சியில் ஒரு மாத்திரை, மாலையில் ஒரு மாத்திரை இப்படி மூன்று மாத்திரை வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிடவும்.

8. வேண்டுமானுல் மறு மாதமும் இதேமாதிரி சாப்பிடவும். பத்தியம் கிடையாது. இரவில் உச்சியில், மாலையில் தூரமானகாலத்தில் 6—மணி நேரத்திற்கு ஒரு மாத்திரையாகச் சாப்பிடவும்.

6—மாத்திரை அடங்கிய டப்பி 1—க்கு ரூபா 1—8—0

சிவப்பிரகாச கோரோஜனை மாத்திரை

இம் மாத்திரையைக் குழந்தைகளுக்கு முலைப்பாலில் காலை மாலைகளில் கொடுத்துவர மந்தம் நீக்கி மலம் போக்கி, சுரம், சலுப்பு முதலானவைகளை நிவர்த்தி செய்யும் மாந்த சுரம் அல்லது (நிமோனியா) சுரம் கண்ட குழந்தைகளுக்கு ஆடா தோடா, முசு முசுக்கை, நிலத் துளசி, கஞ்சாங்கோரை கரிசலாங்கண்ணி, பொடுதலை, நொணயிலை,

நொச்சியிலை, ஈயப்பொடி ஆகிய இவைகளில் வகைக்கு 2 பை எடை எடுத்துக்கொண்டு புட்டிட்டு ரசம் பிழிந்து ரசம் ஒரு பாலாடை, கோரோசனை மாத்திரை ஒன்று சேர்த்துக் காலையில் கொடுத்து விட்டு மாலையில் பச்சிலைகளின் திப்பியை சட்டியிலிட்டு வறுத்து சாம்பலாக்கிச் சிறிது சலம்விட்டுக் காய்ச்சி ஒரு பாலாடைக் கஷாயத்தில் ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க இரண்டு நாளில் கபவாத சுரம் என்னும் கொடிய மாந்த சுரம் நீங்கும்.

குழந்தைகளுக்கு மலம் போவதற்காகத் தாராளமாய்ப் பிறந்த நாள் முதல் உபயோகிக்கலாம்.

பெரியோர்கள் சலுப்புள்ள காலத்தில் வெற்றிலையுடன் உட்கொள்ள சலுப்பு நீங்கும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

சிவப்பிரகாச சுகபேதி மாத்திரை

(1) மருந்தீடு அல்லது இடுமருந்து முறிய மிதி பாவல் ரசம் தேங்காய்ப்பால் இரண்டும் சமனாய்க் கலந்து ½ ஆழாக்கு எடுத்துக் கொண்டு அதில் ஒரு மாத்திரையை வைத்துக் காலையில் சாப்பிடவும்; பத்தியம் கிடையாது.

(2) ஒத்தைக்கால் வாதத்திற்கும், நெரிகட்டின சுரம் வருவதற்கும் ஒரு தோலா ஆமணக்கின் இலை ¾ தோலா ஏலக்காய், 1-(?தாலா வெள்ளகுரு, ½ தோலா சீரகம், 1 விராகனிடை குங்குமப்பூ இவைகளைப் பால்விட்டு அறைத்து அதில் ஒரு மாத்திரையை வைத்து மூன்று நாள் சாப்பிடவும்.

(3) சளிக்கும் இருமலுக்கும் அதோடு சம்பந்தப்பட்ட சுரத்திற்கும் புளியங் கொட்டைப் பருமன் இஞ்சியும் அவ்வளவு ஓமமும், இரண்டு வெற்றிலையும் சேர்த்துக் கொஞ்சம் வெந்நீர் விட்டுத் தட்டிப் பிழிந்து அதில் ஒரு மாத்திரையை இழைத்துக் கொடுக்க வியாதி சுகமாகும். பத்தியம்-குழந்தையின் தாயார் மீன் கருவாடு முதலிய உஷ்ண பதார்த்தங்கள் உட்கொள்ளக் கூடாது.

இம்மாத்திரையில் 2 முதல் 4 வரையில் காலையில் வாயில் தூள் செய்து போட்டுக் கொண்டு ஜலம் அல்லது காபி சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்தபின் ரசம் சாதம் சாப்பிடவும். சுகமாய்ப் பேதியாகும். காலையிலும் சாப்பிடலாம். பேதி அதிகமானல் கொஞ்சம் வெந்நீர் விட்டுச் சாதம் சாப்பிட நின்றுவிடும். குழந்தைகளுக்கு 1 முதல் 2 வரை கொடுக்கலாம். பத்தியம் சூப்பு, கத்திரிக்காய், முருங்கக்காய், தொவரை, வாழைக்கச்சல், அவரைக்காய் இவைகள் சேர்க்கவும்.

முக்கிய கவனிப்பு:—இம்மாத்திரை சுகமாகவும் வயிற்றுக் கடுப் பின்றியும் பேதியாவதோடு உன்னத குணத்தோடு கூடினது. குறைந்த விலையைக் கொண்டு விற்பது பரோபகாரமே.

புட்டி 1—க்கு விலை அணு 0—6—0

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச் சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ் துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக் குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட் சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

சில அபிப்பிராயங்கள்

II.

லக்ஷிமி நரசிம்மராவ், பார்ப்பர்த்திதார் (திருப்பதி தேவஸ்தானம்)

எழுதுவது :—

எனது மனைவியின் நேத்திரம் சிவந்து பார்வைபோய் நீர் வடிந்து கொண்டிருந்தது. என் தம்பியின் மனைவி நேத்திரமும் பூ விழுந்து பார்வை நீங்கி யிருந்தது. இவ்விருவர்களின் கஷ்டத்தைப் பற்றிச் சென்னை காசிச்செட்டி தெருவி லிருக்கும் ஜி. ஆர். கிருஷ்ண சாமி செட்டியாரிடத்திலும், நேஷனல் பாங்கி தலைமை குமாஸ்தா

சுந்தர ராமாஞ்சலு நாயுடுகாரு இடத்திலும், வி. பெருமாள் செட்டி கம்பெனி சொந்தக்காரர் ஆழ்வார் செட்டியாரிடத்திலும் சொல்லித் துயருற்றபோது அம்மூவரும் சென்னைக்கு அனுப்பும்படிக் கட்டளை யிட்டனர். அதன்படியே திருவாளர் ராவ் சாகிப் தர்மலிங்க முதலியார் அவர்களின் சகாயத்தால் பட்டணம் சேர்ந்து டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் காட்டினேம். அவர் என் மனைவிக்குத் தான் சிகிச்சை செய்வதாயும் என் தம்பி மனைவியைக் கண்ணாஸ்பத்திரிக்கு அனுப்பும்படியும் கட்டளை யிட்டார். அதுபோலவே நடந்துகொண்டதில், என் மனைவிக்கு தைலாமிர்தம் என்னும் தைலம் ஒரு புட்டி கொடுத்து, 4 நாளைக் கொருமுறை ஸ்நானஞ் செய்து வரச் சொன்னார். அதன்படி செய்ததில் 15 நாளில் கண் சிவப்பு மாறிப் பார்வையும் நன்றாய்த் தெரிந்தது. பிறகு 2 புட்டி தைலாமிர்தம் வாங்கிக்கொண்டு திருப்பதிக்கு என் மனைவி வந்து விட்டாள்.

என் தம்பியின் மனைவி ஒரு வருடமாகக் கண்ணாஸ்பத்திரிக்குப் போய், சிகிச்சை பெற்றுக் கடைசியாய்க் கண் பார்வை உண்டாகாது என அனுப்பிவிட்டார்கள். பிறகு இச் செய்தியை டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் சொல்ல அதைத் தான் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு புட்டி தைலாமிர்தம் கொடுத்து தலை முழுகச் சொல்லி, வேறொரு மருந்துப் பொட்டலம் கொடுத்துக் காட்டுக்களாப் பூவை முலைப்பாலில் ஊரவைத்து மருந்தையும் அதனுடன் கலந்து நாள்தோறும் கண்ணுக்குப் போட்டுவரச் சொன்னார். அதன்படியே செய்ததில் ஒரு மாதத்தில் கண் பார்வை பெற்று சுகமாக வாழ்கின்றாள். டாக்டர் அவர்களின் உதவிக்குத் திருப்பதி பெருமாள் அவருக்கு சகாயம் அளிப்பார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு நாராயணன் எழுதிக் கொண்ட நிருபம்.

நான் இங்கிருந்து தங்கள் பேருக்கு தைலத்துக்காக மணியார்டரில் அனுப்பிய ரூபாய் 15 கிடைத்ததும் எனக்கு அதிகச் செலவு ஏற்படாதபடி மனையப்பட்டி கதிரேசச் செட்டியார் அவர்கள் வசம் தாங்கள் அனுப்பிவைத்த தைலம் பாட்டல் 7-ம் வந்து சேர்ந்தது. அதன் செலவு ரூபாய் 1½-ம் கொடுத்து ஷை பாட்டல்களையும் வாங்கிக் கொண்டேன்.

தாங்கள் இதனல் எனக்கு அதிகச் செலவு எற்படாதபடி செய்த ஒரு உபகாரத்தையும், நன்றியையும் மறவாதிருக்க எப்பொழுதும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தங்களிடம் நானும் ஏராளமான தைலமும், மருந்துகளும் வாங்கி உபயோகித்து வந்திருக்கிறேன். அதனல் நற்குணங்கள் அடைந்திருப்பதோடு எனது இரண்டு வயது ஆண் குழந்தைக்கு மூக்கில் சதா நீர்வடிந்து கொண்டு வந்தது. தங்க

ளின் தைலம் தேய்த்து வந்ததிலிருந்து அவ்வித குற்றம் நீங்கி பூரண குணம் கிடைத்ததால்தான் தங்களுடைய தைலத்தையே வாங்கி எங்கள் குடும்பத்தில் நாங்கள் எல்லோரும் சதா பாவித்து வருகிறோம். இன்னும் எங்களுக்கு வேண்டியவைகளுக்குக் குணத்தை தங்களுக்கு எழுதி தங்கள் பாகமாக வேலை செய்துகொள்ள அன்பு வைத்திருக்கிறேன்.

ம கு. நாராயணச் செட்டியார்,
நச்சாந்துபட்டி புதுக்கோட்டை ஸ்டேட்.

அன்புள்ள ஐயா,

தைலாமிர்தத்தை நான் உபயோகப்படுத்திவருகின்றேன். மிக மேன்மையான குணம் கண்டிருக்கிறேன். ஆனல், அதன் முறை இன்னும் எனக்குப் பிடிபடவில்லை. தற்சமயம் தைலம் ஸ்நானம் செய்து கொண்டதினம் தூக்கம் இல்லாமலும், வெயிலில் ரொம்ப அலையாமலும், மோர் உபயோகப்படுத்தாமலும், ரசம், மரக்கறி கசாப்பு இவைகள் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறேன். இரவிலும் மேற் கண்டவிதமே செய்து வருகிறேன். இவைகள் சரிதானு அல்லது சரியில்லையா என்ற விவரம் தெரிவிக்கவேண்டுகிறேன்.

ராம. பி. சு. பழனியப்பன், 24, மார்கட் தெரு, நச்சாந்துபட்டி.

இதுபோல் எத்தனையோ கடிதங்கள் வந்து குவிந்து கிடக்கின்றன.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

இரண சஞ்சீவி

இம்மருந்தை சேத்துப் புண்ணுக்குத் தடவலாம், சொரி சிரங்குகளுக்குப் பூசினல் குணமாகும். முகத்தில் காணும் மேகப் பருவுக்குத் தடவ முக வசீகரத்தைத் தரும்.

ஆராத மேகப்புண், மேகப்படை இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினல் மூல இரணங்கள் ஆறிவிடும்.

இம்மருந்தால் மேகப்படை, ஊரல் படை, தேம்பல் படை, சொரி, சிரங்கு முதலான சகல இரணங்களும் தீர்ந்து விடுகின்றன.

இம்மருந்தை உபயோகிப்பதால் எரிச்சல் உண்டாகாது. உள்ளுக்குச் சாப்பிட்டாலும் கெடுதல் உண்டு பண்ணுது.

புட்டி 1-க்கு விலை 1—0—0

டாக்டர் அவர்களுக்குத் தெரிவிப்பது:—

தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியை எனக்கு ஏற்பட்டிருந்த மேக இரணங்களுக்கு உபயோகித்தேன். மூன்று நாளில் குணமாய் விட்டது. என்னுடைய இரண்டு கால்களிலும் இரணம் ஏற்பட்டுத் தொடையிலிருந்து பாதம் வரையில் நீர் வடிந்து கொண்டிருந்த இரணங்கள் ஆச்சரியமடையும்படி நீங்கினதைக் கண்டு ஆனந்தமடைந்தேன்.

கண்ணன், இராயபுரம் B. A.

கார்டோலின்

மக்கள் சுவாசக் குழாயிலுண்டாகும் வீக்கத்தினாலும், இரணத்
தாலும், சுவாசம் விடுவதற்கு ஆயாசப்பட்டும், இழுப்பு இருமலினால்

துன்பப்பட்டும் வாடி வருந்துகிறார்கள். ஆங்கிலர்கள் இவ்வியாதியை இரண்டுவிதமாகக் கொள்கின்றார்கள். அவையாவையெனில், பிரான் கயடிஸ், ஆஸ்தமா என்பவையாம். இந்தியர்கள் இதை எட்டுவித மாகப் பிறிக்கிறார்கள். ஈளை இருமல், காச இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம் என்பனவாகிய பெயர்களால் நோயைக் கணிக்கின்றார் கள். இந்நோயானது மழைக்காலங்களில் பெரும்பான்மையும், துன் பத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு அதிக வெப்பமான காலத்திலும் துன்பம் தருகின்றது.

இந்த நோயால் துன்பமடைவோர்கள் எத்தனையோவிதமான மருந்துகளை சாப்பிட்டும் நோய் நிவர்த்தி ஆகாமையால் மருந்து களில் நம்பிக்கை இழக்கின்றார்கள்.

வைத்தியர்கள் தங்களால் இயன்ற மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் குணமடையாமையைக் கண்டு இந்நோயானது கர்மத்தால் வந்ததெனக் கூறிவிடுகின்றார்கள்.

இத்தகையர்களின் மனதை மாற்றுவான் வேண்டியே நமது கார்டோலின் என்னும் மருந்து வெளிவந்திருக்கிறது. இம்மருந்தால் சுமார் 30, 40 வருடங்களாகக் கஷ்டப்பட்டிருந்த காசநோய் இருந்த அநேகர் சுகப்பட்டிருக்கின்றனர். அஸ்தமா இருமலானது எந்தநிலை மையில் இருந்தாலும் இம்மருந்தானது குணப்படுத்திவிடும். ஆஸ்தமா என்னும் சுவாச ரோகத்தால் துன்பப்படுபவர்கள் அவநம்பிக்கை யின்றி இம்மருந்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 10.

சென்னை பெரியமேட்டு கண்டிராக்டர் நா. கணபதி முதலியார், எழுதுவதாவது:—

அன்புள்ள, டாக்டர் மே மாசிலாமணி முதலியார் அவர்க **ளுக்கு,** தாங்கள் எனது குமாரனுக்கு ஏற்பட்டிருந்த அஸ்தமா வியா திக்குக் கொடுத்த கார்டோலின் என்னும் மருந்தை உபயோகித்ததி லிருந்து இழுப்பு இருமல் நின்றுவிட்டது. இப்பொழுது என்னுடைய மகன் சுகமாக இருக்கின்றான்.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

உ08533
சென்னை-600 008

சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ $\frac{1}{2}$ அணா, ஆக $5\frac{1}{2}$ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

வியாசம் எழுதுவோர்க்கு

4. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் கால தேச வர்த்தமானங்களுக்கொத்த பொருள்பற்றி ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும்.

கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் நிறுத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது ! !

ஜீவ இரகசியம்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் எழுதப்பட்ட 'ஜீவ இரகசிய' நூல் வெளியாகி விட்டது.

இது ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய முக்கியமான நூலாகும். இந்நூலில் சுகாதாரம், பிராணாயாமம், சூரிய ஒளியின் பயன், நித்திய விதிகளின் தத்துவம், மோட்சத்தின் இரகசியம், ஆயுளைப் பெருக்கும் மார்க்கம், யோக சாதனத்தின் உண்மைகள், சரீர நடை முதல் காரணம், நோய் வராது தடுக்கும் அனுஷ்டானங்கள் முதலான பல அரிய பெரிய நுட்ப விஷயங்களைத் தெளிவாக விளக்கியும் அனுஷ்டிக்கும் மார்க்கங்களைத் தெள்ளத் தெளிய படங்களுடன் காட்டியும் இருக்கின்றது. இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

கார்டோலின்

ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

ஈளை இருமல், சுவாச காசம், காச இருமல், மந்தார காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.

விலை புட்டி 1-க்கு ரூபா 10. விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.